[Date]

March 2025 FB Posts

Pattabi's FB posts of March 2025

pattabi raman
A MAN WITH BOOKS

march 2025 FB Posts Of Pattabi

march 1 2025

கடந்த சில ஆண்டுகளில் வலது அறிவுஜீவிகள் சாவர்க்கர் குறித்து சில ஆங்கில நூல்களை கொண்டு வந்துள்ளனர். விக்ரம் சம்பத் என்கிற இளம் ஆய்வாளர் இரண்டு பெரிய வால்யூம்களை கொணர்ந்தார்.

அடுத்து சுமார் 400 பக்க அளவிலான 'ஹிந்துத்துவாவின் தந்தை சாவர்க்கர்- உண்மை கதை' என்கிற நூலை வைபவ் புரந்த்ரே 2019ல் கொணர்ந்தார். இந்த வரிசையில் மூத்த ஆய்வாளர் அருண்ஷோரி 2025 ஜனவரியில் The New Icon - Savarkar and the Facts என்கிற ஆய்வு நூலை கொணர்ந்துள்ளார். விக்ரம் சம்பத்தின் ஆயிரக்கணக்கான பக்கங்களை முன்னர் படித்துவிட்டு என் எதிர்வினையை எழுதினேன். சிறு பிரசுரமாக இணையத்தில் கிடைக்கும்.

வைபவ் குறித்தும் அருண் ஷோரி குறித்தும் படித்த பின்னர் எழுத விருப்பம். அருண்ஷோரியின் worshipping false Gods- Ambedkar and the facts which have been erased நூலை நினைவு கூர்ந்துவிட்டு, அருண் ஷோரியின் சாவர்க்கரை எடுக்கலாம் என நினைத்தேன்.

அருண்ஷோரியின் அம்பேத்கர் 1997ல் வெளிவந்த ஒன்று. இதை 2012ல் ஹார்ப்பர் காலின்ஸ் ரூ 900க்கு மீளக் கொணர்ந்தனர். இணையத்தில் 684 பக்கம் படிக்க சிரமமாக இருக்குமே என்று கருதி தான் ஹார்ப்பரிடம் போய் ஏமாற்றமடைந்தேன். சில ஆண்டுகளுக்கு முன்னர் ஹிக்கிம்பாதம் அண்ணாசாலையில் பார்த்துவிட்டு வாங்காமல் வந்ததற்கு தண்டனை போலும். அப்போது ரூ600க்குள் என என் நினைவு. நான் சொல்வது தவறாகவும் இருக்கலாம். ஷோரியின் இந்த புத்தகம் கடுமையாக அம்பேத்கர் குறித்த விமர்சனமாக வந்த ஒன்று என்பதால், அப்போது பெரும் எதிர்வினைகளைக் கண்டது.

அம்பேத்கரின் அதிகாரபூர்வ சரிதை எனச் சொல்லி முழுமையாக அவரின் புகழுடன், பக்கம் பக்கமாக சாவர்க்கர் புகழையும் பாடிய தனஞ்செய் கீர் போலவோ, தற்போது டெல்தும்டே செய்துள்ளது போல critical appreciation வகைப்பட்ட ஒன்றல்ல ஷோரி செய்துள்ளது. முழுமையாக அவர் ஆய்வுக்கோணத்தில் அம்பேத்கரை expose

செய்யக்கூடிய எழுத்து. அருண் ஷோரி கருதும் இந்த நேர்மையை அவர் சாவர்க்கர் ஆய்வில் செய்திருக்கிறாரா என இனி தான் பார்க்க வேண்டும். பிரிட்டிஷ் பைல்கள், தேசிய ஆவணங்கிடங்கு காட்டப்படுமா எனப் பார்க்க வேண்டும்.

ஹார்ப்பர் காலின்ஸ் வெளியீட்டார்களிடம் ஏமாந்தேன் என சொல்லிக்கொண்டிருந்தேன். ரூ899க்கு அவர்கள் வெளியிட்ட நூலில் இறுதி 184 பக்கங்களை காணவில்லை. பெரிய பிராண்டு வெளியீட்டாளர்களே இவ்வளவு அநியாயம் செய்யலாமா என்கிற கேள்வி வருகிறது. மீண்டும் 500 பக்கங்களுக்கு பின்னர் 341-500 பக்கங்களை தைத்து வைத்துள்ளனர். Unfair trade. எவராவது அருண்ஷோரியின் அம்பேத்கர் நூலை வாங்கினால் , இதை செக் செய்து விட்டு வாங்க வேண்டுகிறேன்.

அருண் ஷோரியின் சாவர்க்கர் வந்ததால், அவரின் ஹார்ப்பர் காலின்ஸ் அம்பேத்கரைபார்க்க நேர்ந்தது.

1-3- 2025

march 3

மக்காலே நிலையானதும்- காந்தி நிராகரிக்கப்பட்டதும்..

கல்வியாளர்களில் பலரும் History of Education in Madras Presidency by S Satthianandhan நூலை வாசித்திருக்கக்கூடும். சத்தியநாதன் அவர்கள் எழுதிய இந்நூல் 1894ல் வெளியானது. அய்ரோப்பிய ஆங்கில கல்வி முறை ஆழமாக வேர் ஊன்றிய வரலாறாக இதைப் பார்த்துக்கொள்ளலாம்.

முற்கால இந்தியாவில் கல்வி என்பதிலிருந்து தொடங்கி அறிமுகத்தை வைத்துவிட்டு, கவர்னர் மன்றோ எடுத்த நடவடிக்கைகள்- அறிக்கைகள் 1822 வழியே , 1822-54, 1854-71, 1882 ஹண்டர் கமிஷன் வரை விரிவாக இந்நூல் உள்ளடக்கத்தை வைத்துக்கொண்டுள்ளது. 454 பக்கங்களை கொண்ட பெரிய நூல்தான். இணைய வழியில் படிப்பது சற்றுக் கடினமாக இருக்கிறது.

இந்நூலை புரட்டிக்கொண்டிருந்த போது ஆரம்ப பக்கங்களில் கிடைத்தது இத்தகவல். தரம்பால் பிரிட்டிஷார் வருவதற்கு முன்னரான இந்திய கல்வியை சிலாகித்து எழுதியிருப்பதை பலரும் அறிந்திருக்கக்கூடும்.

சத்தியநாதன், கவர்னர் மன்றோ 1822 களில் பல்வேறு கலெக்டர்கள் மூலம் பெற்ற டேட்டா ஒன்றை தந்துள்ளார். அதாவது 1854க்கு முன்னரான கல்வி என்கிற பகுதியில் இந்த விவரம் தரப்பட்டுள்ளது.

சொந்த உள்நாட்டு மக்கள் கல்வி முறை முயற்சிகளில் பொதுவாக தலையிடாமல் இருப்பது, அதே நேரத்தில் அவர்களிடம் காணப்படும் வறட்டுத்தனத்தில் நியாயம் இல்லையெனில் நிர்வாகத் தலையீட்டை செய்வது என்கிற நடைமுறை சார்ந்த அறிவுரைய மன்றோ கலெக்டர்களுக்கு தந்திருக்கிறார். அதாவது மெல்ல நுழைந்து வேர் பிடிப்பது.

அப்போது மதராஸ் ராஜதானியில் 1000 பேருக்கு ஒரு பள்ளி இருந்துள்ளது. 12498 பள்ளிகள் , 188650 மாணவர்கள்- இதில் பெண்கள் 4540.

தஞ்சாவூர் பகுதியில் மட்டும் மிக அதிகமாக 993 பள்ளிகள் இருந்துள்ளன. இதில் வேதபாடசாலைகளும் அடங்கும். பிரிட்டிஷாருக்கு முன்பு இருந்த அரசாங்கங்கள் கொடுத்த நிதி,

ஆங்காங்கே ஜமீன் தார்கள் கொடுக்கும் நிதியில் பள்ளிகள் நடந்துள்ளன.

இந்த 188650 மாணவர்களில் 42502 பிராம்மண மாணவர், 13561 முகமதிய மாணவர், வைஸ்யர் என 19669, பொதுவாக சூத்திரர்கள் என (இன்றுள்ள BC உபஜாதிகள் சொல்லப்படாமல்) 85400, பிற ஜாதிகள் என 27518 என விவரம் சொல்லப்பட்டுள்ளது. இந்த பிற என்பதில் இன்றைய பட்டியல் இனப் பிரிவு காட்டப்பட்டுள்ள சாதிகள் எவரேனும் இருந்தனரா எனப் பார்க்க வேண்டும். Non castes என குறித்துள்ளனர்.

இங்கு வேறு ஒன்றை குறிப்பிட்டுள்ளனர்

Every seven caste and non- caste Hindu pupils, one is a Brahmin, although Brahmin population is only one- twentieth of the native population.

மற்ற பிரிவினர் மக்கள் தொகையில் எவ்வளவு சதம் என அறிந்தால், ஒவ்வொரு பிரிவிலும் எந்த அளவு கல்வி போனது என்கிற விகிதத்தை அறியலாம். அப்போது 1.5 கோடி மக்கள் இருந்தால், அதில் 5 சதம் பிராமணர் என எடுத்தால் 7.5 லட்சம் பிராமணர்களில் 42502 பேர் பள்ளியில் இருந்துள்ளனர் என அறிய முடியும். அதே போல் மற்றவர் விவரம் கிடைத்தால் பள்ளி சென்றோர் விகிதத்தை அறியமுடியும்.

அதேபோல் வாத்தியார்கள் எவர் என்பதற்கு ஒரு வரி குறிப்பு கொடுத்துள்ளனர்

One in every four Hindu pupils under instruction was a Brahmin.

அடுத்து மன்றோ மூலம் அறிய வருவது , இந்த indigenous school education quality பற்றியது. இவர்களுக்கு சரியான தகவல் இல்லை என ஏற்கிறார்கள். பெல்லாரி கலெக்டர் மட்டும் தெலுங்கு கன்னடத்தில் புத்தகங்கள் இருப்பதாகவும், அவை பேச்சு வழக்கிலிருந்து மாறுபட்டு இருப்பதாகவும் சொல்லியுள்ளார். இந்த வரிகளும் காணப்படுகின்றன

The alphabets of two dialects are the same, one who reads one , but not understand the other என எழுத்து முறை ஒன்றாக இருந்தாலும் புரிந்து கொள்வது அவரவர் மொழியில் தான் முடிந்துள்ளது. கிளிப் பிள்ளை போல் பாடல்கள் ஒப்பித்தல் பயிற்சி தெரிகிறது. இங்கு வரும் குறிப்பு

He makes no addition of his stock of useful knowledge and acquires no moral impressions. Cultivation of memory என்பது தாண்டி ஏதுமில்லை என்கிற புரிதலுக்கு பிரிட்டிஷ் அதிகாரிகள் வருவதைக் காண்கிறோம். பாடசாலைகளில் வேத மந்திரங்களை பல ஆண்டுகள் படிக்கிறார்கள் எனவும் சொல்லப்பட்டுள்ளது.

மாணவர்களை கட்டி வைத்து அடிப்பது உட்பட கடும் தண்டனைகள் இருந்ததையும் சொல்கின்றனர். பள்ளிகள் காலை 6 மணிக்கே திறக்கப்பட்டதை, மணலில் அல்லது ஓலைகளில் எழுதியதை சொல்கின்றனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மன்றோ இரண்டு Principal Schools தொடங்க 1826 மார்ச்சில் ஆணை போடுகிறார். அங்கு ஆசிரியர்க்கு கல்வி முறைகள் சொல்லித்தரப்படும் என்கின்றனர். முஸ்லீம்களுக்கு தனியாக, இந்துக்களுக்கு தனியாக என பிரிக்கின்றனர். கலெக்டருக்கு கீழே 15 தாசில்தார் பொறுப்பில் தலா ஒரு பள்ளி எனச் சொல்லி , ஆண்டிற்கு ரூ 50 ஆயிரம் நிதி ஒதுக்க முடிவு செய்துள்ளனர்.

போர்டு அமைத்து Madras High School (presidency college) அதில் ஆங்கிலேயர் தலைமை ஆசிரியர். உதவிக்கு உள்ளூர் பண்டிட் என்றனர். முகமதிய மாணவர்க்கு ஹிந்துஸ்தானி, பெர்ஷியன், அரபு மொழி, இந்து மாணவர்க்கு அந்த அந்த மாவட்டத்திற்கேற்ப தாய்மொழியில் கல்வி என்றும், அனைவர்க்கும் ஆங்கிலம்- அய்ரோப்பிய இலக்கிய அறிமுகம் எனவும் சொல்லியுள்ளனர். ஆங்கிலம் ஆரம்பநிலை என்ற அளவில் இருக்கட்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளனர்.

1832ல் திரட்டிய தகவல்படி மாணவர்கள் தங்கள் தாய்மொழியில் கூட நல்ல தேர்ச்சி பெறவில்லை எனக் கூறுகின்றனர். 1834 தகவலின்படி ஆங்கிலம் கற்கும் ஆர்வம் அதிகமாகியுள்ளது என்கின்றனர்.

மக்காலே சம்ஸ்கிருதம், அரபி குறித்து எழுதியதை சத்தியநாதன் இந்நூலில் காட்டியுள்ளார். மக்காலே தனக்கு இரு மொழிகளும் தெரியாதென்றாலும், சில நூல்களை ஆங்கில மொழிபெயர்ப்பில் படித்தவரை அவை எதுவும் மேற்கு இலக்கியம் முன்னர் நிற்க தகுதியில்லாதவை- பின் ஏன் இரு மொழியும் படிக்க உத்வேகமூட்ட ஆண்டுதோறும் லட்சம் ரூபாய் என்கிற மான்யம் என வினவியுள்ளார். மக்காலே வங்கக் கல்வி குறித்துதான் அவ்வாறு சொல்லியிருந்தாலும், மதராஸ் மாகாணத்தையும் அது தாக்கியது என சத்தியநாதன் எழுதியுள்ளார். தனக்கு தெரியாத இரு உள்ளூர் மொழிகளுக்கு மாற்றாக ஆங்கிலம் என்கிற அரங்கேற்றம் நடைபெறுவதைக் காண்கிறோம்.

மதராஸ் பகுதியில் 4 ஆங்கில பள்ளிகள், ஆங்கிலேயரை ஆசிரியராக ரூ 130 ஊதியத்தில், உதவிக்கு ரூ 50 சம்பளத்தில் உள்ளூர் ஆசிரியர் என

இங்கு முடிவெடுத்துள்ளனர். மாணவரிடம் மாதம் ரூ 1 வசூல் -fee செய்வது எனவும் சொல்லப்பட்டுள்ளது.

ஆக்லாந்து பிரபு மதராசில் ஆங்கிலம் நன்றாக பரப்பப்படுவது மகிழ்ச்சியானது எனத் தெரிவித்துள்ளார். (பக் 37/ 454). எல்பின்ஸ்டன் , பல்கலை கழகங்கள் என்ற சிந்தனையை விரிவுபடுத்தினார் என்ற செய்தியைக் காண்கிறோம். சில ஜில்லா பள்ளிகளில் ஆங்கில வழி கல்வியும் உருவானது (மீடியமாக). திருச்சி, மசூலிப்பட்டினம், கோழிக்கோடு, பெல்லாரி பகுதியில் இந்த சோதனையை ஆரம்பித்துள்ளனர். 1840ல் யுனிவர்சிட்டி போர்டு என கொணர்ந்துள்ளனர். மாணவர் படிப்பு கட்டணம் மாதம் ரூ 2 என்பது எதிர்க்கப்பட்டதால் பின்னர் குறைத்தனர் எனத் தெரிய வருகிறது.

The opening of the Madras University , the outcome of Lord Elphinstone scheme, took place on Wednesday morning, the 14th April 1841 என்கிற குறிப்பும் கிடைக்கிறது.

Medicine civil Engineering university என்றும் பேசியுள்ளனர்.

இப்படி நூலில் நுழைய நுழைய ஏராள அக்கால தகவல்கள் நமக்கு கிடைக்கலாம். இதற்கெல்லாம் மதராஸ் ராஜதானியில், உள்ளூர் மனிதர்கள் என்ன எதிர்வினை ஆற்றினார்கள் என சேர்த்து பார்க்க முடிந்தால், அக்கால கல்வி வரலாறு குறித்து புரிதல் மேம்படலாம்.

(இந்த நூலில் இல்லாத) மக்காலேயும், காந்தியும் இந்தியர்க்கான கல்வி குறித்து என்ன விழைந்தார்கள் என சில வரிகளை மட்டும் தந்துள்ளேன். நாம் அனைவரும் சேர்ந்து மக்காலேவை நிலைநிறுத்தி, காந்திய நிராகரித்துவிட்டோம். தமிழ் நாட்டில் அதை பெருமையாக பேசிக்கொண்டும் இருக்கிறோம்.

முதலில் மக்காலே வரிகள்..(Macaulay)

Our English schools are flourishing wonderfully. We find difficult to provide it for all who want it. At the town of Hooghly, 1400 boys are learning English..No Hindoo who has received an English education ever remains sincerely attached to his religion…It is my firm belief that if our plans of education are followed up, there will not be a single idolater among the respectable classes of Bengali in 30 years hence. This will be affected without any effort to proselytise, without interference with religious liberty, merely by the natural operations of knowledge and reflection. I heartily rejoice in the prospect.

காந்தியோ இந்த படித்தல் எழுதுதல் என்பதுடன் கல்விக் கடமை முடிந்ததாக கருதவில்லை. காந்தி அரசாங்க பள்ளிகள் பற்றி

பேசுகிறார். தேசிய பள்ளிகள் நோக்கம் பற்றி சொல்கிறார். முக்கியமாக உழைப்பின் கௌரவம் பெருமிதம் அங்கு உருவாக்கப்பட வேண்டும் என்கிறார். ஆசிரியர்களின் தூய இதயம் பற்றி பேசுகிறார்.

In government schools, where they set before themselves the object of employment, clerkship, only reading and writing are taught. In National schools along with reading and writing, the student should also be trained to cultivate the strength of heart and the dignity of manual labour. Reading and writing not an end itself, we should regard it as a means of development of character and achievement of Swaraj. For imparting purity and strength of character to the students, we should have teachers who are men of pure and strong heart

மக்காலேவை நிலை நிறுத்தி, காந்தியை கை விட்டுவிட்டோம்.. வெல்க இங்கிலீஷ், வாழ்க டமில்

3-3-2025

march 4

Gandhi’s conflict management

Gandhi’s Prescription to the mankind is a path to an ‘oppression free world’. Whether it is possible? Nothing is impossible, if all put their heads together. This togetherness is the great practice, but must start at one’s doorstep.

The question of ‘let him do, then come and ask me’ will not help. The greatest question in the Gandhi’s prescription is ‘ what I have to do, am I doing morally a correct thing’. Even one step of mine is more important than expecting and asking the others to do hundreds of steps. This is his entrance to any conflict management.

For this, The other golden rule Gandhi gave to us is

I shall not be afraid of anyone, nor shall I do anything to make anyone else afraid of me.

Recently we witnessed the US Oval Office scenes. This ‘not making of anyone afraid of me ‘ is a great task, needs a continuous practice. . The kick of arrogance of power is not a small thing to manage. That kick makes anyone to dance - dance nakedly. Power big or small has that capacity to corrupt, gives a kind of hallucination that ‘ I am inevitable- you have no other go except prostrating before me- no cards for you ‘. This ‘bigness of me ‘ is haunting everyone. US Oval Office scenes are galore in this world.

Fearlessness , and not making others afraid of me - speaking of that may be easy, but practising needs a lot of toleration, understanding one’s limitation, commitment to truth in the particular context and time. There cannot be any double standard for any favour.

Shutting the doors of negotiation either with threat, showing muscle or bigness of one will spoil the entire efforts for peace and progress of mankind.

Gandhi also taught us another aspect of belief system. In the history, if something is not happened till this day , it does not mean that will never happen. History may repeat and may not repeat also.

If ‘none is high or none is low’ becomes the practice of the world, starting the practice from oneself, then we are all leading the humanity the path of peace, progress and fearlessness. A difficult task, but a needy dream to realise.

4-3-2025

march 5

தொலைத்தொடர்பு துறையில் புகழ்வாய்ந்த, ஊழியர்களின் முன்னேற்றத்தில் பெரும் பங்காற்றிய NFTE இயக்கத்தின் தமிழ் மாநில சங்க மாநாடு, சிதம்பரம் நகரில் 2025 மார்ச் 6,7 நாட்களில் நடைபெறவிருக்கிறது.

தொலைத்தொடர்பு சார்ந்த தொழிற்சங்கத்தலைவர்கள், மத்திய சங்கத் தலைவர்கள் பங்கேற்று சிறப்பிக்க இருக்கின்றனர். நூற்றுக்கணக்கான சார்பாளர்கள் கூடி தங்களின் ஜனநாயக மற்றும் இயக்க நடவடிக்கைகளை மேலும் முன் நகர்த்த இருக்கின்றனர். பி எஸ் என் எல் துறை வாழ்வும், தொழிலாளர் வாழ்வும் என்கிற இருமுனை உயர்விற்கான சிந்தனை சிதறல்கள் மாநாடு முழுக்க எதிரொலிக்கும். இதை இருதூண் கொள்கை என தோழர் டாங்கே சொல்லிக் கொடுத்தார். தோழர் குப்தா தலமட்ட போராட்ட உணர்வுகள் என்கிற ஒன்றையும் -localisation of movement என இணைத்து திரிசூல் என மேம்படுத்தி தந்தார். தொழிலாளர் மற்றும் தலைவர்களின் தனிமனித moral strings என்பதை ஜெகன் போன்றோர் கற்றுக்கொடுத்தனர்.

தோழர் ஆர் கே கம்பீரத்தை அஞ்சாமையை கற்றுக்கொடுத்தார். முத்தியாலு நிதானமான ஆற்றொழுக்கு பாதையை உருவாக்கினார். தமிழ்மணி எளிமையையும் உழைப்பின் கௌரவத்தையும் அளித்தார். தோழர் மாலி திட்டமிடல் எனும் சாதனைநெறியை பயிற்சித்தார். இப்படியான பெரும் நீள் பாரம்பரிய நெறியை உள்வாங்கிய அற்புதமான தோழர்கள் இன்று மாநாடு நடத்துகின்றனர்.

சோர்வு ஏதுமில்லாமல் வரவேற்பு கமிட்டி தோழர்கள் உடன் நின்று தோழமை உபசரிப்புகளை செவ்வனே செய்ய இருக்கிறார்கள்.

மாநாட்டில் பங்கேற்க இருக்கும், மாநாட்டிற்காக உழைத்த அனைவருக்கும் நல் வாழ்த்துகள். இதுகாறும் சிறக்க பணியாற்றியவர்களுக்கும், இனி சுமையை தாங்க வருகிறோம் என துணிவுடன் வரப்போகும் எதிர்கால பொறுப்பாளர்களுக்கும் நல்வாழ்த்துகள்.

மாநாடு அனைத்து வகையிலும் சிறந்து புதிய வரலாற்றை சமைக்கட்டும்!

5-3-2025

march 5

Kerala High Court Judgment

Some connected Memories

The Kerala HC judgment dated feb2, 2025, circulated since the last two days kindled some connected memories.

Dot employees were absorbed to the newly incorporated BSNL PSU dated 15-9-2000, from October 1 of the same year. DOT was not merged with BSNL as the Kerala HC said. 37 A were also not incorporated as said by them in 2002. These are factually not correct.

Taking the formation of BSNL as premises, new rules for absorbed employees of PSUs from any Govt department was framed and notified in the amended rules of 1972 pension rules. The connected conditionality is stated in the Rules 37 A. BSNL got its special exemptions due to the efforts of com O P Gupta. In that Sub rule 8 is common to all, not something special to the bsnl absorbed. Moreover 37 A are rules for absorbed employees, not for pensioners.

Before 1-10-2000 all the DOT employees were one flock availed the benefit of 5th CPC. On absorption there were broadly two categories who opted for BSNL and those not favoured their options. Most of the higher ITS officers not opted. The pay scale changes given to the absorbed employees in 2002 w.e.f 1-10-2000 did not reflect any change to the DOT pensioners on 30-9-2000. No claim even done by them.

During the period of MOC Shri Dayanidhi Maran , ITS officers were under pressure to give option to BSNL. An amendment was made to favour them and hence the insertion of pro rata pension (in 2005) for the period of Govt service and pension as per PSU rules for the remaining service. Some of them opted , and some employees were also opted for this pro rata pension .

So the opted employees became two categories, the bulk belong to combined pension- that is to get pension from govt as per 37A only on retirement from BSNL and till retirement they avail the pay scales of BSNL. The other small category is also ‘optee’ as per 37A, but getting pro rata pension for the govt service in addition to the pay as per BSNL scales. Though they get this IDA scales, that will not be considered for Govt pension on their retirement in the BSNL. They continue to get pro rata govt pension only for the period of their service in the DOT.

The categories are ‘pensioner as in CDA and simultaneously employee in IDA scales ’ and ‘employee in IDA and on retirement pensioner in IDA’. The category ‘pensioner cum employee’ will not get any govt pension for their PSU period of service, where as the employee getting pay only will get govt pension for both the govt and PSU period of service. The courts failed to distinguish this major aspect.

When 6 th CPC was announced and implemented, these non optee employees as well as pro rata optee employees were given chance to avail that CPC benefits and so in the case of 7 th CPC period also from 1-1-2016. While the IDA combined service optees availed only PRC scales on 1-1-2007 and the corresponding pension revision for those retired prior to that. Their pay revision from 1-1-2017 was not implemented due to the govt policies of 3rd PRC.

II

Now I come to the Kerala HC judgment of Feb 2, 2025 with the connected Ernakulam CAT judgment of Oct 30, 2019.

The crux of the question in both the judgment is whether the DOPPW Om dated 12-5-2017 connected with 7 th CPC is to be effected to the petitioner or not.

The CAT judgment of Oct 2019 raised the relevant question in para 6

" The short point to be considered in this OA is whether the Annexure OM dated 12-5-2017 is applicable the applicants who are BSNL IDA pensioners?.."

The CAT found its answer from the statement of respondents.

" The respondents in their reply statement submitted that the Annexure OM is meant for Central Govt CDA pensioners and Pro rata pension optee of BSNL absorbees drawing pension on CDA pattern on Govt service period only and not for the combined service pension optee BSNL IDA pensioners like the applicants. This fact has not been denied by the applicants by filing any rejoinder."

And so the CAT does not find any merit of the case and dismissed the OA.

Kerala HC set aside this CAT judgment and allowed the OA. The HC also gave its direction to the respondents

".. to grant relief in terms of Annexure A5 to the petitioner number 2 applicant who is a pre 2016 pensioners within a period of 2 months from the date of receipt of certified copy of the judgment".

The HC does not bother the categories of CDA or IDA, saying that as the OM 12-5-2017 not explicitly excluded the Retirees who were drawn the IDA pay scales.

The two paras - 'one the 7 a 'of the OM dated 4-8-2016 and the other 'the para 12 ' of the OM dated 12-5-2017 are the main causes for the confusion created in the legal parlours. The HC has taken this OM 12-5-2017 literally, it seems.

The famous biblical sentence is ' Letter killeth but the spirit giveth'.

It seems that the great discrimination would be set if this judgment implemented amongst the pre 2016 and post 2016 pensioners. In order to settle the discrimination amidst pre 2016 pensioners through OM 12-5-2017, the HC creating new

discrimination between pre 2016 and post 2016 pensioners. Unless the OM of CG employees are extended to the employees on 1-1-2016 in BSNL, this may cause greater confusion and more litigations.

But judgment is judgment till the same is nullified in the higher Supreme Court.

5-3-2025 18hrs R. Pattabiraman

march 6

37 A - 24 c நிலைக்குமா?

பென்ஷனர் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவர், 37 A துணைவிதி 24 c குறித்து தெரிவித்தார்.டெல்லியில் DOPPw உயர் அதிகாரிகளிடம் அவருக்கு கிடைத்த தகவலை பரிமாறிக்கொண்டார்.

மத்திய அரசாங்க ஊழியர்கள் பணியிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டால் அவர்களுக்கான ஓய்வூதிய பலன்கள் கிடைக்காத சூழலில், தோழர் குப்தாவின் முயற்சியால் பி எஸ் என் எல்க்கு விருப்பம் கொடுத்தவர்கள் ஓய்வூதிய பலன்களை 37 ஏ வழியாக உறுதிப்படுத்திக்கொண்டனர்.

இதில் துணைவிதியாக 24 சி என்கிற அதி பாதுகாப்பு ஒன்றையும் அன்று பெற முடிந்தது. அதாவது எவராவது பி எஸ் என் எல் நிருவாகத்தால் 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டால், அவர் முழுமையாக ஓய்வூதிய பலன்களை இழக்க மாட்டார். அரசாங்க சேவைக் காலத்திற்கு பென்ஷன் பெறுவார், ஆனால் பி எஸ் என் எல் சேவைக்கு பென்சனை இழந்து விடுவார்.

மத்திய அரசு ஊழியர்க்கோ, ஏன் தமிழ்நாடு மாநில அரசு ஊழியர்க்கோ இல்லாத சிறப்பு பாதுகாப்பு இது. அரசாங்க ஊழியராக இருந்தாலும் அவர்கள் இழந்து விடுவர். கார்ப்பரேட் ஊழியராக இருந்தாலும், அரசாங்க சேவைக்காலத்திற்கு இங்கு அந்த டிஸ்மிஸ் செய்யப்பட்டவர் இங்கு அரசாங்கத்திடமிருந்தே பென்ஷன் பெற முடியும்.

ஆனால் ஏட்டில் இருந்த 24 சி நடைமுறைக்கு வராததை அறிந்த NFTE தோழர்கள், டிஸ்மிஸ் ஆகியிருந்த 40க்கும் மேற்பட்டவர்களின் விவரங்களை தொகுத்து உரிய மட்டங்களில் தொடர்ந்து விவாதித்து, அவர்களின் வாழ்வாதார பிரச்சனையை சில ஆண்டுகளுக்கு முன்னரே தீர்த்து வைத்தனர்.

தற்போது உச்சநீதிமன்ற தீர்ப்பு ஒன்றால், இந்த துணைவிதி நீடித்து நிலைக்குமா என்ற நிலை உருவாகியுள்ளதாக தகவல்கள் வருகின்றன. தொழிற்சங்க தலைவர்கள் உரிய மட்டத்தில் இது குறித்து கேட்டறிந்து, அவ்விதி நிலைக்கச் செய்வார்கள் என கருதுகிறேன்.

6-3-2025

march 7

மனிதன் காலடி பட்டால் பாதை என்பார்கள். கால்களை பழக்குங்கள் என்றார் தோழர் ஹோசிமின்.

" உங்கள் கால்கள் பல செயல்களுக்கு பழகட்டும். நடக்கட்டும். ஓடட்டும். காட்டுப்பாதைகளிலும், மலை முகடுகளிலும், வழுக்குப் பாறைகளிலும் ஏறி இறங்கட்டும். நீச்சல் அடிக்கட்டும். இன்னும் செய்யவேண்டிய பயிற்சிகளை கால்கள் பழகட்டும்" என்றார்.

புரட்சிகர பணிகளில் ஈடுபடும் மனிதனுக்கான கடும் பயிற்சியை எதிர்நோக்கி, இவ்வாறு அவர் சொல்லியிருக்கக்கூடும். தோழர் ஹோ தினம் 40 மைல்கள் கூட நடந்தவர். சொகுசுவாசி எங்கெல்ஸ் கூட அப்படி மைல் கணக்கில் நடக்க வேண்டியிருந்தது. காந்தி நடக்காத நாள் இல்லை. அவரும் தினம் 40 மைல்கள் நடந்தவர்தான். இந்தியா முழுக்க நடந்தவர்தான். நமது ஏழை பாழைகள் நடக்காத நடையா?

செயல் என வந்தால் ஓர் அடி போதும் என கருதியவர் காந்தி. ஓர் அடியானாலும் அனைவருடனும் எனப் போராடியவர் குப்தா. அந்த ஓர் அடி எடுத்து வைக்க வேண்டுமே?

இதெல்லாம் சரி. படிப்பது இராமயணம், இடிப்பது கோயிலா என உள்குரல் கேட்காமல் இல்லை. நான் கால்களுக்கு நடையைக் கூட பழக்கவில்லை. பின்னர் எங்கு ஓடுவது, நீச்சல் அடிப்பது... என்னை ஏன் தொந்தரவு செய்கிறாய் என எப்போதும் இறைஞ்சி, சொகுசை பழகிக்கொண்டன என் கால்கள்.

'காட்சியில் தெளிந்தனம்' என்பார்கள். எனக்கோ விட்டலாச்சார்யார் படம் தோற்றுவிடும் double vision காட்சிகள். எதிரே வருபவரின் தலை மட்டும் உடலிலிருந்து பிரிந்து முன்னே வந்து காட்சி கொடுத்துவிடும். மேலே உள்ளது கீழேயும் தெரியும். பார்வை தீர்க்கம் வேண்டும் என்பார்கள். என் பார்வையில் பல குழப்பங்கள். சரி , எல்லாம் உலகில் தெளிவாகத் தெரிந்துவிட்டால், அதில் என்ன சுவாரஸ்யம் இருக்கும். தெளிந்துவிட்டது என்றால் பார்வைக்கு என்ன தேடல் வேண்டி கிடக்கு?

வழக்கம் போல் ஏதாவது ஆரம்பித்து போகாத ஊருக்கு வழி கேட்பதாகவே நடக்கிறது. ஹோ சி மின் என ஆரம்பித்தேன். தோழர் ஹோ சி மின் நூல்கள் பல வந்திருக்கலாம். தமிழில் ஓரளவிற்கு விரிவாக அவர் குறித்து எழுதப்பட்ட நூல் யெவ்கனி கொபலெவ்

எழுதியது. இந்நூல் மாஸ்கோவில் 1989ல் வெளியாகி, 2003ல் தமிழில் வெளிவந்தது. நல்ல மொழிபெயர்ப்பு. படிக்க இதமாக இருக்கும் நடை. 400 பக்கத்திற்குள்தான்...ஆர்வமுள்ளவர் தேடி வாசிக்கலாம்.

தோழர் ஹோ எழுதிய 'The Revolutionary Path' என்கிற நூலை லெனினின் செய்ய வேண்டியது என்ன என்கிற நூலுக்கு இணையாக வைத்து பேசுகிறார்கள். ஹோ அவரது 'புரட்சிகர பாதை' எழுதியபோது அவர் 40யைக் கூட தொடவில்லை. மிகக் கவனமாக சொற்களின் தேர்ச்சி, சொற்செட்டுடன், தன் சொந்த மக்களுடன் உரையாட விழைகிற சக தோழன் போன்ற நடையில் ஹோ எழுதியிருப்பார்.

இந்தியாவில் மார்க்ஸ் எங்கெல்ஸ் லெனின் மாவோ கிராம்சி செகுவாரா எழுத்துக்கள் சென்ற அளவு ஹோ போய் இருக்கமாட்டார். நல்ல ஆசியத்தனம் கொண்ட எழுத்தாக ஹோ வை பார்க்க முடியும். My writing style is too direct என அவரே சொல்வார். புரட்சிகர பாதை இணையத்தில் கிடைக்கிற நூல் தான். புரட்சிகரவாதியின் இலக்கணத்துடன் நூல் வாயில் திறக்கும். சில வரிகள்

A revolutionary must be

thrifty and Industrious

Show solidarity, not self interest

Learn to correct mistakes and inquisitive

Interested in research, open to new ideas

Take care without being cowardly

Have patience and hardworking

Support common interests,not private one

Keep ideology , sacrifice and work for the party

Have little interest in material things

Keep silent when needed

Show integrity, not opportunism

Evaluate people with care

Accept and forgive the errors of others

Examine the situation carefully

Be decisive be brave

கவிதை போல போகிறது. ஹோ கவிஞரும் கூட. Practice makes perfect என ஹோ சொல்வார். அவரும் இங்கு கம்யூனிஸ்ட்கள் சொன்னது போல இரு கட்ட புரட்சி- தேசிய ஜனநாயக புரட்சி கட்டம், சோசலிச புரட்சி கட்டம் எனப் பேசினார். லெனின் லெனின் என கொண்டாடி வந்தார்.

நம்மூர்ல ஏராளம் , 'மனுஷன் மனுஷனுக்காக' சொல்லி வைத்து போயிருக்கான்

எல்லாம்தான் படிச்சிங்க என்ன பண்ணி கிழிச்சிங்க (நல்லவேளை இணையத்தில் படித்ததால் கிழிக்க முடியவில்லை)

ஏட்டு சுரைக்காய் சமைக்க உதவா

படிச்சவன் பாட்டை கெடுத்தான்

எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்.. இன்னும் இப்படி எத்தனையோ கருத்து கற்குவியல். வேண்டாதவனைப் பார்த்து எடுத்து அடிக்க உதவும்.

உள்ளூர்க்கு வருவோம்.பாவம் நடந்தே தேய்ந்த காந்தி ஓர் அடி போதுமென்றார். ஆனால் அந்த ஓரடியை நான் எடுத்து வைக்க வேண்டுமே?

7-3-2025

march 8

மகளிர் தின நல்வாழ்த்துகள்

மாவோ பளிச்சென பேசக் கூடியவர். அவரின் வரிகளை பாருங்களேன்

" Chinese man has carried back on his back three mountains

Of feudalism

Capitalism

And superstition.

But Chinese women carried four mountains

The fourth one being 'man' himself "

ஆமாம் ஆண் என்கிற பெரிய சுமை மூட்டை , பெண்ணின் நான்காவது சுமைதான்.

நம்ம காந்தியைப் பாருங்களேன் எப்படி சொல்கிறார்

I have worshipped women as the living embodiment of the service and sacrifice. Woman has a compassionate heart which melts at the sight of suffering. Man can never be woman's equal in the spirit of selfless service with which Nature has endowed her. Woman, She creates, cares, shares and does not normally destroy

புரியுது. எங்களை சக்தி என வழிபடவும் வேண்டாம்- வலி தரவும் வேண்டாம், தொந்தரவு செய்யாமல் இரு ஆண் பிள்ளாய் என ஒருசேர மகளிர் பேசுவதைக் கேட்க முடியும். இப்படியே selfless service என எங்களுக்கு சொல்லிவிட்டு, 'நீ சும்மா ஊர் சுற்று- காரியத்திலே ஒன்னுமில்ல ' எனவும் வீடு தோறும் எதிரொலி

8-3-2025

march 8

மகளிரைப் போற்றுவோம்

- எஸ். ஹேமலதா

(சர்வோதயம் மலர்கிறது இதழுக்காக எழுதப்பட்டது)

இந்த வருட மகளிர் தினம் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒன்று. 1995 ம் வருடம் உலகம் முழுவதும் பாலின சமத்துவம், பெண்கள் , பெண் குழந்தைகளுக்கான பாதுகாப்பு மற்றும் உரிமை என்ற பீஜிங் பிரகடனம் ஏற்கப்பட்டு 30 வருடங்கள் முடிந்து விட்டன. இன்று நாம் வெகுதூரம் கடந்து வந்திருக்கிறோம். பெண் உரிமைக்கான குரலிலும் பல்வேறு மாற்றங்களையும் முன்னோக்குகளையும் காண்கிறோம்.

ஐ.நா இந்த வருட உலக மகளிர் தினத்திற்கான ஆய்வுப் பொருளாக - பெண்களுக்கான சம உரிமைகள், அதிகாரம், வாய்ப்புகள் ஆகியவை பெறுவதற்கான செயல் திட்டத்தை 2024 டிசம்பரில், முன்வைத்திருக்கிறது. அந்த வரைவு உலகம் முழுமையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுமுன் மொழியப் பட்டுள்ளது. சட்டம் மூலமாக சமதையான வாய்ப்புகளை பெறுதல், அதற்கு இளைஞர்களை ஈடுபடுத்துதல், சமூகத்தை ஏற்கச் செய்தல், ஒரே மாதிரியான கெட்டிப் பட்டுப் போன பழைய சமூகக் கருத்துகளை மாற்றுதல் போன்றவற்றிற்கு அந்த செயல் வரைவு திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு முற்போக்கு சிந்தனைகளோடு தயரிக்கப் பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக அடுத்த தலைமுறைப் பெண்களுக்கு இவற்றை உத்திரவாதப் படுத்துவதை முதன்மையாக கொள்கிறது.

சென்ற வருடம் மட்டும் 612 மில்லியன் பெண்களும், பெண் குழந்தைகளும் போர் மற்றும் போர் சார்ந்த கொடுமைகளை அனுபவித்திருப்பதாக ஐ.நா பதிவு செய்கிறது.

3 முக்கிய புள்ளிகளில் இவ் வருடத்திய செயல் திட்டம் வரையறுக்கப் பட்டுள்ளது.

1. பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கான உரிமைகளை பெறுவதற்கு, அவர்களுக்கு எதிரான அனைத்து விதமான வன்முறை,

பாகுபாடு, சுரண்டலை எதிர்த்து எவ்வித தடங்கலையும், தளர்வையும் அனுமதிக்காமல் போராடுவது.

2. ஆணாதிக்கத் தகர்ப்பு, வலிந்து ஏற்படுத்தப்பட்ட தடைகள், ஆழ வேரூன்றிய ஆண் பெண் பாகுபாடுகள், விளிம்பு நிலை பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் பற்றிய விழிப்புணர்வு, அவர்களின் குரலை எதிரொலிப்பது, இவற்றிற்காக எல்லோரையும் உள்ளடக்கி போராடுவது.

3. கல்வி, வேலை வாய்ப்பு, தலைமைப் பண்புக்கு உயர்த்துதல், முடிவெடுக்கும் தளத்திற்கு/ தளத்தில் அவர்களை ஊக்குவிப்பது என பெண்கள் முன்னேற்றத்தை துரிதப் படுத்துவது, முக்கியமாக இளம் பெண்களுக்கான வாய்ப்புகளைத் தேடிக் கண்டடைவது

ஐ. நா குறிப்பு சில நல்ல முன்னேற்றங்களையும் நமக்கு தருகிறது. 1995 பீஜிங் பிரகடனத்திற்கு முன்பு 12 நாடுகளில் மட்டுமே குடும்ப வன்முறைக்கு எதிரான பாதுகாப்பு சட்டம் இருந்தது. ஆனால் இன்று 193 நாடுகளில் அது சட்டமாக்கப் பட்டுள்ளது. பாதுகாப்பான வாழ்விடம், வன்முறைக்கு எதிரான சட்டப் பாதுகாப்பு, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தேவைப்படும் ஆலோசனைகள், சிகிச்சைகள் என உலகெங்கும் இந்த சேவைகள்மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இவற்றிற்காக பல பெண்ணுரிமைப் போராளிகள் தங்கள் உழைப்பை நேரிலும், தொழில் நுட்பம் மற்றும் மென்பொருள் மூலமும் உலகெங்கிலும் வழங்குகிறார்கள். அமைதிக்கான பணியில் பெண்களை ஈடுபடுத்துவது என்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் 2010லிருந்து ஏற்பட்டுள்ளது. இன்று 112 நாடுகளில் தேசிய அளவில் அமைதி மற்றும் பாதுகாப்புக்கான திட்டம் செயல் படுத்தப்படுகிறது. இந்த திட்டம் பெண்களுக்கு எதிரான வன்புணர்வு, பாதிக்கப் பட்ட பெண்களுக்கான மீட்பு , அது சார்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பதை வலியுறுத்துகிறது. இவ்வளவு சட்டங்கள் வந்தாலும் உலகில் இன்றும் புதிது புதிதாக பெண் உரிமைக்கும், பாதுகாப்புக்கும் ஆபத்து ஏற்படுத்தும் சக்திகளும் செயல்களும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. ஓரடி கூட பின்னே செல்லாமல் முன்னேற ஐ. நா இந்த அறைகூவலை விடுத்திருக்கிறது.

இந்தியாவை பொறுத்தவரை பெண் போராளிகள் ஏராளமானோர் அந்தந்த காலங்களில் சட்ட ரீதியாகவும், சட்ட உருவாக்கத்திலும் தங்கள் பங்கை செலுத்தியிருக்கிறார்கள். புதிய இந்தியா உருவாக்கத்தில் அரசியல் நிர்ணய சபைக் கூட்டங்களில் பெண்கள்

தங்கள் குரலை ஒலித்திருக்கிறார்கள். அரசியலமைப்பு சட்ட கட்டுமானத்தில் தந்தையர்கள் மட்டுமல்ல, தாய்மார்களும் உண்டு என இவர்கள் நிரூபித்தார்கள். இவர்களில் பலர் காந்தி எனும் காந்தப்புலனில் இருந்தவர்களே!

தாட்சாயணி வேலாயுதம், அம்மு சுவாமிநாதன், ஹன்சா மேத்தா, கமலா சௌத்ரி, சுசேதா கிருபளானி, துர்காபாய் தேஷ்முக், ஆயிஷா ரசுல், பூர்ணிமா பானர்ஜி, ரேணுகா ராய், அம்ரித் கவுர், அன்னி என்ற 11 பெண்மணிகளின் ஆளுமைத் திறன் அப்போது வெளிப்பட்டது. அரசியலமைப்பு ஆக்கத்தில் , பெண்களின் உரிமையை பெண் தான் முன்வைக்க வேண்டும் என்ற முக்கியமான கருத்தை தன் முதல் குரலை ஹன்சா மேத்தா ஒலித்தார்.

பாலின பாகுபாடை கடுமையாக கண்டித்தவர் அவர். எவ்வகையான வேறுபாட்டையும் அந்த தாய்மார்கள் ஏற்கவில்லை. முஸ்லீம்களுக்கான ஒதுக்கீட்டை பேகம் ரசுல், பெண்களுக்கான தனி தொகுதி என்பதை ஹன்சா மேத்தா போன்றோர் ஏற்கவில்லை. அனைவரும் சமம் என்பதற்கே அவர்கள் நின்றிருக்கிறார்கள். பெண்கள் தங்களுக்கான உரிமையை பெறுவதில் இந்திய மக்கள் தங்கள் ஆதரவை, முழு ஒத்துழைப்பை தருவார்கள் என்று நம்பினார்கள்.

சமூக சட்டங்கள் எனச் சொல்வதெல்லம் ஆண்கள் உருவாக்கியவையே. பெண்களை கலந்து அச்சட்டங்களை ஆண்கள் உருவாக்கவில்லையே என்ற காந்தியின் கவலையை இந்த தாய்மார்கள் பிரதிபலித்தனர். பெண் சம நிலையில் சம அறிவு கொண்ட தோழி என்ற உணர்வு பெருகட்டும் என காந்தி விழைந்தார். ஆடவரின் சட்டங்களை மீறிய பெண்புரட்சி அகிம்சை வழியிலேயே துவங்கட்டும் என 1925 லேயே நூறாண்டுகளுக்கு முன்பே எழுதினார். பெண் கல்வியை வலியுறுத்திய காந்தி குழந்தைத் திருமணங்களை வன்மையாகக் கண்டிக்கிறார். இதனால் ஏற்படும் தீமைகளை நவ. 16,1935 ஹரிஜன் இதழில் எழுதி இருக்கிறார்.

1931 கணக்கெடுப்பின்படி15 வயதிற்குள் திருமணமானவர்கள் 80%. அதேபோல அவர் தரும் இளவயது கைம்பெண்கள் பட்டியலும் நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது. ஏறத்தாழ நூறாண்டுகள் கடந்து விட்டோம். சென்ற ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்தியன் எக்ஸ்பிரஸ் தகவல் பெறும் உரிமை சட்டம் மூலம் பெற்ற தகவலை வெளியிட்டிருக்கிறது. 2023 ஆம் ஆண்டில் 1054 குழந்தை திருமணங்களும் 2024ஆம் ஆண்டு 1640 குழந்தைத் திருமணங்களும் ஈரோடு, திருநெல்வேலி,

கோயம்புத்தூர், திருப்பூர், தர்மபுரி, சேலம் பகுதிகளில் நடந்ததாக அவ்வறிக்கை சொல்கிறது. இந்திய அளவில் ஹரியான, தமிழ்நாடு, தெலுங்கானா, ஜம்மு காஷ்மீர் பகுதிகளில் இவ்வகை திருமணங்கள் நடப்பதாக UNICEF குறிப்பிடுகிறது.

இன்று இந்தியப் பெண்கள் சந்திக்கும் சவால்கள் பாலின பாகுபாடு, வன்முறை, பொருளாதார , கல்வி சமத்துவமின்மை, கிராமப் புறங்களில் சுகாதார குறைபாடு, அரசியல் அரங்கில் , தலைமை இடங்களில் /முடிவெடுக்கும் தளங்களில் பெண்களின் குறைந்த பங்களிப்பு என பட்டியல் நீள்கிறது. இருபாலருக்கும் 'சமவேலைக்கு சம ஊதியம்' திறன்சாரா தொழிலாளர்களுக்கு நடைமுறையில் இல்லை. சொத்து உரிமையில் தந்தை வழி சமுதாயம் பெண்களுக்கு சம அந்தஸ்து தருவதில்லை.

உலக சமத்துவமின்மை அறிக்கை 2022 சில முக்கிய புள்ளிகளை அளிக்கிறது.

மொத்த தொழிலாளர் ஊதியத்தில் 82% ஆண்களும் 18%பெண்களும் பெறுகிறார்கள்.

1990ல் 30% இருந்த பெண்களின் வேலை பங்களிப்பு 2021ல் 19% ஆக குறைந்திருக்கிறது. இது வீட்டு வேலைப்பளு மற்றும் சமூக காரணிகளால் கூட இருக்கலாம்.

ஆண்கள் வேலை தேடி நகரங்களுக்கு இடம் பெயர்வதால் கிராமப் புறங்களில் விவசாய தொழிலில் பெண்கள் பங்கு அதிகரித்திருக்கிறது. 70 % பெண்கள் விவசாய தொழிலாளர்களாக இருக்கிறார்கள் ; ஆயினும் 14% பெண்கள் மட்டுமே நிலச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள்.

73வது அரசமைப்பு சட்ட சீர்திருத்ததிற்கு பிறகு அரசியலில் பெண்கள் பங்கு அதிகரித்திருக்கிறது. ஆனால் அது பெண்களை முன்னிறுத்தி மற்ற குடும்ப உறுப்பினர்கள் செய்யும் 'மாற்றாள் அரசியலாகவே' பெரும்பாலும் இருக்கிறது.

பொது இடங்களில் பெண் பாதுகாப்பு பெரும் சவாலான விஷயமாகவே உள்ளது. பெண்களுக்கெதிரான குற்றங்கள் / குடும்ப வன்முறைகள் தொடர்ந்து அதிகரித்த வண்ணமே இருக்கிறது.

காந்தி விரும்பும் சமுதாயத்தில் பெண் , மனைவி என்பவள் ஒருவரின் சொத்து பொன்றவள் அல்ல. அவர் வாழ்வின் சரிபாதி. ஒருமித்த அமைதிக்கான வாழ்க்கை இருவர் கரங்களிலும் இருக்கிறது.

பெண்களின் தற்காப்பு என்று வருகையில் அவர் அகிம்சையை வலியுறுத்தவில்லை. மானுடத்தையே வசப்படுத்தும் சக்தியாக பெண்கள் திகழ வேண்டும் என அவர் விரும்பினார். கஸ்தூர்பாயின் பொறுமையான நடவடிக்கைகள் தன்னை நிதானம் அடையச் செய்தன என அவரே ஏற்றுள்ளார். மக்கள் தங்கள் கடமைக்கு முக்கியத்துவம் தரும் வாழ்வை வாழும்போது எவ்வித வன்முறையும் ஏற்பட வாய்ப்பில்லை என நம்பினர். கடமைகளை பற்றிய விழிப்புணர்வு உருவாக்காத சடங்குகள் மீது தனக்கு நம்பிக்கை இல்லை என்று நமக்கு தெளிவு படுதுகிறார். அவரின் சீதை ராமனுக்கு அடிமையானவள் அல்ல. மீராபாய் மனைவிக்கும் ’மார்கம்’ உண்டு எனக் காட்டியவர். பெண் எப்படி வாழ வேண்டும் என காந்தி விரும்பியதை இக்காலப் பெண்களும் நிச்சயம் ஏற்பர். வாழ்க்கை என்பது கடமைக்கான காலம். மனித குல சேவைக்கான காலமும் கூட என்ற அவரின் குரல் எந்நாளும் நமக்கு தேவையான ஒன்று.

ஒரு சமுதாயம் முன்னேற வேண்டும் என்றால் அந்த சமூகப் பெண்கள் முன்னேற வேண்டும். சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து பல வகைகளிலும் பெண்கள் முன்னேற்றம் நிகழ்ந்தாலும் நாம் செல்ல வேண்டிய தூரம் இன்னும் அதிகமே.

செய்தக்க அல்ல செயக் கெடும்; செய்தக்க செய்யமையானும் கெடும் என்றார் வள்ளுவர். செய்யத் தகாத செயல்களை செய்தாலும் கேடு உண்டு. செய்ய வேண்டியவற்றை செய்யாமலிருந்தாலும் கேடு உண்டு.

பெண்கள் முன்னேற்றத்தில் ‘உள்ளியது உள்ளப் பெறின்’ என குறிக்கோளை அடைய சமூகம் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும்.

சென்ற தலைமுறை பெண்கள் வேலை/ வீடு சம பங்களிப்பு (work life balance) என்பதில் கவனம் கொண்டார்கள். இன்றைய தலைமுறை பெண்கள் தங்கள் இறகு விரிக்க ஆசை கொண்டுவிட்டார்கள். தங்கள் தாய்மை பண்போடு தனிநபர் என்கிற தன்மையையும் (mothehood-person hood) இழக்காமல் இருக்க முயற்சிக்கிறார்கள். அவர்கள் பறக்க சமூகம் தன் முழு ஒத்துழைப்பை தரும் என எதிர்பார்ப்போம்.

march 9

Trade Union knowledge system (TUKS) is also a system of knowledge , though not an absolute one in the area of epistemology . It is a system somewhat influenced by both the international , National and even regional knowledge systems. And so , we have many variants- different organisations like BMS, INTUC, HMS, AITUC, CITU , LPF and other industrial unions as per the requirements of the concerned fields.

This TUKS has its own theory and practice, based mainly on the contours of its organisation, its experimental theatre. One can find there also ‘all the goods and vices of society’ , as its members and leaders emerge from there only. But a chance of undergoing a different schooling is there with some virtues . With many good characteristics, sometimes one may find aspects of power play, who I am you know- threat culture, lavish spending, misuse of positions, treating members as mere guests , absence of responding and responsive attitudes, impatience, paucity of democracy etc.

Com O P Gupta tried his best in the telecom movement to have that TUKS in a ‘self defined way ‘ rather than ‘stranger defined way’. Self defined way is possible only when one sustains and lives with that particular community all in 24 into 7. This, Gupta practised by living with them 24 into 7. May be his Gandhian practice.

This self defined way (SDW) will help one to find the strength- weakness, limitations- constraints, acceleration- retardation, the need of that movement in a particular context and situation. There cannot be any general sermons in that. Discourses are mostly issue based and within the reach goals. It focuses more an ounce of realisation, than tons of rhetorics. The self defined way tries to find solution, finding light in darkness, instead of projecting gloomy and hopelessness everywhere . The SDW takes responsibility for what it does, what could not be done and never indulge in blame games or pointing fingers. The SDW’s thinking action and execution are mainly based on its own strength. It knows that the stranger command system suits less to its TUKS.

In the course of life, one is habituated possessiveness also. Possessive-ness is having its own good and other aspects. Sometimes it acts dangerously also. Organisational possessiveness is also having its healthy as well as sickness sides. Indian knowledge system advises ‘ non possession’ though in practice all desire to get and possess things more and more . Attaining and leaving both are part of life.

Com Namari , my friend a kind of inner voice - taught me one fine art ‘ understand - do not possess’- that is ‘understanding’ any organisation, whether in posts or positions or just member or not even a member. The ‘art of Understanding’ the character, the challenges, historical contexts and its contours of the organisation- than ‘possessing’ the material aspects or any other possessiveness of or on that organisation. ‘Understanding , not possessing ‘ is the concept Namari taught me. Another good thing is ‘No self promotion ‘ . This is also a gift from Namari. 9-3-2025

march 10

M k Gandhi taught so in Hind Swaraj(1909)

A tree does not grow in one day

It is a mark of wisdom not to kick against the very step from which we have risen higher. The removal of a step from a staircase brings down the whole of it.

When, out of infancy, we grow into youth, we do not despise infancy, but, on the contrary, we recall with affection the days of our childhood.

If , after many years of study, a teacher were to teach me something, if I were to build a little more on the foundation laid by that teacher, I would not , on that account, be considered wiser than the teacher

It is a bad habit to say that another man’s thought are bad and ours only are good, and those holding different views from ours are the enemies of the country

It is Swaraj when we learn to rule ourselves. The outward freedom that we shall attain will only be in exact proportion to the inward freedom to which we may have grown at a given moment

...our chief energy must be concentrated upon achieving reform from within.

10-3-2025

March 11 2025

காந்தி- அறம்- அறிவியல்

நேரு என்றாலே அவர் புத்தாக்க அறிவியல் பார்வை கொண்டவர், அவர் சோசலிஸ்ட் என்பதால் நவீன தொழில்மயமாக்கலுக்கு முன்னுரிமை கொடுத்தவர் என்பது , பொது புத்தியில் ஏற்கப்பட்ட ஒன்று.

அதேநேரத்தில் காந்தி என்றால் அவர் அறிவியல் பார்வையில்லாதவர், கட்டை வண்டி காலத்தவர், பத்தாம்பசலி, எதிர் புரட்சியாளர் என்கிற மாய பிம்பமும் சமுகத்தில் பரவிக் கிடக்கிறது. அவரைக் கொண்டு 21ஆம் நூற்றாண்டில் ஆகப்போவது ஏதுமில்லை எனவும் பலர் கடந்து போகின்றோம்.

ஆனால் காந்தி பெரும் அறிவியல் விளக்கங்களை, முறையியலை கையாண்டவர் என அவரை சற்று மனச்சாய்வின்றி பார்த்தால் தெரியவரும். இந்திய அறிவியல் அறிதலாளர்கள், காந்தியை எடுத்துக்கொள்வதில்லை, நேரு- இந்திராவைக் கூட அவர்கள் எடுத்துக்கொள்வார்கள்.

காந்தியின் 'தனித்துவ சிறப்பு' ,எல்லாத் துறைகளும் எல்லா மனிதர்களும் ஒன்றில் எவ்வளவு நிபுணத்துத்துவம் கொண்டிருக்கிறது / கொண்டிருக்கிறார்கள் என்று மட்டும் பார்க்காமல், அந்த நிபுணத்துவம்- நிபுணத்துவர்கள் ' மாரலாக' உள்ளடக்கம் கொண்டுள்ளதா / கொண்டுள்ளனரா எனப் பார்ப்பதில் இருக்கிறது.

விதைகளின் வீர்யம் எப்போதும் 'optics tricks ' எதுவும் கொண்டிருப்பதில்லை. அது வெளித்தெரியா உள் பயணத்தில்தான் results களை செடியாக , மரமாகத் தரும். மரம் வேண்டுமானால் அதற்கான பெரும் optics களை கொண்டிருக்கலாம். விதைகள் அப்படியிருப்பதில்லை. இதையும் காந்திதான் சொல்லித்தந்தார்.

காந்தி தனது அகிம்சை, காதி, சத்தியாகிரகம், சமுக பதட்டத் தணிப்பு என அனைத்திற்கும் அறிவியல் சார் விளக்கங்களையே கொடுத்து வந்தார். Science of Satyagraha , Science of Khadi , science of peace என அவர் பேசுவார்.

தீமையையும் , தீமை செய்பவர் என்பதையும் ஒன்றாக பார்க்காதே. தீமையை அகற்ற போராடு, அதை அவன் செய்கிறான் - அவனை ஒழி என போக வேண்டாம், என்பது அவர் தந்த பாலபாடம். Fight the evil என்றார். அதே நேரத்தில் அவர் விஞ்ஞானம்- விஞ்ஞானியை பிரித்து

பார்க்கக் கூடாது என விழைந்தார். மனசாட்சியை மூடிவைத்துவிட்டு, அல்லது விலைபோய் 'அழிவு கண்டுபிடிப்புகளை தராதே- பொருளாதார விதிகளை உருவாக்காதே' என அவர் அறிவுறுத்தி வந்தார்.

அவர் புள்ளியியலாளர் கூட. சம்பரான் விவசாயிகளுக்கான போராட்டத்தில் , அவரின் data collection திறன்- அதிலிருந்து அவர் கொணர்ந்த நியாய கேட்புகள், சக போராளிகளை மட்டுமல்ல, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களையும் திகைக்க வைத்தது. Speaking on the basis facts என்பது அறிவியலுக்கான ஒழுங்கு முறைகளின் அடிப்படை. மனம் போன பேச்சு என்பதை அவர் ஏற்கவில்லை. உரையாடல் மட்டுமே அவரிடம், எந்த பொய்யாடலையும் அவர் நிராகரித்தார்.

தலையுடன் கைகளை சேர்த்துக்கொள்ளும் அறிவியலின் தேவையை அவர் வலியுறுத்தினார். உடல் உழைப்பைக் கொடுக்காமல் சிறப்பைக் கோரும் மூளை உழைப்பை அவர் ஏற்கவில்லை. என்னிடம் அறவே உடல் உழைப்பு இல்லை என்பது தனிக்கதை.

இந்த இடத்தில் சில நண்பர்களிடம் என் சொந்த வாழ்வில் ஏற்பட்ட முரணை நான் வெளிப்படையாக சொல்லியிருந்தேன். பொழுது முழுக்க தொழிலாளர் பிரச்சனைக்காக தெருவில் , ஆர்ப்பாட்டங்களில், வேலை நிறுத்தங்களில், கூட்டங்களில், பயணங்களில் (அதாவது இவைதான் களச் சோதனை- practice என நான் செய்தவை) இருந்த காலத்தில்- பொழுது முழுக்க நூலகத்தில், நூல்களின் நடுவே எடுக்கும் குறிப்புகளில், நூல் எழுதுவதில், கோட்பாடுகளை treatise ஆக உருவாக்கி கொண்டிருந்த மார்க்சை மட்டுமே பேசி வந்தேன். ஆனால் இப்போது - practice என்று நான் செய்து வந்த ஆர்ப்பாட்டம், கூட்டம், பயணம்- இல்லா இக்காலத்தில்- முழுக்க நடையாய் நடந்து ஊர் ஊராக போன காந்தியை- சௌகரியமாக உட்கார்ந்த நிலையில் பேசி வருகிறேன். இந்த முரணை ரசிப்பதா, நொந்து கொள்வதா என்பது எனக்கு பெரும் பிரச்சனை.

காந்தி- அறிவியலுக்கு வந்துவிடுகிறேன். பிரிட்டிஷ் சட்ட முறை மருத்துவ முறை, வழக்கறிஞர் மற்றும் மருத்துவத் தொழில் குறித்து அவருக்கு விமர்சனம் இருந்தது. அவர் இருதரப்பு பரஸ்பர புரிதலில் விட்டுக்கொடுப்புகளில் பிரச்சனை தீர்வை பஞ்சாயத்தை விழைந்தார். இயற்கை வைத்தியம் என்றார். மேற்கூறிய தொழில்களின் பணக்கொள்ளையை, சிறப்பு உரிமை கோரலை அவர் விமர்சித்தார். சிக்கனமாக, தெரிந்த வழிகளில் தீர்க்க முயற்சியுங்கள் என அவர்

அறிவுரை தந்தார். தன் வாழ்வில் அப்படியான சோதனைகளை நல்ல தீர்வு வரும் வகையில் செய்தும் காட்டினார்.

கடையனுக்கு முன்னேற்றம் தராத உங்கள் STP scientific technological project எல்லாம் சாத்தானின் கூடங்கள்தான் எனக் கடுமையாக கூட அவர் பேசினார். பொருளாதாரவாதிகள் பரிந்துரைத்த trickle down என்பதற்காக அவர் காத்திருக்கவில்லை. அவரின் நிர்மாண திட்டங்களை மிகவும் அறிவியல் பூர்வமாக நடத்தலானார்.

முதலாளிகளின் 'முதல்' மாபெரும் சக்தி என்றால், தொழிலாளியின் 'உழைப்பு ' இணையான சக்தியே. இரண்டும் இணைந்தால்தான் உற்பத்தி என்கிற புதிய சக்தி என்றார். 'முதல்' எப்படி வந்தது என்கிற மூல ஆராய்ச்சிக்கு (எந்த வரலாற்று மூல ஆராய்ச்சிக்கும் அவர் போவதில்லை) அவர் போகவில்லை. ஒன்று மற்றதின் அழிப்பு சக்தியாகக் கூடாது என்பது அவரது அறிவியல் பார்வை . Supplementary complementary எனக் கருதினார்.

இந்த உலகத்தில் மனிதர்கள் மிகச் சிறப்பாக எழுதப்பட்ட இசம் அல்லது எழுத்து, மூளைகள் சொன்னபடியே வாழவேண்டும் என கங்கணம் கட்டிக்கொள்வதில்லை. நேரிடும் வாழ்க்கை குறித்தே அவர்களின் அன்றாட கவலை, போராட்டம் எல்லாம். இதை காந்தி கவனப்படுத்தினார்.

அவரிடம் ஒழித்துக்கட்டுதல்- இல்லாமல் ஆக்குதல் என்கிற ஏதும் இல்லை. இணக்கப்படுத்துதல் என்பதில் அழுத்தம் இருந்தது. அவரிடம் உதித்தது இந்த வரி

I do believe that all God's creatures have the right to live as much as we have. இது இவ்வுலகின் பல்லுயிர் பண்பாட்டுக்கான அறிவிக்கையல்லவா- one of the best statement for biodiversity.

உலகை திருத்த என அவர் முன் புறப்பட்ட ஒவ்வொரு மனிதரிடம் அவர், 'அப்பா உன்னை திருத்திக்க முடியுமா எனப்பார்' என்றார். எல்லோரும் 'கடுப்பேத்துகிறார்' எனக் கருதினார்கள். தன் பெரும் உழைப்பு உறவினர் மகன்லாலுக்கு எழுதிய கடிதத்தில், மகன்லால் இந்தியாவின் அனைத்து பிரச்சனைகளையும் ஏதோ நீ தீர்க்கப்போவது போல் தலையில் ஏற்றிக்கொள்ளாதே. உன்னை எவ்வளவு சரியாக வைத்துக்கொள்ள இயலுமோ அதற்கு முன்னுரிமை கொடு என்றார். அது மகன்லாலுக்கு மட்டுமானதா என்ன?

எவர் ஒருவரின் அறிவோ, உடல் பலமோ, அதிகாரமோ, செல்வ சொத்து மற்றும் பணமோ சிறப்பு உரிமைகளை கோருவதற்கோ அதிகாரப்படுத்திக்கொள்வதற்கோ இல்லை என்றார். அவை சமுக முன்னேற்றத்திற்கான மறு இடுகைகளாக மாறவேண்டும். அவற்றை கொண்டிருப்பவர்கள் டிரஸ்டிகளாக செயல்படவேண்டும் என விரும்பினார். அப்படியெல்லாம் எவரும் இருக்க மாட்டார்கள், ஒரு போதும் நடக்காது, மனித சுபாவம் அது அல்ல என சொன்னவர்களிடம், மானுடன் மீது என் அசைக்க முடியா நம்பிக்கையை குலைக்க வேண்டாம் என்றே அவர் பதில் தந்தார்.

Conflict transformation என்கிற அவரின் சோதனை, இன்று உலகின் பெரும் ஆய்வுக்குரிய ஒன்றாகி உள்ளது. முரண்பாட்டை தீர்க்க வேண்டிய உரையாடலின் 'பொது மொழியைக் காண்பது' என்கிற காந்திய அம்சங்கள் ஆய்வுலகில் பேசப்பட்டு வருகிறது. Personal relations- personal correspondence between opponents என்கிற (அதிகாரபூர்வ என்பதைத் தாண்டிய) காந்தியின் அணுகுமுறை கைக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று என விதந்து பேசப்பட்டு வருகிறது.

'Identification of interests in common with opponents' என்பதில் அவருக்கு இருந்த தொடர் முயற்சி மிக அபூர்வமான ஒன்று. எதிரி என உருவகப்படுத்திவிட்டால் அவர் குறித்த அனைத்து கேலி, வசைமொழிகளையும் , தனிப்பட்ட தாக்குதலையும் தரும் உலகாக நாம் நம்மை குறைத்துக்கொண்டு விட்டோம். நமது 'லிமிடேஷன்' தெரியாமல் வாயடிப்புகள் செய்தலை வேடிக்கை வாடிக்கையாக்கிக்கொண்டுள்ளோம். பதட்டத் தணிப்பா, பதட்டத்தை தீவிரப்படுத்தி அழித்தொழிப்பா என்பது உலகில் இன்று பெரும் விவாதமாகி வருகிறது. Live together peacefully- Live together in harmony என்பதற்கு காந்தி பெரும் கிடங்காக இருக்கிறார் என உலகம் உணர்ந்து வருகிறது. எதிரியேயானாலும் அவருடன் கௌரவமான மொழியில் உரையாடு என பெரும் அறத்தை அவர் கொடுத்துச் சென்றுள்ளார். Dialogue with all dignity என்பது இருந்தால், அங்கு காந்தி புன்னகைக்கலாம்.

'இது இப்படித்தான் இருக்கும் மாறாது' என நினைப்பது கூட மூட நம்பிக்கை என அவர் சொல்லித் தந்தார். அவரவர் மாற்றத்தை தன்னிடமிருந்தே தொடங்கிப் பாருங்களேன் என்கிற மிக மிக கஷ்டமான பரிட்சையை அவர் பரிந்துரைக்கிறார். சமுக மாற்றம் வந்தால் அனைத்தும் சரியாகிவிடும் என உங்கள் அஜெந்தாவை ஏன்

சௌகரியமாக ஒத்தி வைக்கிறீர்கள் என புத்திக்கு உரைப்பது போல் கேட்டார். உங்கள் மனச் சான்றுக்கு நேர்மையாக இருக்கிறீர்களா என அவரவர் கணந்தோறும் சோதித்து அடுத்த அடி எடுத்து வைப்பீர் என்கிற கடும் சோதனையை அவர் முன் வைத்தார். Be moral in every step என்பது சாதாரணமான ஒன்றல்ல. வாழ்க்கைக்கான பெரும் பரிட்சையது. இது வழக்கொழிய வேண்டிய ஒன்றா? இதில் என்ன பத்தாம்பசலித்தனம் இருக்கிறது.

11-3-2025

march 12

பிரிட்டிஷ் இந்தியாவில் கம்பனி மற்றும் மகாராணி ஆட்சிக் காலத்தில் உள்ளூர் மொழிகளை கொஞ்சம் கொஞ்சமாக சிறுமைப்படுத்தி பேசி, இங்கிலீஷ் திணிப்பு செய்த பெருங்கதையை காட்டக்கூடிய ஏராள ஆவணங்கள் கண்ணில் படுகின்றன.

1715 களிலிருந்து English medium charity schools என மெதுவாக ஆரம்பித்து விரிவு படுத்தினர். மதரசா, பாடசாலாக்களிலும் இங்கிலிஷ் நுழைந்தது.

பனாரஸ் சம்ஸ்கிருத கல்லூரி, கல்கத்தா மதரசா கல்வி முறைகள் குறித்து தொடர் கேள்விகள் எழுப்பப்பட்டன. 1813 சார்ட்டர் சட்ட வழியாக இந்துக்களின் தவறான பார்வையை மாற்ற நமது மொழியால்தான் முடியும் என உரக்கப் பேசினர். எங்கும் இருட்டு, வெளிச்சம் ஏற்படுத்த இங்கிலிஷ் முறை கல்வி என்றனர். By degrees to impart our language to Hindoos- with our arts, philosophy and religion என தாக்கீது அனுப்பியுள்ளனர்.

The introduction of English in the administration of revenue, in judicial proceedings, and in other business of government, wherein Persian is now used , and the establishment of of free schools for instruction in this language, would insure its diffusion over the country என திட்டமிட்டு, நன்றாக வேர் பிடிக்க வைத்துள்ளனர்.

ராஜா ராம்மோகன் ராய் டிசம்பர் 11, 1823 வில்லியம் பிட் கவர்னர் ஜெனரலுக்கு எழுதிய வேண்டுகோள் கடிதம் , உயர் அதிகாரி பிரின்செப் ஜுலை 9, 1834 அறிக்கை, மகாலேவின் பிப்ரவர் 2,1835 மினிட்ஸ் என பல பக்கங்கள் எழுதப்பட்டவைகளில் இந்திய மக்கள் மீது கம்பெனி நிர்வாகம் திணித்த இங்கிலீஷ் , மதம் சார்ந்த அம்சங்களை பார்க்கமுடியும்.

சம்ஸ்கிருதமும், பெர்ஷ்யனும் எனக்கு தெரியாது என்றாலும், அதில் குவித்து வைக்கப்பட்டுள்ள அனைத்தையும் சேர்த்தால் கூட, ஒரு அலமாரி தட்டு இங்கிலிஷ் இலக்கியத்திற்கு ஈடாகாது என்று எனக்குத் தெரியும் என மகாலேவால் கர்வத்துடன் பேசி, மொழித்திணிப்பை செய்ய முடிந்துள்ளது.

இன்று இங்கிலிஷ் இல்லாமல் இந்தியனுக்கு குறிப்பாக தமிழருக்கு ஏது வாழ்வு என பேசுவதைப் பார்த்து, மகாலே போன்றவர்களின் கம்பனிக்கார கல்லறைகள் பூத்து மகிழலாம். மகாலேவின் புகழ் வாய்ந்த மேற்கோளை அனைவரும் அறிவோம்

We must do our best to form a class who may be our interpreters between us and the millions we govern, a class of persons Indian in blood and colour , but English in tastes, in opinions, in morals and in intellect

Communicate through English language, a complete education on English system என கம்பனி-மகாராணி அதிகாரம் இங்கு செய்துவிட்டு போனது. இனி எவராலும் அதை மாற்ற இயலாது என 75 ஆண்டுகள் குடியரசு இந்தியா அதை வரமாக பார்த்து கொண்டாடிவருகிறது.

உள்ளூர் கல்வி முறை எதற்கு உதவப்போகிறது- no practical value and no market utility and so for market utility English என அவர்கள் தங்கள் மொழித்திணிப்பை இங்கு செய்தனர். இன்று திணிக்கப்பட்ட ஒன்று , மிக அவசியமானதாக அதே market utility conceptல் வரவேற்கப்படுவதைக் காண்கிறோம்.

இந்தியாவின் பல்வேறு பரப்புகளில் வாழ்ந்த மக்கள் உற்பத்தியில் , 1600க்கு முன்னர் ஈடுபடாமல்தான் வாழ்ந்தனரா? சந்தை பயன்பாடு என்பதை அறியாமல் தான் இருந்தனரா? அவரவர் பேசிய மொழியில் தானே உற்பத்தி சார்ந்தவை நடந்திருக்கும். வணிகம் சார்ந்து பிறருடன் கூட புதிய மொழியும் சேர்ந்திருக்கும்.

மனித வாழ்க்கையே கற்பிதங்களின் கை மாற்ற நடவடிக்கையாகவே செல்கிறது. கற்றுக்கொடுப்பது, கற்றுக்கொள்வது எல்லாமே ஒருவகை திணிப்புதான். தாய்மொழி என்பது கூட இயற்கையானதல்ல, சூழல் சார்ந்த ஒன்றுதான். குறிப்பிட்ட மொழி சார்ந்த சமூகச் சூழலில்தான், அதன் தலைமுறை தொடர்ச்சி அம்மொழியை எடுத்துச் செல்லும்.

எவர் ஆட்சியாளரோ, ஆதிக்கக்காரரோ அவரின் மொழி, மதம் இன்னும் பிறவற்றின் திணிப்புகள், மென்மையான சாயல்கள் , உள்நாட்டு சமுக மக்களின் மீது super impose ஆவதும், ஊடாடி கலப்பதும் நடந்துகொண்டிருந்துதான் இருக்கும். கதவடைப்பு இருந்திருக்கலாம். உள்ளே இருப்பவரே திறந்தும் விட்டிருக்கலாம்.

தாய்மொழியோ அல்லது வேறு இந்திய மொழி எதற்குமே market utility இல்லை- aspirational aspects ல் அவை வராது என்பது சார்ந்த பொதுபுத்தி பெரும் சோகமே. என்று இந்திய மொழிகள் செல்லுபடியாகும் என்கிற கேள்வியாவது தொடருமா?

12-3-2025

march 13

Marx and Ecology என்கிற நூலுடன் இணையாக Gandhi and Environment என்கிற நூலையும் சேர்ந்து வாசிக்க வேண்டும் என நினைத்தேன். நினைத்தது நினைத்தப்படி நடந்துவிடுமா?

மார்க்ஸ் குறித்து பெண்ணியவாதிகளில் சிலரும், சுற்றுசூழல் ஆய்வாளர்களும் விமர்சன பார்வையைக் கொண்டு பேசி வருவதை துண்டுதுக்காணியாக ஆங்காங்கே பார்த்தபோது, ஜான் பெல்லமி எழுதிய Marx and Ecology படிக்க ஆர்வம் எழுந்தது. மார்க்சின் எழுத்துக்களிலிருந்து அந்த விமர்சனங்களை ஜான் பெல்லமி எதிர்கொள்ள முயற்சிக்கிறார் என்ற 'ரிவ்யு' பார்த்த ஆர்வத்தில் முதல் அத்தியாயம் படித்துவிட்டு நிறுத்திவிட்டேன். மனமும் மூளையும் சினுங்கினால் இப்படி ஆவதுண்டு.

காந்தியின் 'ஹிந்த் ஸ்வராஜ்- இந்திய சுயராஜ்யம்' குறித்து நூற்றுக்கணக்கான பக்கங்களை பார்த்தபோது, காந்தியின் சுற்று சூழல் சிந்தனையை சற்று விமர்சன பார்வையுடன் குஹா சொன்னதும், குமரப்பாவை green economist என ஏற்றதையும் பார்த்தேன். அப்போது Marx and Ecology தான் படிக்கமுடியாமல் போனது, குறைந்தது 150 பக்கத்திற்குள் வந்துள்ள

Gandhi and Environment (Analysing Gandhian Environmental thought) என்பதையாவது படிக்கலாம் என எடுத்தேன்.

இணைய வழி (மார்க்ஸ் இணையத்தில் சுட்டது) படிப்பதைவிட, பழகிய காகித வழி படிப்பது கொஞ்சம் கண்ணிற்கு இதமாகவுள்ளது என்பதும் காரணமாகிறது.

காந்தியின் சுற்று சூழல் சிந்தனைகளை அவரது ஆஸ்ரம சூழல், எழுத்து, பேச்சுக்களின் வழியே கோஷூ மற்றும் ஜான் மூலக்கட்டு இருவரும் மிக நேர்த்தியாக தந்துள்ளனர். வரிகளின் அடர் அர்த்தம்- பொருள் கொள்ளவேண்டிய நிலையில் நிதானமாகத்தான் நூலை கடக்க முடிந்தது.

பேரா ஜான் மூலக்கட்டு எழுத்துக்கள் சிலவற்றை மிக ஆழமான Gandhi Marg quarterly இதழ் வழி பார்த்திருக்கிறேன். சொற்செட்டுடன் ஆழம் உணர்த்தும் தேர்ந்த வரிகளை ஆசிரியர் இருவரும் நூல்வழி கொடுத்துச் செல்கின்றனர். நூலின் ஆன்மா எங்கேயாவது தென்படுகிறதா எனத்தேடி இறுதி பக்கம்வரை சென்றபோது, என்னை

ஏமாற்றாமல் ஆசிரியர்கள் அதனை மடித்து வைத்துள்ளதை கண்டடைந்தேன்.

நமது குடியரசுத்தலைவராக இருந்தபோது திரு கியானி ஜயில் சிங் தன் ஆதங்கம் ஒன்றை இரு சொற்றொடர்களில் இணைத்து சொல்லியிருந்தார். குலாமுன் க ரஹ்னுமா- ஆசாதூன் க ரஹ்னுமா. அதாவது 'அடிமை மக்களின் தலைவராக' பிரகாசமாக வலம் வந்த காந்தியை 'விடுதலை மக்களின் உன்னத தலைவராக' வலம் வர செய்யத் தவறிவிட்டோமே என்கிற ஆதங்கத்தை கியானி வெளிப்படுத்தியிருந்தார். இதில் பெரும் அர்த்தபாவங்களை இன்றுள்ள அரசியல் சூழலில் நான் உணர்கிறேன்.

விடுதலை இந்தியாவின் கட்டுமானத்தை நேரு தன் வழியில் செய்யலானார். இன்று 75 ஆண்டுகளில் இந்தியா வளர்ந்து வரும் பொருளாதாரம் என கவனிக்கப்படுகிறது. ஏற்றத்தாழ்வுடன் வளர்ச்சி என்கிற கவலையுடன் , சமத்துவத்திற்கான போராட்டங்கள் ஓரளவு நடந்துகொண்டிருக்கின்றன.

சுற்றுசூழலை பொருட்படுத்திக்கொள்ளாத பொருளாதார வளர்ச்சி- தொழில் கட்டுமானங்கள் உலகு முழுக்க விவாதமாகியுள்ளது. 'Industrial development or bio industrial development' என்கிற கேள்வியை காந்தியை முன்வைத்து இந்த நூலில் விவாதித்துள்ளனர். வெறும் பொருளாதாரம் என பேசியது போதும் ecology economics எனப்பேசுங்கள் என்கிற குரல்கள் வலுத்து வருகின்றன. தட்பவெப்ப மாற்றங்கள்- பல்லுயிர்த்தன்மை விவாதங்கள் பெருகி வருகின்றன.

இவ்வுலகின் நிம்மதிக்கு நான்கு pro க்களை இந்நூல் சொல்கிறது. Pro Nature, Pro Poor, Pro women, Pro Job கட்டுமானங்கள் என திசைகாட்டுகிறது. அதேபோல் நான்கு பொல்லாங்குகள் குறித்து இந்நூல் தன் கவலையை பகிர்ந்துகொள்கிறது.

All absorbing consumerism, depletion of natural resources, devastating ecocide and ever growing health hazards.

இந்நூல் ஏராள அறிஞர் பெருமக்களை அவர் தம் உழைப்பை எழுத்துக்களை சுட்டிக்காட்டுகிறது.

காந்தி தொழில்நுட்ப சமூகம் குறித்து இப்படி சொல்லியிருந்தார்.

A technological society has two choices. First it can wait until catastrophic failures expose systemic deficiencies, distortions and self deceptions. Secondly, a culture can

provide social checks and balances to correct for systemic distortion prior to catastrophic failures.

காந்தி பேராசை குறித்து ஏராளம் பேசியுள்ளார். இங்கு ஒன்றை தருகிறேன். Man's happiness lies in contentment. He who is discontented, however much he possesses, becomes a slave to his desires.

Economic security not possible without Ecological security

என இந்நூல் உட்கிடக்கையாக சொல்கிறது. இனியும் நீட்ட வேண்டாம் எனக் கருதி இந்நூல் பரிந்துரைக்கும் மய்ய செய்திக்கு வந்து விடுகிறேன். முக்கிய synthesis ஆக எனக்குப் படுகிறது.

India's success will be measured not by homogenising a heterogeneous situation, but by the success with which diverse societies can be harmonised and can coexist and become mutually reinforcing and supportive -

Where traditions and modernity are appropriately blended, where man made capital does not become destructive of the natural capital.

Following a democratic path, there is a need for a creative synthesis of the Gandhian and the Nehruvian models. Obviously, from Kumarappa's Economic of Permanence, the country has to move towards Economic Ecology of Permanence

ஆழமான நூல். TERI The Energy and Resources Institute 2009ல் கொண்டுவந்த நூல். 2015 வரை பதிப்புகள் வந்துள்ளன. ஆர்வம் உள்ளவர் பார்க்கலாம்.

13-3-2025

march 13 (reposting)

Communism என்கிற ஹரால்ட் லாஸ்கியின் புத்தகம் இந்திய பதிப்பில் ஆகார் நிறுவனத்தாரால் 2022ல் (ஜன - பிப்) வெளிவந்துள்ளது. ரூ 325 வைத்துள்ளனர். அமேசான் மூலம் பெறமுடிகிறது.

ஹரால்ட் லாஸ்கி பிரிட்டிஷின் புகழ்பெற்ற அரசியல் அறிஞர். ஏராள புத்தகங்களை எழுதியிருப்பவர். இந்த கம்யூனிசம் புத்தகம் கூட இணையத்தில் கிடைக்கிறது. ஆனாலும் 1927ல் லண்டனில் வெளியான இந்தப் புத்தகம் இப்போது ஆகாரால் மீண்டும் மலிவுவிலையில் நமக்கு கிடைக்கத்துவங்கியுள்ளது. மார்க்சியர் மற்றும் அரசியல் ஆர்வலர் எவரும் படிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ள புத்தகமது. லாஸ்கியின் இந்த நூல் 250 பக்கங்களைக்கொண்டது. முன்பாக அவரின் புகழ் வாய்ந்த சிறு பிரசுரம் (52 பக்கங்கள்) Karl Marx An Essay என்பதாகும். இந்த சிறு பிரசுரத்தை 1942ல் கார்ல் மார்க்ஸ் வரலாற்றை (இன்றும் தமிழில் சிறந்த புத்தகமாக கருதப்படுவது) எழுதிய வெ சாமிநாத சர்மா பயன்படுத்திக்கொண்டார். வெ சா இரு புத்தகங்களை ஆதாரமாக கொண்டு அதை எழுதினார். ஒன்று லாஸ்கி- மற்றொன்று இசையா பெர்லின் (மார்க்ஸ் குறித்த முதல் 10 சிறந்த புத்தகங்களுள் இசையா புத்தகமும் '1939ல் வந்தது' இருப்பதைக் காண்கிறோம்)

இனி லாஸ்கியின் கம்யூனிசம் புத்தகம் பற்றி..

மார்க்சியர்களும் இதை நல்ல குறிப்பு புத்தகமாக பயன்படுத்திக்கொள்ளமுடியும். மார்க்ஸ் எப்படி தனது theoryயை வந்தடைந்து வலுப்படுத்தினார் என்பதை இந்நூல் நமக்கு சொல்லும். ஹெகல் குறித்த சிறு விளக்கம், வரலாற்றை மார்க்ஸ் எப்படி விளக்கினார்- வர்க்கப்போராட்டம்- மார்க்சிய பொருளாதார விளக்கங்கள்- அரசு குறித்து மார்க்சின் பார்வை, கம்யூனிச உத்தி , லாஸ்கியின் முடிவாக வந்தடையும் கருத்துக்கள் என இந்நூல் விரிகிறது.

மார்க்சின் கருத்துக்களை சொல்லி அதில் அதீத உரிமைக்கோரல்கள், emotional agitator என பேசும் இடங்கள் மீது மெலிதான விமர்சனத்தை லாஸ்கி வைக்காமல் இல்லை.

இந்த புத்தகம் வேறு ஒருவகையிலும் பயனுள்ளதாக இருக்கிறது. மார்க்ஸ் எதை எங்கிருந்து எடுத்து அதை தன் சிந்தனை ஒளியேற்றி தருகிறார் என்பதும் ஆங்காங்கே தொட்டுக்காட்டப்பட்டுள்ளது. சில நாட்களுக்கு முன்னர் தமிழக அறிஞர்களான தோழர் அருணன், திரு பி ஏ கிருஷ்ணன் டிவி விவாதத்தில் மார்க்சின் From each according to his

powers, to each according to his needs பற்றி வேறொரு contextல் பேசிக்கொண்டனர். இதை மார்க்ஸ் எங்கிருந்து பெற்றார் எனபதை லாஸ்கி சொல்வார். இந்த வரிகள் ஜெரார்ட் வின்ஸ்டான்லி என்பவரால் 1652ல் Law of Freedom in a platform ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல் value as a product of labour என்பதை அவர் ரிகார்டோவிடமிருந்தும், டயலாக்டிக்ஸ் என்கிற மெதடாலஜியை ஹெகலிடமிருந்தும், Babeuf என்பாரிடமிருந்து idea of proletarian dictatorship என்பதையும் எடுத்து மார்க்ஸ் வளப்படுத்தியுள்ளார்.

மார்க்ஸ் குறித்த மேலான மதிப்பீடுகளை லாஸ்கி தராமல் இல்லை. இந்த புத்தகம் விமர்சனவகைப்பட்டும் புகழுரைகள் கொண்டும் critically acclaimed வகைப்பட்ட ஒன்றானது எனக் கருத இடமுண்டு. வாய்ப்புள்ளவர்கள் மின் புத்தகமாகவோ அல்லது ஆகாரிடம் வாங்கியோ வாசிக்கத் தகுந்த புத்தகம்

march 14

Marx on Gender and Family- A critical study

(மார்க்ஸ் முழுமையாக ஆண் மய்யவாதியாக எழுதினாரா? மகப்பேறு என்கிற ஒன்றை வெறும் 'பயலாஜிகல்'- உயிரியல் அம்சமாக மட்டும் பார்த்தாரா- அதை ஏன் உழைப்பு பிரிவினையாக வகைப்படுத்தவில்லை போன்ற பெண்ணியலாளர் கேள்விகளை சிறு அளவில் விவாதிக்கிறது இக்கட்டுரை)

பாலினம் மற்றும் குடும்பம் பற்றி மார்க்ஸ் எழுதியதன் மீதான விமர்சன வாசிப்பு என்கிற நூல் ஹீதர் ஏ பிரவுன் அவர்களால் எழுதப்பட்ட ஒன்று. 2012ல் வெளியான நூல். நூலின் ஆங்கிலத் தலைப்பு Marx on Gender and Family- A critical study. வாசிப்பதற்கு சற்று கடுமையான நூல்தான். முடிந்தவரை எளிமைப்படுத்தி தர முயற்சிக்கிறேன்.

பெண்ணிய கோட்பாட்டாளர்களில் மார்க்சை ஏற்று, அதில் பெண்ணியம் சார்ந்த அம்சங்களையும் காலத்திற்குரியதாக தேவைக்கேற்ப வளப்படுத்த முடியும் என நினைப்பவர்களும் இருக்கின்றனர். அது சாத்தியமில்லை என மறுத்து ஏற்காதவர்களும் இருக்கிறார்கள்.

மார்க்சியத்தையும் பெண்ணியத்தையும் இணைத்து குழைத்து சோசலிச பெண்ணியம் என்கிற கருதுகோளை வளப்படுத்த முடியுமா என்கிற விவாதமும் தொடர்கிறது. அதாவது முதலாளித்துவத்திற்கு எதிரான பெண்ணியம் என்பதிலிருந்து இதை மேல் எடுத்து செல்ல முடியுமா எனவும் விவாதிக்கிறார்கள்.

மார்க்சின் 1844 கைப்பிரதிகள், கம்யூனிஸ்ட் அறிக்கை, மார்க்ஸ் எங்கெல்சின் புனித குடும்பம், ஜெர்மன் கருத்தியல், மூலதனம், மார்க்ஸ் எழுதிய செய்தி கட்டுரைகள், எங்கெல்சின் குடும்பம் தனிச்சொத்து , அரசு நூல் போன்ற பலவற்றிலிருந்து அவர்கள் பெண் , குடும்பம் குறித்து எழுதியவைகளை வைத்து பெண்ணியவாதிகள் எப்படி ஏற்பு- மறுப்பு அடிப்படையில் விவாதிக்கிறார்கள் என்பதை இந்நுலாசிரியர் பிரவுன் தொகுத்து கொடுத்துள்ளார்.

'Marxist theory of women and society' என ஒன்றை கட்ட முடியுமா என தான் முயற்சிப்பதாகவும் ஆசிரியர் சொல்கிறார். பெண்களின் வீட்டு

வேலைகள் என்பதற்கான 'கோட்பாட்டாக்கம்' குறித்து சிந்திக்க பெண்ணியலாளர் முயற்சித்துள்ளனர்.

ராயா துனயெவ்ஸ்கயா (Dunayevskaya) மார்க்சை கொண்டாடிய பெண்ணிய சிந்தனையாளர் என அறிவோம். அவர் மார்க்சிடம் பெண் விடுதலைக்கான தத்துவக் கூறுகள் இருப்பதை பேசியவர். பெண் விடுதலை என்பதுடன் மார்க்சின் தத்துவத்தை அவர் இணைத்தார் என ஹீதர் ப்ரவுன் பாராட்டிச் சொல்கிறார்.

மார்க்ஸ் தன் மூலதன நூலில் வால்யூம் 1ல் பெண் மற்றும் குழந்தை தொழிலாளர் உழைப்பு குறித்து 80 பக்கங்களுக்கு மேல் விவாதித்துள்ளதை, மார்க்சிடம் நம்பிக்கைக் கொண்ட பெண்ணியவாதிகள் எடுத்தாள்கின்றனர்.

கிறிஸ்டைன் டி ஸ்டீபனோ என்கிற பெண்நிலை எழுத்தாளர் மார்க்சை விமர்சிப்பவர். மார்க்சின் எழுத்துக்கள் ஆண் தொழிலாளர் மய்யம் கொண்ட தாக்குதல் தன்மை எழுத்து- 'masculine and aggressive discursive' என்கிற விமர்சனம் அவரிடம் வருகிறது. ஆண் பெண் இருமையை சமன் செய்து ஒத்திசைவு ஏதும் செய்யாமல் அவர் முரணை தீர்க்கப் பார்க்கிறார் என்கிற விமர்சனமும் காணப்படுகிறது. மார்க்ஸ் பாரம்பரியமாக ஆண்களின் தொழிலை எடுத்து விவாதிக்கும் போது, மரபுரீதியான பெண் உழைப்பை விடுகிறார் என்கிற கேள்வியை டி ஸ்டிபனோ எழுப்புகிறார்.

மேலும் ஆணின் விடுதலை ஆளுமை என்பதற்கான தேவையாகவே 'இயற்கை- பெண் மீதான' ஆணின் செயல்பாடுகள் அமைவதாக இப்பெண்ணியவாதிகள் விமர்சித்தனர். டி ஸ்டிபனோ இவ்வாறு எழுதுகிறார்

For all its claims to emancipation and liberation, this vision of unconstrained humanity relies on a sinister mirror image to which women, nature and necessity are bound and against which modern men must relently test their capacities and limits.

கிளாடியா லீப் என்ற எழுத்தாளர் டி ஸ்டிபனோ போல் கடுமையாக பேசாவிட்டாலும் மார்க்சால் இயற்கை மற்றும் கலாச்சாரம் என்கிற இருமை முரணை காண முடியாமல் போனதைச் சொல்கிறார். லீப் இவ்வாறான முடிவிற்கு வருவதாக பிரவுன் குறிப்பிடுகிறார். தன் காலத்தின் பாரபட்ச பார்வைக்கு அவரும் உள்ளானார் என்கிறார்.

Marx was unable to overcome completely the prejudices of his time, especially with regard to women.

இளம் மார்க்ஸ் அந்நியமாதல் சிந்தனையொட்டி பேசும்போது இந்த புரிதலை நமக்கு வழங்கினார்.

Communism is the positive abolition of private property, of human self-alienation, and thus the real appropriation of human nature through and for man. It is, therefore, the return of man himself as a social, i.e., really human, being, a complete and conscious return which assimilates all the wealth of previous development. Communism as a fully-developed naturalism is humanism and as a fully-developed humanism is naturalism. It is the definitive resolution of the antagonism between man and nature, and between man and man. It is the true solution of the conflict between existence and essence, between objectification and self-affirmation, between freedom and necessity, between individual and species. It is the solution of the riddle of history and knows itself to be this solution.

மதம், குடும்ப உறவுகள், ஒழுக்க போதனைகள், கலை, அறிவியல் என பலவும் குறிப்பிட்ட உற்பத்தி முறைகளின் வெளிப்பாடுகள் என அவர் கருதினார். தனியார் சொத்துடைமை அழிவு என்கிற புதிய உற்பத்தி முறையில் இவைகளும் மாறும் என அவர் கருதினார். இதை விளக்கும்போது பிரவுன் இவ்வாறு மார்க்சின் சாதகமான பார்வையை எடுத்துச் சொல்கிறார்.

Thus, Marx points to the need for the family to be transformed as well, although he does not detail this transformation here. ….for Marx, there is no essential human nature. Instead, there are only 'historically specific forms of human nature, that is, human nature specific to feudalism, to capitalism, to socialism, and so on'. Thus, for Marx, human natures can and do change over time

அதாவது காலகாலத்திற்கான மாறா மனித சுபாவம் என எதுவும் இருப்பதாக மார்க்ஸ் கருதவில்லை. எனவே ஆண் பெண் உறவு மேம்பாட்டையும் அவர் அதை உற்பத்தி உறவுகளின் சமூக கட்டம் என்கிற அடிப்படையில் மாறக்கூடிய ஒன்றாகப் பார்த்துள்ளார். மனிதரின் சிந்தனைக்கும் செயலுக்குமான இடைவெளி குறைந்து ஒற்றுமை இணக்கம் அதிகரிக்க அதிகரிக்க மனிதன் அந்நியமாதல் குறையும் என அவர் நம்பினார்.

இயற்கை- மானுட உறவிலும் அவர் இயக்கவியல் பார்வையை அனுசரித்தார். இயற்கையை அடக்கி மேலாண்மை செய்வது என்பதை மார்க்ஸ் நிராகரித்தவராகவே இருக்கிறார். காந்தியால் இங்கு மார்க்சை சந்திக்க முடியும். இங்கு பிரவுன் மார்க்சை அழகாக விளக்குவார்.

To dominate nature would lead to the domination of others, since for Marx nature is, in a dialectical sense, part of humanity. It is humanity's inorganic body.

மார்க்சின் கீழ்கண்ட வரிகள் பிரவுன் பேசியதை வலுப்படுத்துவதாக இருக்கும்.

To say that man lives from nature means that nature is his body with which he must remain in a continuous interchange in order not to die. The statement that the physical and mental life of man, and nature, are interdependent means simply that nature is interdependent with itself, for man is a part of nature

அலிசன் ஜாக்கர் என்பவர் மார்க்ஸ் ஏன் பெண்களின் பேறுகால குழந்தை உற்பத்தியை கவனத்தில் கொள்ளவில்லை என கேள்வி எழுப்புகிறார். அதை வெறும் biological reproduction எனப் பார்த்து விட்டு விடுகிறாரா எனக் கேட்கிறார்.அது உழைப்பு பிரிவினையில் (division of labour ல்) வராதா என மிக முக்கிய வினாவை எழுப்புகிறார்.

இதற்கு பதிலாக பிரவுன் காட்டுவது, அலிசன் மார்க்சின் அந்நியமாதலை வெறும் உற்பத்தி கேந்திர நிகழ்வாக பார்க்காமல், அனைத்து அம்சங்களிலும் நீட்டித்து பார்க்க வேண்டும் என்பதாக இருக்கிறது. பாலின உறவுகளிலும் பாருங்கள் என்கிறார்.

மார்க்சின் அதிகம் மேற்கோளாக காட்டப்படாத இந்த வரிகளை பிரவுன் தருகிறார்.

The relation of man [Mann] to woman [Weib] is the most natural relation of human being to human being. It indicates, therefore, how far man's [Mensch] natural behavior has become human, and how far his human essence has become a natural essence for him, how far his human nature has become nature for him. It also shows how far man's [Mensch] needs have become human needs, and consequently how far the other person [Mensch], as a person, has become one of his needs, and to what extent he is in his individual existence at the same time a social being

குடும்பம் என்பது குறித்தும் அதன் தன்மை குறித்தும் மார்க்சிற்கு இப்படிப்பட்ட கருத்து இருந்தது

The organisation of the family is conditioned by the general development of society. Only certain family-structures can occur at a definite stage of development.

குடும்பத்தில் ஆண் தலைமைதான் பிற உறுப்பினர்களின் உழைப்புத்தன்மையையும் நிர்ணயிப்பதாக இருக்கிறது என்ற எதார்த்தத்தை மார்க்ஸ் கணக்கில் கொள்ளாமல் இல்லை. மார்க்ஸ் இவ்வாறு சிந்தித்ததையும் நம்மால் பார்க்கமுடிகிறது

Obedience, piety, fidelity in marriage, etc.' may be the ideological and moral element of the family 'but the real body of the family . . . [is] the property relation, the exclusive attitude in relation to other families, forced cohabitation – relations determined by the existence of children, the structure of modern towns, the formation of capital, etc'

ஒரு சமுகத்தில் பாட்டாளிகள் ஏற்படுத்தும் புரட்சியாலேயே அங்கு குடும்ப வன்முறைகள் உடனடியாக மறைந்து விடும் என்கிற மாயையில் மார்க்ஸ் இல்லை என்பதை அவரது கீழ்கண்ட வரிகள் நமக்கு உணர்த்தும்.

'The revolution did not topple all tyrannies. The evil which one blames on arbitrary forces exists in families, where it causes crises, analogous to those of revolutions'

சோவியத் சீன மற்றும் சோசலிச கட்டுமானம் செய்ததாக சொல்லப்படும் எங்கும் இதுதான் நிலைமை என பிரவுன் தன் வாதமாக இதை முன் நகர்த்தியுள்ளார். (பக் 57/243)

ப்ரவுன் இங்கு சொல்லவருவது : Marx notes two principal aspects of women's oppression. The first of these is institutional. The law itself recognises the authority of the husband over his wife. The second involves social relations more generally.

இந்த பொது சுரண்டல் முதலாளித்துவத்தை ஒழிக்காமல், குடும்ப சுரண்டலிலும் மாற்றம் வராது என பொதுவாக உலகம் முழுதும் மார்க்சியர்கள் எண்ணி வந்ததைத்தான் பெண்ணியவாதிகள் விமர்சித்து வருகின்றனர். வீட்டிலும் நாட்டிலும் பெண்ணிய உரிமை என்பதை சோசலிச மாற்றம் என்கிற பின் தேதிக்கு ஏன் ஒத்தி வைக்கிறீர்கள் என அவர்கள் வினா எழுப்பினர். இது ஆண் ஒவ்வொருவரையும் பார்த்து கேட்கப்பட்ட கேள்வித்தான்.

வர்க்கப் போராட்டம், பாலின சமத்துவப் போராட்டம் இரண்டையும் தனித்தனியான ஒன்றாகவோ, வர்க்கப்போராட்டத்திற்கு துணையான 'செகண்டரி' தான் பாலினப் போராட்டம் என்றோ மார்க்ஸ் சொன்னார் என்பது அவரை மிக குறுக்கி புரிந்துகொள்வதாகும் என பிரவுன் ஏற்கிறார்.

கம்யூனிஸ்ட்கள் 'communal ownership of women' என்பதற்காக நிற்கிறார்கள் - அவர்கள் பெண்களையும் பொது உடைமையாக்கிவிடுவார்கள் என்ற குற்றச்சாட்டை எங்கெல்ஸ் கடுமையாக மறுத்து எதிர்வினை ஆற்றினார். சோசலிசம் என்பது பாலின தொழிலாளர் விமோசனத்தையும், அப்படியான ஒன்றை சமுகத்தில் இல்லாமல் ஆக்கி பெண் கண்ணியத்தை மீட்கக்கூடிய சக்தி கொண்டதாக இருக்கும் என எங்கெல்ஸ் எழுதினார்.

மார்க்ஸ் எங்கெல்ஸ் இருவரும் மானுட அனைத்து உறவுகளையும் வெறும் ரொக்கப்பண உறவாக சுருக்கி கௌரவத்தை பாழ்படுத்தியதாக முதலாளித்துவம் மீது விமர்சனம் வைத்தனர். அதன் மீட்சிக்கு பாட்டாளிகள் முதன்மைக் கருவிகள் என அவர்கள் கருதினர்.

மாறிவரும் சமுக நிலைமைகளில் எழுகிற உரிமைக் குரல்களுக்கு செவிமடுத்து மார்க்சியர் ஆங்காங்கே தங்கள் அன்றாட போராட்டங்களை வலுப்படுத்தும் பயிற்சியில் இல்லாமல் இல்லை. இந்தியாவில் பாலின சமத்துவ போராட்டம் வலுப்பட்டு வருகிறது. பார்க்கலாம். நல்வாழ்த்துகள்

8-3-2025

march 15

ரங்கநாத ராமச்சந்திர திவாகர், கர்நாடகாவில் வாழ்ந்த விடுதலை போராட்டக்காரர்- காந்திய போராளி. திலகரிடம் பொதுவாழ்வை மாணவர் பருவத்தில் தொடங்கி, காந்தியிடம் சென்றவர்.

ஏராள நூல்களை எழுதிய அறிஞரும் கூட. அவரின் காந்தியை எதிர்கொள்தல் - My Encounter with Gandhi அளவில் சிறிய நூல்தான். காந்தியுடன் பயணிக்கும்போது, கர்நாடகாவில் திவாகரும் மற்ற காங்கிரஸ் நண்பர்களும் எதிர்கொண்ட போராட்ட வடிவங்கள், எண்ண ஓட்டங்கள்- காந்தியிடம் கற்றதற்கு மாறாக சென்றபோது ஏற்பட்ட மனச் சிக்கல்களை அவர் இதில் பதிவிட்டுள்ளார். திவாகர் இந்த நூலை எழுதிய போது அவருக்கு வயது 95 ஆம். இந்த நூல் வந்து 36 ஆண்டுகள் ஆகிவிட்டன.

சுவையான ஓரிரு செய்திகளும் கிடைக்கின்றன. காந்திய தருணங்கள் முழுக்க வாழ்க்கைப் பாடங்களே என்ற உணர்வை திவாகர் இந்நூலில் ஏற்படுத்துகிறார். கற்றபடி நிற்றல் எப்படி பெரிய போராட்டமாக இருக்கிறது, ஏன் தோல்வியடைகிறோம் என்கிற புரிதலையும் இந்நூல் ஏற்படுத்தலாம்.

1918 காலம். பெல்காம் பகுதி ஒன்றில் காங்கிரஸ் மாநாடு. காந்தி அவ்வளவு பெரிய தலைவராகவில்லை என்றாலும், மரியாதையுடன் பார்க்கப்படும் நிலை உருவாகிவிட்டது. இளைஞராக திவாகர் உட்பட பலர் வரவேற்புகமிட்டியில். வரவேற்பு கமிட்டி தலைவரை, அங்கிருந்த காங்கிரஸ் உயர் தலைவர் கடுமையாக திட்டி குதறிவிட்டார். வரவேற்பு கமிட்டிக்கு இது பெரும் கௌரவ பிரச்சனையானது. மதிய உணவு போய்க் கொண்டிருக்கிறது. வரவேற்பு கமிட்டி தொண்டர்கள் இனி வேலையை தொடர்வதில்லை- strike என முடிவெடுக்கின்றனர். திவாகர் காந்திக்கான தொண்டர். காந்தியிடம் இனி உங்களுக்கு உதவ முடியாது- வரவேற்பு கமிட்டி தொண்டர்கள் வேலைநிறுத்தம் என்கின்றனர்.

இந்த நூலின் 4 வது அத்தியாயத்தில் இப்படி தலைப்பை இந்நிகழ்விற்கு திவாகர் கொடுத்துள்ளார். Trade Union Tactics Not for Volunteers. திவாகர் சொன்னது, காந்தி பதிலாக தந்த வரிகளை அப்படியே இங்கு தருகிறேன். திவாகருக்கு வயது அப்போது 24.

“ I went up to Gandhi hesitantly and said according to the orders of captain (reception committee) , I was stopping serving. He (Gandhi) looked at me with a gaze I cannot forget easily. He asked

What kind of volunteers are you? At any rate I do not require the services of people like you. You speak of a strike. Volunteers never strike. It is labourers who work for wages that strike”

திவாகர் வெட்கமடைந்தேன் என எழுதுகிறார். Volunteers never strike - தொண்டர் எனில் வேலைநிறுத்தம் இல்லை என்கிற பாடம் திவாகருக்கு மட்டுமானதல்ல- உலக முழுதும் மானுட சேவையில் , அவரவர் வழிக்கான தொண்டு குறித்த பாடமாகவேப் படுகிறது.

வேறு ஓர் அனுபவத்தையும் திவாகர் இதில் தருகிறார். கூட்டத்திற்காக கூட்டம் சேர்க்காதே என்கிற அனுபவமது. தீண்டாமை ஒழிப்பு எனப் போட்ட கூட்டத்தில், அப்படி சமுகக் கொடுமைக்கு ஆளானவர் எவரையும் திரட்டாமல், பிறரை கூட்டமாக திரட்டி வைத்திருந்தனர். காந்தி இதையறிந்து கேட்ட கேள்வி Whom am I speak to? சம்பந்தப்பட்டவர்களுக்கான கூட்டம்- அவர்களுக்கான பிரச்சனையை புரிந்துகொள்தல் எனில் , அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து திரட்டுதல்- விவாதித்தல் என்ற பாடத்தை காந்தி இங்கு தந்து சென்றார்.

குவிட் இந்தியா காலத்து தலைமறைவு வாழ்க்கை- இரகசிய செயல்பாடுகள்- அன்றைய சோசலிஸ்ட்களுடன் திவாகர் செயல்பட்டது- காந்தியை சந்தித்து தான் செய்தது சரியா என விவாதித்தது, தன் மனப்போராட்டத்தை நீள் கடிதமாக காந்திக்கு எழுதி , பதிலைப் பெற போராடியது போன்ற சில அம்சங்களை நூலில் நாம் பார்க்கலாம். Secrecy a sin, underground life a taboo என இந்த இயல் தலைப்பை பார்க்கலாம்.

காந்தியுடன் போன மனிதர் ஒருவரின் உள்முக போராட்டப் பயணமாகவே திவாகரின் நூலை நான் புரிந்துகொள்கிறேன். மிகச் சிறிய நூல்தான். இணையத்தில் கிடைக்கிறது. காந்தி அமைதி நிறுவனம் டெல்லியிலும் விலைக்கு கிடைக்கிறது.

15-3-2025

march 16

Constitutional Assembly Debates (CAD)

இந்திய அரசியலமைப்பு குறித்து தெரிந்து கொள்ள ஆர்வத்தை தூண்டிய நூல்களாக சிவராவ், வி பி மேனன், கிரான்வில் ஆஸ்டின் மற்றும் சிலரின் ஆங்கில நூல்கள் பெரிய அளவு உதவின. தமிழில் சில நூல்களையும் இணைய வழி வாசிக்க முடிந்தது.

ஆனாலும் மனது குறைபட்டுக்கொண்டே இருந்தது. குறையும் பேராசையும் தொந்தரவாயின. ஒவ்வொரு முறையும் இந்திய அரசியல் அமைப்பு அசெம்பிளியின் முழு விவாதத் தொகுப்பையும் இணையத்தில் பார்க்கும் போது, இதெல்லாம் பார்க்காமலேயே, நீயும் 'பேச்சு' வேற கொடுக்கிறாய் என்கிற கேள்வியும் எழுந்தது.

Constituent Assembly Debates (CAD)யோ 6756 பக்கங்களைக் கொண்ட- 12 வால்யூமையும் ஒன்றாக- ஒரே பிடிஎஃப் ஆக கொண்ட பெரும் களஞ்சியம். CAD யை இனியும் விட்டுவிடக்கூடாது என்கிற சவாலை ஏற்பது என மனம் அசட்டுத்தனமாக முடிவெடுத்தது. 'ஒரு கண்' பார்த்துவிடலாம் என முடிவானது. தேவதைகள் அஞ்சக்கூடியவற்றிற்கு சாத்தான்கள் சர்வ சாதாரணமாக போக விழையுமே.

CAD அவை நடவடிக்கைகள் டிசம்பர் 9, 1946 முதல் ஜனவரி 24, 1950 காலத்திற்குரியவை. இவை 12 வால்யூம்களில் அடக்கப்பட்டுள்ளன. குடியரசாகி 75 ஆண்டுகள் நிறைவுத் தருவாயில், இந்தியக் குடிமகன் என்கிற வகையில் எனது mental labour யை இதற்கும் தருவது என நினைத்து பிப்ரவரி 18, 2025 அன்று தொடங்கினேன். முழுமையாக இணைய வாசிப்பாகவே இது அமையும்.

நாடாளுமன்ற செயலகம் முன்பு எப்பவோ ரூ 3000க்கு 12 வால்யூமையும் மலிவு விலையில் வெளியிட்டுள்ளனர். இப்போது அச்சில் இல்லை. தனியார்கள் மிக அதிக விலையில் போட்டு விற்று வருகின்றனர். வாங்க முடியவில்லை. எனவே இணைய வழி மல்லுக்கட்டு.

பிப்ரவரி 18ல் ஆரம்பித்து மூன்று வால்யூம்கள் இதுவரை கடந்து போயுள்ளது. விவாதம் விவாதம் விவாதம்- பெரும் உரையாடல்கள். அரசியல் அமைப்பு குறித்த உரையாடல்கள் எனக்கு பெரும் இதிகாசமாக இருக்கிறது. இதிகாசம் என்றால் புனைவு கற்பனை என்கிற இலக்கிய பொருளில் நான் எடுத்தாளவில்லை. எதிரும்

புதிருமான பெரும் ஜனநாயக வெளி நிறைந்த விவாதம் - பன்முக உரையாடல் என்கிற பொருளில் சொல்கிறேன்.

இப்போ வெளி உலகில் வேறு பீற்றிக்கொண்டுவிட்டேன். பெருகி நிற்கும் அவ்வுரையாடல்கள் வழி மெதுவாக நகர்ந்து நகர்ந்து செல்லலாம் என்கிற நம்பிக்கை பலப்பட்டுள்ளது.

நேருவின் நோக்கத்தீர்மானம் மீது தான் (objective resolution) எவ்வளவு விவாதம். அரசமைப்பின் ஆன்மாவை நேரு அதில் அமர வைத்திருப்பார். லீக் வரட்டுமே என ஜெயகர் முன்வைக்கும் வாதங்கள், ராதாகிருஷ்ணனின் அற்புத தெறிப்புகள், முன்ஷி, படேல், அல்லாடி, சியாமா முகர்ஜி,அம்பேத்கர்,அந்தோணி,உஜ்ஜல் சிங், சேத் தாஸ், நிக்கோலஸ், விஸ்வாம்பர், காமத், ஹன்ஸ் மேத்தா, தாட்சாயிணி என ஏராளமானவரின் உயர் நோக்கங்கள் எல்லாம் பட்டுத்தெறிக்கின்றன. நாகப்பா, முனுசாமி திறமையாக தேவைகளை வைக்கின்றனர். நாங்கள் தாம்பா உண்மையான இந்திய வாசிகள் என ஜெய்பால் சிங் போன்ற 'ட்ரைப் ' பிரதிநிதிகளின் உரைகள் அபாரம்.

இரண்டாம் வால்யூமில் சமஸ்தானங்கள் தொடர்பான அருமையான விவாதங்கள் இடம் பெற்றுள்ளன. மதராஸ் நாகப்பா, உபி அல்குரி சாஸ்திரி, மாதவ மேனன்,தேவேந்திரநாத், எச் சி முகர்ஜி உள்ளிட்ட பலர் உரையாடியுள்ளனர்.

இந்த முதல் மூன்று வால்யூம்களும் 533 பக்கங்களை எடுத்துக்கொண்டுள்ளன. நான் இங்கு போகிற போக்கில் சொல்லிவிட்டு போகிறேன். உள் நுழைந்து பார்ப்பவர்களுக்கு , அவர்களின் ஆர்வத்திற்கு நல்ல தீனி கிடைக்கும். 7-8 சதம் அளவிற்கு இந்த வாசிப்பு போயுள்ளது. மெதுவாக தினம் சில பக்கங்கள் என இணையத்தில் வாசித்தால் ஓராண்டு தேவைப்படலாம்.

படேல் தான் அடிப்படை உரிமைகள் தீர்மானத்தை (வால்யூம் 3ல்) ஷரத்துப்படி முன் வைக்கிறார். சிட்டிசன் எவர்- (குடிமக்கள்)- தீண்டாமை ஒழிப்பு போன்ற பல ஷரத்துகள் குறித்து அருமையான விவாதங்களை பலர் முன்னெடுத்துள்ளனர். இதுவரை அம்பேத்கர் ஆங்காங்கே சிறிய அளவில்தான் கண்ணில் படுகிறார். நேருவிற்கு நோக்கத் தீர்மான சிறப்பு போலவே, படேலுக்கு அடிப்படை உரிமைகள் சிறப்பு தெரிகிறது. இந்த அம்சத்தில் படேல் வெளித்தெரியாமல் போய்விட்டாரே?

படேல், முன்ஷி, அல்லாடி, குன்சுரு, கோபால்சாமி. தேஷ்முக் , சந்தானம், ராஜாஜி என பலர் பேசியுள்ளனர். அல்லாடி ஓர் இடத்தில்

அற்புத தெறிப்பை வீசுகிறார். Born in the Union என்பதில் யூனியன் என்பது அரசியல் கருத்துர் அல்ல- பூகோள கருத்துரு என்று விளக்கியுள்ளார்- union not a political concept but a geographical concept-"Born in the Union" only means "born in the territories comprising the Union". (page 525/6756) என்று சொல்கிறார். அனந்தசயனம் இதை மறுக்கிறார். சந்தானம் தலையிடுகிறார். ராஜாஜி பஞ்சாயத்தாக அல்லாடியும் அம்பேத்கரும் உட்கார்ந்து பேசி சரியான வரையறைக் கொணரலாம் என்கிறார்.

கம்யூனிஸ்ட் உறுப்பினர் சோம்நாத லாகிரி- ஒற்றை உறுப்பினர். இந்த முதல் மூன்று வால்யூம்களிலும் ஒவ்வொரு அம்சத்திலும் அவர் பேசியுள்ளதைக் காணமுடிகிறது. ஓரிரு முறை தவிர பெரும்பாலும் அவர் வாதங்கள் ஏற்கப்படாமல் போவதையும் காண்கிறேன்.

தீண்டாமை குறித்த ஷரத்தை படேல் இவ்வாறு வைத்தார்

clause 6 which runs thus:

"6. 'Untouchability' in any form is abolished and the imposition of any disability on that account shall be an offence."

காமத் unappprochability என்பதையும், மதராஸ் பி குன்ஹிராமன் punishable by law என்கிற திருத்தத்தையும் தந்துள்ளனர். படேல் விளக்கத்திற்கு பிறகு ஏற்கின்றனர்.

21 வயது வந்தோர் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை அடிப்படை உரிமை என முன்மொழிந்து விவாதித்துள்ளனர். அரசாங்கமே தந்து கொண்டிருந்த ராவ்பக்தூர் திவான்பகதூர் போன்ற எப்பட்டங்களும் இல்லை என பேசியுள்ளனர். இதில் பி கே சித்வா என்பார்தான் அப்படி வைக்காதீர்கள். வேறு இடத்தில் constitution ல் ஒரு ஷரத்தாக இடம் பெற செய்யுங்கள் என்கிறார். படேல் ஏற்கிறார்.

Rights of Equality, Rights about religion, culture, minority, remedial rights என பல முக்கிய ஷரத்துக்களை இத்தீர்மானத்தில் படேல் தான் முன் மொழிந்துள்ளார். நேருவின் சிறப்பு objective resolution என்றால், படேலின் சிறப்பு Fundamental Rights resolution என்பதை வால்யூம் 3 சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. படேல் தான் இப்பகுதியை முன் மொழிந்து,ிருத்தங்களை காதுகொடுத்துகேட்டு, அவை ஏற்பை உறுதிபடுத்தியுள்ளார் என்பதையும் இதில் காண்கிறோம். ஆனால் படேல் பெயர் இதில் ஏனோ நிலைபெறாமல் போயுள்ளது.

அவையின் தலைவர் என்ற வகையில் பிரசாத் அரசியலமைப்பு விவாதங்களும் எழுதுதலும் ஆங்கிலத்திலேயே இருப்பதைச்

சுட்டிக்காட்டி, நாம் ஒருநாள் முழுமையாக இந்திய மொழிகளில் நீதிமன்றம் உட்பட அனைத்து இடங்களிலும் இந்த ஆவணத்தை விளக்கக்கூடிய ஆற்றலைப் பெற வேண்டும். அதற்கு முயற்சிக்க வேண்டும் என்பதை வால்யூம் 3ல் சுட்டிக்காட்டுகிறார்.

சர்ச்சிலின் அகந்தை கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது. இதுவரை (533 பக்கங்களில்) ஆங்காங்கே காந்திக்கு நன்றியை சிலர் சொல்லியுள்ளனர்.

நான் பார்த்த இந்த 500க்கும் மேற்பட்ட பக்கங்களை இப்படி அரைகுறையாக சொல்வதும் ஒருவகை அசட்டுத்தனம்தான். ஆனால் அசடுகளுக்குமானதே இவ்வுலகு.

பார்க்கலாம். காலத்தின் கருணை என்னை 12 வால்யூம்களையும் பார்க்க வைக்கிறதா என்று...

16-3-2025

march 19

ஆர் பி தத் (1896-1974)

இந்தியாவின் உற்ற தோழர்

ரஜனி பாமி தத் என்கிற பெயர் இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றுடன் கலந்து போன பெயர். குறிப்பாக விடுதலைக்கு முன்னரான கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றில் பெரும் பாத்திரமாக இருந்த பெயர்.

லண்டன் ஓரப்பகுதி கிராமம் ஒன்றில் அக்கால நம்மூர் ' ஒரு ரூபா' டாக்டர் போல, ஏழைகளின் மருத்துவராக இருந்தவர் உபேந்திர கிருஷ்ண தத். அவர் ஸ்வீடிஷ் பெண் 'அன்னா பாமியை ' மணந்து கொண்டார். கிளமன்ஸ் பாமி தத், ரஜனி பாமி தத் என்கிற அவர்களது இரு மகன்களும் பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தாலும், கம்யூனிஸ்ட்களாலும் மறக்க முடியா மனிதர்களாயினர்.

ரஜனி என்றால் இரவில் பிறந்தவன் எனப் பொருள். அம்மாவின் பாமி , அப்பாவின் தத் சேர்ந்து அவர் ரஜனி பாமி தத் ஆனார். இந்தியாவில் ஆர் பி தத் என அறியப்படலானார். தோழர்களால் ரஜி என அழைக்கப்பட்டார்.

கல்லூரி காலத்திலேயே , சோவியத் தாக்கத்தால் அவர்கள் புரட்சிகர இயக்கம் நோக்கி சாய்ந்தனர். கிரேட் பிரிட்டன் கம்யூனிஸ்ட் கட்சியின் நாயக இளைஞர்களாகவும் வளர்ந்தனர். ஆர் பி தத் 'லேபர் மன்த்லி' தொடங்கி 53 ஆண்டுகள் அதன் எடிட்டராக ஏராளம் எழுதி குவித்தார். சிபிஜிபி என்கிற கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழுவில் செயல்பட்டார்.

ஷாபுர்ஜி சக்லத்வாலா, எமிலி பர்ன்ஸ், ஹாரி பொலிட் போன்றவர்கள் கூட்டாளிகள். சக்லத்வாலாவும் தத்தும் ஒருவரையொருவர் நேசித்த தோழர்கள். 1922ல்வெளியான எம் என் ராயின் India in Transition, 1926ல் வெளியான தத்தின் Modern India இரண்டும் அப்போதைய அறிவுசார் இளம் கம்யூனிஸ்ட்களுக்கு பொக்கிஷங்களாயின. இந்தியா குறித்த மார்க்சிய ஆய்வு நூல்களாக அவை பார்க்கப்பட்டன.

பிரிட்டிஷ் கட்சியில் அப்போதிருந்த இளம் தோழர்களில் சிலர் - சார்லஸ் அசிலே, ஜார்ஜ் அலிசன், பென் பிராட்லி, பிலிப் ஸ்ப்ராட் போன்றோர் இந்தியா வந்தனர். இங்கிருந்த இளம் குழு தோழர்களுடன் ஸ்ப்ராட் தொடர்பு கொண்டு மீரத் சதி வழக்கில் சிறைக் கொடுமையையும்

அனுபவித்தார். சிங்காரவேலர் பேத்தியையும் மணந்து, இந்தியாவிலேயே வாழ்ந்து மறைந்தார். அது தனி வரலாறு.

இங்கிலாந்திற்கு படிக்கப்போன ஏராள இந்திய இளைஞர்கள் மார்க்சியம் பக்கம் திரும்பினர். ஆர் பி தத்திற்கும் இதில் பெரும் பங்குண்டு. அவர்களில் பலர் பெரும் பொறுப்புகளில் பின்னர் அமர்ந்தனர். அவர்களில் சிலர் டி ஆர் காட்கில், எஸ் சி சர்கார், ஜோதிபாசு, ஹக்சர், மோகன் குமார மங்கலம், இந்திரஜித் குப்தா, புபேஷ் குப்தா, என் கே கிருஷ்ணன், பெரோஸ் காந்தி, நிகில் சக்கரவர்த்தி, ரேணுகா, ஹஜ்ரா பேகம், டாக்டர் அகமது, தேவி பிரசாத் சட்டோ, திலிப் போஸ், ஜகதீஷ் குப்தா எனச் சொல்லலாம்.

அப்போதெல்லாம் கோமிண்டர்ன் (மூன்றாவது அகிலம்) என்ன எழுதி அனுப்புகிறதோ அதுதான், அனைத்து கம்யூனிஸ்ட்களுக்கும் பாடத்திட்டம். வேறு பிரதியை நினைத்துக்கூட பார்க்க முடியாது. மெத்த படித்த இந்த அனைத்து இளைஞர்களும், சோவியத் மகுடியில் முழுமையாக மனதை கொடுத்தனர். முளைவிட்ட இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் , ஸ்டாலின் பேசிய அறிக்கைகளும், கோமிண்டர்ன் அறிக்கைகளும் தான் road map.

எம் என் ராயின் தாக்கம் நீங்கிய நிலையில், பிரிட்டிஷ் தோழர்களுக்கு வழிகாட்டும் பொறுப்பு கூடியது. தத் முக்கிய வழிகாட்டியாக வரலானார். ஹிட்லரின் பாசிசத் தன்மை உணரப்பட்ட நிலையில், கோமிண்டர்ன் டிமிட் ராவ் அறிக்கை வழியே, ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களில் அய்க்கிய முன்னணி என்கிற கோட்பாட்டை முன்னெடுத்தது. இந்தியாவிலும் காங்கிரசுடன் இணைந்து என்கிற அறிவுரையை டிமிட் ராவ் முன் வைத்தார். இதற்கு முன்னால் இருந்த, காந்தி- காங்கிரஸ் குறித்த விமர்சன பார்வையில் கொஞ்சம் தணிவு ஏற்படலானது. தத்தும் பிற கம்யூனிஸ்ட்களைப் போலவே காந்தியை ‘ரீ ஆக்ஷனரி ‘ எனத்தான் எழுதி வந்தார்.

ஆறாவது கோமிண்டர்ன் வழிகாட்டல் , மிக மோசமான இடது குறுங்குழு வாதம் நோக்கியே , இந்தியாவில் கம்யூனிஸ்ட்களை அழைத்துச் சென்றது. தத் அக்கூட்டத்திற்கு செல்லாவிடினும், அவர் இந்த செக்டேரியன் நிலைப்பாட்டை மிக அதிகம் உயர்த்திப்பிடித்தவர் என பார்க்கப்பட்டார். ஸ்டாலினின் ஊதுகுழல் எனப் பெயர் எடுக்கும் அளவு அவரது எழுத்துக்கள் சென்றன. இந்த தாக்கம் இந்திய கம்யூனிஸ்ட்கள் மீதும் பரவியது. காந்தியும் காங்கிரசும் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாயினர். இந்திய தல நிலைமை குறித்த அறியாத்தனத்தால் விமர்சிக்கப்பட்டு வந்த காலமிது.

1936ல் இன்றும் கட்சி வட்டாரத்தில் புகழ் வாய்ந்த சொற்றொடராக இருக்கும் Dutt- Bradley thesis வெளியானது. ஆர் பி தத் மற்றும் பென் பிராட்லி பெயரில் வந்த ஆவணப்படி, காங்கிரசுடன் சேர்ந்து உள்ளிருந்து வேலை செய்வது என்ற திசை பின்னர் உருவானது. இளம் பி சி ஜோஷி பொதுச் செயலராகி, இதை முன்னெடுக்கலானார்.

இந்த சூழலிலும் வங்கத் தோழர்கள் தங்கள் செக்டேரியன் பாதையை விடாமல் league against Gandhism- fight the reactionary and bourgeois ideology of Gandhism' என்று இயங்கியதாக சோம்நாத் லாகிரி நினைவு கூர்ந்துள்ளார். சோம்நாத் லாகிரி மட்டுமே ஓராண்டு அரசியல் அமைப்பு அவையில் கம்யூனிஸ்ட்கள் சார்பில் இருந்தவர்.

மாஸ்கோ சென்ற கிளமன்ஸ் தத் , ஹாரி பொலிட், பென் பிராட்லி அங்கே வந்திருந்த அன்றைய காங்கிரஸ் சோசலிஸ்ட் தலைவர் மினு மசானியை சந்தித்து CSP- CPI இடது கட்சிகளின் நெருக்கம் குறித்து, அணி குறித்து உரையாடினர். கிளமன்ஸை, ரஜனி தத் என மசானி அப்போது தவறாக புரிந்து கொண்டார். கம்யூனிஸ்ட்களிடம் அவநம்பிக்கை வைத்திருந்த மினு மசானி இரு நிபந்தனைகளை விதித்தார். சிபிஅய்யை கலைத்துவிட்டு காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் சேரவேண்டும். கோமிண்டர்ன் இணைப்போ, உத்தரவுகளோ கூடாது என்பன நிபந்தனைகள். இது நடைபெறாது என அவர் அறிவார்.

இந்தியாவில் ஆங்காங்கே காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சிக்குள் கம்யூனிஸ்ட் தோழர்கள் இயங்கத்தொடங்கினர். நம்பூதிரிபாத், ராமமூர்த்தி, ஜீவா போன்றோரை இப்படி சொல்லமுடியும்.

காங்கிரசில் மாறுபட்டு 'பார்வேர்ட் கட்சியை ' தொடங்கிய நேதாஜி left consolidation platform ஒன்றை உருவாக்கினார். எம் என் ராய், ஜேபி, நரேந்திரதேவ், பி சி ஜோஷி, நேதாஜி என பெரும் குழாம் சிறிது காலம் சேர்ந்தும் , பின் ஒருவரை ஒருவர் நம்பாமல் செயல்பட்டு , ஒற்றுமையை குலைத்துக்கொண்டனர்.

சுவிட்ஜர்லாந்தில் 1936 ல் நேருவை சந்தித்த ஆர் பி தத், காங்கிரஸ் இயக்கம், கம்யுனிஸ்ட் கட்சியை தோழமையாக பார்த்து வளர உதவ வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். நேரு மார்க்சியத்தை ஆழமாக கற்றவராக தெரியவில்லை என்றாலும், அதன் மீது emotional attachment அவருக்கு இருப்பதாக தத் மதிப்பிட்டார். நேரு மீது தத்தின் தாக்கம் இருந்ததை, அவர் இந்தியா திரும்பிய உரைகள் காட்டின என்கிற பேச்சு இருந்தது. சிபிஅய் மத்திய கமிட்டி ஜூலை 1936 அறிக்கையில்,

காங்கிரஸ் மேடையிலிருந்து கணிரென ஒலித்த நேருவின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் குரல் என இதனை பதிவிட்டது.

லக்னோ காங்கிரசில் நேருவின் தலைமையுரையை- 12 பக்க அளவில் முழுமையாக தத் ‘லேபர் மந்த்லியில்’ வெளியிட்டார்.

அதேபோல் நேதாஜியிடமும் சிறிய அளவு செல்வாக்கை தத்தால் உருவாக்க முடிந்தது. வியன்னாவில் இருந்து The Indian Struggle நூலை எழுதிய நேதாஜியிடம் கம்யூனிஸ்ட்கள் மீது கடும் விமர்சனம் இருந்தது. அவர்கள் தேசியத்திற்கு விரோதமானவர்கள், நாத்திகர்கள், மத விரோதிகள் என நேதாஜி விமர்சித்து வந்தார். நேரு கூட இந்த ‘கம்யூனிச பாச வலையில்’ இருக்கிறார் எனக் கூட பேசினார். லண்டனில்1938ல் நேதாஜி இருந்தபோது, தத் அவரை சந்தித்து உரையாடினார். தத் தலைமையில் நேதாஜி பேசுகிற கூட்டங்கள் அமைக்கப்பட்டன.

அதற்கு பின்னர் டெய்லி ஒர்க்கர் பத்திரிகை பேட்டியில், நேதாஜி விடுதலை இந்தியா சோசலிச பாதையையே தேர்ந்தெடுக்கும் என்றார். இந்த தாக்கத்தை அவர், காங்கிரசிலிருந்து வெளியேறி இடது மேடை ஒன்றை அமைக்கும்வரை இருந்ததைக் காண்கிறோம்.

1940ல் ஆர் பி தத் எழுதிய India Today பெரும் புகழை ஈட்டிய புத்தகமாக இன்றுவரை இந்திய கம்யூனிஸ்ட்களால் உணரப்படுகிறது. அப்புத்தகம் இந்தியாவில் தடை செய்யப்பட்டு, இரகசியமாக பெறப்பட்டு படிக்கப்பட்டது. இந்தியா குறித்த மேம்பட்ட மார்க்சிய புரிதலாக அது பாவிக்கப்பட்டது.

1939ல் இரண்டாம் உலகப்போரை ‘ஏகாதிபத்திய யுத்தம்- நாடுகளை பங்குபோட வளங்களை கொள்ளையாக்கிட போர்’ என்றுதான் இந்திய கம்யூனிஸ்ட்களும் பார்த்தனர். சோவியத் யூனியன் போரில் இங்கிலாந்து அமெரிக்க அணியில் இறங்கியவுடன், பாசிசத்திற்கு எதிரான ‘மக்கள் யுத்தம் ‘ என்ற நிலையை எடுத்தனர்.

கட்சி தடை காலத்தில் , தலைவர்கள் சிறைக் காலத்தில் , கூடி விவாதித்து முடிவு என்பது பிரச்சனையாக இருந்தது. தத் ‘மக்கள் யுத்தம் ’ என எழுதிய கட்டுரைகள் உடனடியாக இங்கு தாக்கத்தை உருவாக்கவில்லை. ஆறுமாதம் ஏதோவொரு வகையில் முடிந்த விவாதங்களை மேற்கொண்டு, மக்கள் யுத்தம்- பிரிட்டிஷ் ஆதரவு நிலைப்பாட்டிற்கு இந்திய கட்சியினர் வந்தனர். குவிட் இந்தியாவிலும் 1942ல் பங்கேற்கவில்லை என்ற விமர்சனத்திற்கு இந்திய

கம்யூனிஸ்ட்கள் உள்ளாயினர். ராஜாஜி, அம்பேத்கர், பெரியார் , இந்து மகா சபா உட்பட எவரும் குவிட் இந்தியாவை ஆதரிக்கவில்லை - குவிட் இந்தியாவிற்கு எதிராகவே நின்றனர். ஆனாலும் விமர்சனக் கணைகள் கம்யூனிஸ்ட்கள் மீதே அதிகம் விழுந்தன.

பாகிஸ்தான் தீர்மானத்தை முஸ்லீம் லீக் 1940ல் நிறைவேற்றியது. தொடர்ந்த ஆண்டுகளில் இந்திய கம்யூனிஸ்ட்களும், சுயநிர்ணய உரிமை பார்வையில் இத்தீர்மானத்திற்கு ஆதரவு நிலை எடுத்தனர். புகழ் வாய்ந்த 'அதிகாரி தீசிஸ் ' அறிந்தவர் இதை உணர்வர். 1946ல் ரஜனி பாமி தத் இந்த நிலை ஏற்புடையதல்ல என எழுதலானார்.

1946ல் இந்திய கம்யூனிஸ்ட்கள் '17 அரசியல் அசெம்பிளிகள்' என தீர்மானித்தனர். லண்டனில் இருந்த டாங்கேவிற்கும் தந்தி அனுப்பப்பட்டு, பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியிலும் இப்படி ஒரு தீர்மானத்தை கொணரக் கோரினர். தோழர் டாங்கே தந்தியை தோழர் தத்திடம் காட்டினார். தத் 'மய்யப்பட்ட ஒரே அரசியல் நிர்ணய சபை தான் ' தீர்வாக இருக்கும். 17 என்று கோரினால் இந்தியா என்ற ஒன்றே இல்லாமல் போய்விடும் என்கிற எச்சரிக்கையை செய்தார். லேபர் மந்த்லியிலும் ஒரே 'மய்யப்பட்ட அரசியல் நிர்ணய சபை ' என எழுதி , இங்குள்ளவர்களுக்கு வழிகாட்டினார்.

அதேபோல் இந்தியாவை பிளவுபடுத்தும் மவுண்ட்பாட்டன் திட்டத்தை அவர் ஏற்கவில்லை.

இந்தியா வந்த பாமி தத் - காந்தி, நேரு, படேல், ஆசாத்,ஆசப் அலி, ராஜாஜி போன்றவர்களை சந்தித்தார். காங்கிரஸ் - கம்யூனிஸ்ட்கள் சேர்ந்து தோழமையுடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை முன்னெடுக்க வேண்டினார். காங்கிரசின் 'பாஸ், இரும்பு மனிதன்' என கருதப்படும் படேலுடன் தான் அதிக நேரம் விவாதிக்க வேண்டியிருந்தது என தத் குறிப்பிட்டுள்ளார். பெதிக் லாரன்ஸ் தூதுக்குழு வந்த 1946 மார்ச்சில், டெய்லி ஒர்க்கர் பத்திரிகையாளராக தத் இந்தியப் பயணம் இருந்தது. தனது தந்தையின் மூதாதையர் இடமான கல்கத்தா சென்று மகிழ்ந்தார். தொழிலாளர் கூட்டங்களில் உரையாற்றினார். மே தின பேரணியில் பங்கேற்றார். கல்கத்தா தோழர்களின் அன்பில் திளைத்தார்.

அதேபோல் தன்னை சந்தித்த சோசலிஸ்ட் தலைவர் மது லிமாயிடம், 1947 நவம்பரில், காங்கிரசை விட்டு நீங்கள் வெளியே போவது நல்லதல்ல என எடுத்துரைத்தார் தத். நேருவிற்கு ஆதரவான சக்திகள்

வெளியேறுவது, படேல் போன்றவர்களையே பலப்படுத்தும் என அவர் கருதினார்.

1948ல் தோழர் ரணதிவே தலைமையில் மீண்டும் குறுங்குழு வாதம் கட்சியைப்பற்றியது. பெற்ற விடுதலையை ஏற்கவில்லை. அதிவீர நிலைப்பாடுகளால் , லட்சம் உறுப்பினர்களை தொட்ட கட்சி பெருமளவு சரிந்து 20 ஆயிரம் என்றானது. தத் நேருவின் வெளிநாட்டு கொள்கையை பாராட்டி எழுதினார். திரும்பவும் கட்சி நிதானமடைய அவரின் கருத்துக்கள் உதவின. இந்திய கம்யூனிச இயக்கம் பற்றி புகழ் வாய்ந்த நூல் எழுதிய ஓவர் ஸ்ட் ரீட்- விண்ட்மில்லர், 1951 கட்சி திட்ட வரையறைகளில் ரஜனி பாமி தத் செல்வாக்கு இருந்ததாக மதிப்பிட்டுள்ளனர்.

பின்னொரு காலத்தில் டாங்கே இவ்வாறு நினைவு கூர்ந்தார். மிக முக்கியமான கட்சி வரலாற்று கட்டங்களில் எல்லாம், ஆற்றுப்படுத்த தத் நம்மோடு நின்றுள்ளார் . எம் பி ராவ் எடிட் செய்த கட்சி வரலாற்று ஆவணம் இப்படி பதிவை செய்தது.

“On so many critical the CPGB and Palme Dutt had corrected us- the three party letters of 1933, Dutt Bradley Thesis 1936, after Hitler attack, criticism on our wrong stand with regard to Muslim League and finally his letter to Andhra comrade in 1949”

1959ல் கேரளா இ எம் எஸ் ஆட்சி கலைக்கப்பட்டபோது, நேருவை விமர்சித்தார் தத். 1962 இந்திய சீனா போரை , தொடர்ந்த 1964 கம்யூனிஸ்ட் இயக்க உடைவை அவர் துரதிருஷ்டமான நிகழ்வுகள் என வருந்தினார்.

தத் தனது மார்க்சிய பயிற்சியால், இந்தியத் தோழர்களுக்கு துணையாக நின்றார். சோவியத்தை ஸ்டாலினை உயர்த்திப் பிடித்தார். இந்திய மக்களின் விடுதலைக்காக ஓயாமல் குரலை லண்டனில் கொடுத்து வந்தார். அவர் காந்தியை கடுமையாக விமர்சித்தவர்தான். அதே நேரத்தில் லண்டனில் அவர் தேர்தலில் நின்றபோது, 1945ல் மகாத்மாவின் ஆசியை கோரினார். காந்தியும் வெற்றிபெற நல்வாழ்த்துகள் என்கிற செய்தியை அனுப்பியதாகவும் அறிய முடிகிறது. ஹங்கேரி 1956, செக் 1968 சோவியத் தலையீடுகளை தத் வரவேற்பவராகவே இருந்தார். அவர் அதை நியாயப்படுத்தியது விமர்சனமானது. அப்போது கம்யூனிஸ்ட்களுக்கு இருந்த ஒரே பற்றுக்கோல் சோவியத்தாக இருந்தது.

தத் Labour Monthly ல் பெரும் அறிஞர் பெருமக்கள் எழுதி வந்தனர். இந்தியா குறித்தும் ஏராள கட்டுரைகள் வந்தன. மார்க்சியம், சோவியத்

பற்றி எழுதப்பட்டது. காந்தியின் கட்டுரை கூட அதில் இடம் பெற்றது. அவர் எழுதிய Britain, India and Swaraj அதில் வந்தது. இந்தியத் தோழர்கள் சட்டோ (சரோஜினி நாயுடு சகோ) , எம் என் ராய்., கிருஷ்ண மேனன், சக்லத்வாலா, பி சி ஜோஷி, டாங்கே, சர்தேசாய், என் எம் ஜோஷி (தொழிற்சங்க தலைவர்) , ஷேக் அப்துல்லா போன்றவர் எழுதியுள்ளனர்.

உலக அறிஞர்கள் பலர் அதில் பங்களித்தனர். பெர்னார்ட் ஷா, ரொமயின் ரோலந்த், எமிலி பர்ன்ஸ், ரால்ப் பாக்ஸ், ஸ்ட் ராட்சி, கார்ல் ராடெக், மௌரிஸ் டப், ஒலாப் பாமி, , நெக்ருமா, பால் ராப்சன், புகாரின், கிளாரா ஜெட்கின் எனச் சிலரை சொல்லலாம்.

லண்டனில் வாழ்ந்த தத், இந்தியா குறித்து விடாமல் சிந்தித்தவராக இருந்தார். இப்படி 50 ஆண்டுகளுக்கு மேலாக தன் வாழ்நாளின் பெரும் பகுதியை செலவழித்த மனிதர், இந்தியாவில் கம்யூனிஸ்ட் அல்லாதார் மத்தியில் ஏனோ போய் சேரவில்லை. விடுதலைக்கால அனைத்து தலைவர்களுடனும் தன் விவாதத்தை நடத்தியவராக தத் இருப்பதைக் காணமுடிகிறது.

லேபர் மன் த்லி இதழ்கள் இணையத்தில் கிடைக்கின்றன. இந்தியாவில் அவருக்கு நெருக்கமாக இருந்த திலிப் போஸ் அவர் பற்றி எழுதியுள்ளார். சக்லத்வாலா பற்றி எழுதிய டாக்டர் பஞ்சனன் ஷாகா ரஜனி பாமி தத் குறித்து தனி நூல் ஒன்றும் எழுதியுள்ளார். இந்தியாவின் உற்ற நண்பராக விளங்கிய தத் மறைந்து (1974) அய்ம்பது ஆண்டுகள் ஆன நிலையில், அவர் குறித்த சில செய்திகளை எழுதத் தோன்றியது.

18-3-2025

march 20

காந்தியின் பேரன் கோபாலகிருஷ்ண காந்தி ‘எடிட்’ செய்த Mohandas Karamchand Gandhi- I am an Ordinary Man’ வாசித்துக்கொண்டிருந்தேன். காந்தியின் வாழ்க்கையை நுண்ணியமாக அவரது சொந்த வார்த்தைகளில் எங்கெங்கோ தேடி கோபாலகிருஷ்ண காந்தி அவரது இந்த நூலிலும்- இதற்கு முன்னரான Restless Mercury என்கிற நூலிலும் தந்திருப்பார்.

Restless Mercury 2021லும், இந்த I am an ordinary Man (1914-48) 2023லும் வந்தன. அலெப் நிறுவனம்தான் இரண்டையும் கொணர்ந்தனர். அமேசான் வழி பெற முடியும். இந்த இரண்டாவது நூல் 1914-1919, 1920-29, 1930-39, 1940-48 என காலப்பகுப்பாய்வில், காந்தியின் தன்னிலை எழுத்துக்களை கூட்டி சொல்லப்பட்டுள்ளது. 400 பக்கங்களுக்கான மேலான பெரிய. இந்த நூலின் சிறப்பு, கோபாலகிருஷ்ண காந்தி அவர்களின் அடிக்குறிப்புகள். பாதி நூல் அளவிற்கு நுணுக்கமான விவரங்களாக அவை கொடுக்கப்பட்டிருக்கும்.

நான் இன்று இங்கு சொல்ல வந்தது, இரண்டாம் பகுதியில் எரவாடா சிறையில் காந்தி (தனி கொட்டடியில் சில மாதங்கள்) வாசித்த சில புத்தகங்கள். சில என நான் போகிற போக்கில் குறைத்து சொல்லிவிட்டேன். கோபாலகிருஷ்ண காந்தி கணக்குப்படி 150 புத்தகங்கள்.

காந்தி தன்னை ஒருபோதும் அறிவுஜீவியாக காட்டிக்கொண்டதேயில்லை. அவருக்கு புத்தக அறிவேயில்லை என்கிற மாயையும் பரப்பப்பட்டுள்ளது. அவர் கிடைத்த நேரங்களில் ஆயிரக்கணக்கான, rare நூல்களை படித்து, ஆழ்கடல் அமைதியாக செரிக்க முயற்சித்தவர். செரிக்காதவைகளை அவர் பொருட்படுத்தியதாக தெரியவில்லை. 1909ல் நூறு பக்கம் ஹிந்த் ஸ்வராஜ் எழுத, நம்மில் பெரும்பாலோர் படித்திராத 17 புத்தகங்களை அவர் எடுத்துக்கொண்டதை தந்திருப்பார்.

உலகம் அறிய புத்தகமே தவிர, புத்தகத்தில் உலகமில்லை என என் போன்றவர் மண்டையில் அடிப்பவர் காந்தி. அப்படி புத்தக வாழ்வை அவரிடம் எடுத்துச் சென்ற பெரும் வாசிப்பாளர்களிடம், அவர் ராட்டையை, மண் வெட்டியை, மூத்திர சட்டியை, மனித கழிவு சுமத்தலை தானே முன்வந்து ஏற்கும் மனநிலையை உருவாக்கியவர். அவரிடம் உரிமையுடன் சண்டைப்போட்டு விவாதித்த சோசலிஸ்ட் இளம் அறிவுஜீவிகளிடம், புத்தகத்தில் சோசலிசத்தை தேடாதே, நீ

ஆட்சி அதிகாரம் பெற்றால் மட்டுமே சோசலிசம் என தள்ளிப்போடாதே, நீ நம்பக்கூடியதை உன்னிடமிருந்து துவங்கி செய்துப்பார் என காந்தி சொல்லி வந்தவர்.

காந்திக்கு புத்தக அறிவேயில்லை - பகுத்தறிவில்லை என , அவர் மீதான நிரந்தர காழ்ப்புணர்வு கொண்டோர் பேசியதுண்டு. அவை வெறும் காழ்ப்புணர்வு மட்டுமல்ல, கயமையும் கூட.

கோபாலகிருஷ்ண காந்தி எரவாடா 1922-23 ஆண்டுகளில் காந்தி நோட்டு புத்தக குறிப்புகளின்படி, அவர் வாசித்த நூல் பட்டியலை 114-154 , 40 பக்க அளவிற்கு என்ன என்று படித்தார், எவர் நூல் அது, அந்த ஆசிரியர் பற்றி, வெளியீடு பற்றி என விரிவாக தந்துள்ளார்.

I am an Ordinary Man எனச் சொல்லிக்கொண்ட ஒப்பிலாத பெரும் மனிதனின் அடக்கமும், மன உறுதியும் கண்களை பனிக்கச் செய்கிறது. ஒரு நொடி கூட அம்மனிதர் போல வாழ முடியா பெரும் சோகம்- மன உறுத்தல் நொந்து போகச் செய்கிறது. படிச்சா போதுமா என்ற கேள்வி மட்டுமே உள்ளது. பதிலை தேடாத சௌகரியத்தில் மனம் ஒளிந்து கொள்கிறது.

எரவாடாவிற்கு அவரது ‘the great trail’ முடிந்து அவர் 1922 மார்ச் 20 அழைத்துச் செல்லப்பட்டு தனி செல்லில் அடைக்கப்படுகிறார். அவரை அறிந்த உணரத் துவங்கிய உயர் அதிகாரிகள் மிக நேயமாக, மரியாதையாக பின்னர் நடக்கத்துவங்கினர் என்பது தனிக்கதை.

எதற்காக, இந்த பதிவோ அதை செய்து விடுகிறேன். காந்தி சிறையில் சிறிது போராட்டத்திற்கு பின்னர் வாசித்த சில நூல்கள். சில இந்தி, உருது, குஜராத்தி நூல்களையும் வாசித்துள்ளார்.

1922ல் நாள் வாரியாக என்ன படித்தார், எப்போது முடித்தார் என்பதெல்லாம் சொல்லப்பட்டுள்ளது. 1922 என்பது இங்கு 9 மாதங்களே. 1923 பட்டியலும் பெரிது, அதை இங்கு தரவில்லை.

Master and His Teaching, Arm of God, Christianity in Practice

The Koran, By an Unknown Disciple,Satyagraha Aur Asahayoga

The Way to Begin Life, Indian Administration, Trips to the Moon

Tulsidas Ramayana, Natural History of Birds, The Young Crusader

History of Scotland-1, Bible View of the World, Lives of Fathers and Martyrs

History of Scotland-2, Seekers after God, Misar Kumari

Stories from the History of Rome, Tom Brown’s School Days

The Wisdom of Ancients, Morris's Grammar, Chandrakant

Patanjali's Yogadharsan, Kipling's Five Nations, Bellary's Equality

St Paul in Greece, Dr Jekyll and Hyde, Rosebery's Pitt, Kipling's Jungle Book-2, Goethe's Faust, John Howard's Life

Valmiki Ramayana, Shantiparva -1, Verne's Dropped from the Clouds

Life of Columbus, The Crusades, Girdhar Ramayana

Five Empires, Ancient Rome, Gibbon's Rome History and Decline

Shrimat Bhagavad, Shantiparva- 2, Krishna Charita, Ishopanishad, Adiparva, Bhagavat-2, Tilak's Gita

Saraswatchandra 1,2,3,4, Manusmriti, Shabaparva, vanaparva

Kabir Poems, Pro Christo et Ecclesia, Kathavali Upanishad

Dayanan's Satyarth Prakash, Galilean, Udyogaparwa, Bhismaparva

Prem Mitra, Shad Drashan, The Gospel and Plough, Dronparva

Karna parva, Shalyaparva , Urdu Reader, Brierley's Ourselves and Universe

Lyman's What Christianity Means to me , Raichandra poems,

1923 பட்டியல் அடுத்து 20 பக்கம் செல்கிறது. வேறு ஒரு நேரம் பார்க்கலாம்.

காந்தி 1922ல் மகாபாரதம் 6000 பக்கங்களை படித்துள்ளார். அது பற்றி அவர் சொல்லும் வரிகள்

I dreaded to approach the bulky volumes covering closely 6000 pages. But having once commenced the reading, I was impatient to finish it..The Mahabharata is not to me a historical record. It is hopeless as a history. But it deals the eternal verities in an allegorical fashion

மனுஸ்மிருதி நூலையையும் அவர் படித்ததைக் காண்கிறோம். அது குறித்து காந்தி

I hold it as part of Sastras. But that does not mean that I swear by every verse that is printed in the book described as Manusmriti. There are also many contradictions in that volume, if you accept one part, you are bound to reject those parts that are wholly inconsistent with it..Nobody is in possession of the original text

ஒரு பிரதியை எப்படி அணுகவேண்டும் என்பதற்கான Gandhi touch அதுதான்.

20-3-2025

march 21

" I am worth everything " என்று நினைக்கிற இடங்களில் காந்தி தேவைப்படுவதில்லை. பிறர் மீதான குற்றப்பத்திரிகைகளை அடுக்கி, declarations முழக்கங்களை வெளியிட்டு, தன் தலைமை வெற்றிபெறும் எனில் அனைத்தும் சரியாகிவிடும் என்கிற நம்பிக்கை தொழிற்படும் இடங்களில் காந்தி தேவைப்படுவதில்லை.

உரிமைப் போர் மட்டுமே உள்ள இடங்களில், இந்தியச் சூழலில் மார்க்ஸ், பெரியார், அம்பேத்கர்- காந்தியைவிட அதிகம் தேவைப்படலாம். மார்க்சே கூட சற்று பாவம்தான்- முண்டியடிக்க வேண்டும்.

எதிரி இன்னார்- சரியான முழக்கம்- சரியான அணி/ தலைமை- அதிகார மாற்றம்- எல்லாம் இன்பமயம் என்பது பார்முலாவாக இருக்கும் இடங்களில் காந்திக்கு என்ன வேலை? அங்கு சாவர்க்கர் கூட சாதிக்கலாம்.

"I am an ordinary man" "I am worth nothing " "I know my limitation" "Turn searchlight Inwards" "Duty bound- rights only through duties" என்கிற இடங்களில் காந்தி நிறைந்து காணப்படுகிறார். இவை பார்முலாக்கள் இல்லை. அவரவரின் அன்றாட 'மாரல் பாடு'.

காந்தியை காணாமல் அடிப்பது என்பது, அவரவரை தொலைத்துக்கொள்வதென்பதே. மனச்சான்று மறையும் இடங்களில் காந்தி இருளாகிவிடுகிறார். அவரவர் மனசாட்சியே அவரவர்க்கான காந்திய உதயம்.

காந்தியை, போனால் போகிறது என கிராமங்களுக்கு மட்டுமானதாக, பஞ்சாயத்துக்களில் 'சொம்பாக' வைத்து பார்க்கலாம் என சலுகை தரும் 'பெரிய மனதுகளையும்' பார்க்க முடியும். பெரும் கார்ப்பரேட் முதலாளித்துவ நகர்ப்புற சூழலுக்கு, காந்தி பொருத்தமற்றவர்- காலவதியானவர் என்கிற 'அசட்டு மாயை' பொதுபுத்தியில் உறைந்து போயுள்ளது. காந்தி அங்கே தான் அதிகம் தேவைப்படுபவராக இருக்கிறார். அவரது உரையாடல்கள் , இவர்களை நோக்கியே வழிந்து நிற்கின்றன. காந்தி என்றால் கிராமத்திற்கு போ, நகரத்தில் மூச்சு காட்டாதே என்கிற குறுக்கலியமும் இருக்கிறது. பெரும் முதலாளித்துவம் என பேச ஆரம்பித்தால் - பெரும் காந்தியம் என்ற பேச்சும் அங்கு அவசியமாகும்.

ஆகப் பெரும் பீரங்கி அதிகாரங்கள் நிறைந்த, கோட்டு சூட்டு போட்ட, நுனி நாக்கு இங்கிலிஷ் நிறைந்த, அய்ரோப்பிய தன்மை வாய்ந்த பகுத்தறிவுவாதிகள், உள்ளூரில் சம்ஸ்கிருத மேலாண்மை சாஸ்திரோத்தங்களிடம் தான் அவர் , அழுக்கு நிறைந்த அன்றாட உழைக்கின்றவனுக்காக உரையாடினார். பீரங்கிக்கு பீரங்கி என அவர் பேசவில்லை. மேலே சொன்ன எவரையும் அழித்தொழித்து, என் முன்னேற்றம் என அவர் பேசவில்லை.

விடுதலை என்பதற்கு முற்றுப்புள்ளி இல்லையெனில், காந்தியும் தொடர்வார். எனக்கு முழு விடுதலை வந்தாகிவிட்டது, இனி ஏதுமில்லை என்பதும் கூட மூடநம்பிக்கைதான். பிறரை அழித்தொழிக்காத, அனைவர்க்குமான உயர்வு- ஓர் அடியானாலும் என்பதில் காந்தி வருவார். அதில் குறுக்கு வழிகள் இல்லை. அதில் உரையாடல்கள்தான் கடப்பதற்கான பாலம்.

காந்தி ‘anachronistic- misdated’, இன்றைய காலத்திற்கு பொருத்தமே இல்லாதவர் என்பது கூட பெரும் மூட நம்பிக்கையே. என் மனக்கண்ணாடி முன்னால் நான் நிற்க மாட்டேன், ஊருக்கெல்லாம் கண்ணாடி காட்டுவேன் என்பதை சிறந்த நாகரிகமாக ஏற்பதும், காந்தி காலம் ‘ஓவர்’ என்பதும், ஒருவர் அவரையே ஏமாற்றிக்கொள்ளும் அசட்டுத்தனமே. இது காந்தி காலத்தில் நடந்திருந்தாலும், இந்த 21 ஆம் நூற்றாண்டில் நடந்து கொண்டிருந்தாலும் அது அபத்தமே.

அவரவர் சரியாவது என்கிற போராட்டத்தில்தான் காந்தி கரைந்து போவார். காந்தி யங் இந்தியாவில் 1924 சிறை விடுதலைக்கு பின்னர் ஒரு கடிதத்தை பயன்படுத்திக்கொண்டார். சிறையில் நோய்வாய்ப்பட்டு மீண்ட பெல்காம் சார்ந்த மஜ்லி என்பார் கடிதம். இதை கோபாலகிருஷ்ண காந்தி தன் நூலில் குறிப்பிட்டுள்ளார் (பக் 160/443). மஜ்லி காந்திக்கு எழுதியிருப்பார் ‘ I am worth Nothing’ ஆகா என காந்திக்கு பட்டது. காந்தி இதை குறிப்பிட்டுவிட்டு எழுதினார்

“ How nice it would be if everyone of us would think so? (I am worth nothing) . Then no one wants to be leader. It would be the nicest thing to achieve and run Swaraj if everyone sincerely felt that he was nothing. I used his (D R Majli’s) letter in the first issue of Young India under my resumed editorship”

Self disciplined world - leaderless world சாத்தியமா என்கிற கேள்வி அனார்க்கிச பகுனின், புருதானுக்கு காதில் விழுகிறதா ,தெரியவில்லை.

21-3-2025

march 23

'புதிய பீடாதிபதி சாவர்க்கரும்- உண்மைகளும் ' என்கிற பொருள்தரக்கூடிய அருண்ஷோரியின் புத்தகம் சுவையாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது.

இந்த ஜனவரி 2025ல் வந்த அருண்ஷோரியின் நூல் The New Icon Savarkar and the Facts. அளவில் சற்று பெரிய 540 பக்க நூல்.

அருண்ஷோரி வலது பத்திரிகையாளர் என அறியப்பட்டவர். பல நூல்களின் ஆசிரியர். முடிந்தவரை ஆதாரங்களை திரட்டி, அவற்றிலிருந்து , தான் சொல்ல விரும்பும் கருத்துக்களை கோர்த்து தருபவர். அம்பேத்கரை கடுமையாக expose செய்து- மறையகற்றுதல் அல்லது மாயை மாய்த்தல் என்கிற முறையில் தன் ஆய்வை அவர் Worshipping False Gods என்பதில் செய்திருந்தார். அதேபோல் குவிட் இந்தியா கால கம்யூனிஸ்ட்களின் நடவடிக்கைகளை திரை விலக்கித் தருதல் என்பதை 'only Fatherland ' என்பதில் செய்தார். புகழ்வாய்ந்த வரலாற்றாய்வாளர்கள் குறித்து, அவர்களின் மேற்கித்திய செல்வாக்கின் மாயை கலைத்தல் என்கிற எழுத்தையும் அவர் தந்தவர். இந்த நூல்களுக்கெல்லாம், அவர் கடுமையான எதிர் விமர்சனங்களை சந்திக்க நேர்ந்தது.

இந்த 'நியு அய்கான் சாவர்க்கர்' அப்படிப்பட்ட மாயை தகர்ப்பு முறையிலான, திரை விலக்குதலை செய்யக்கூடிய நூல். கரன் தாப்பர்- அருண் ஷோரி பேட்டியை நான் கேட்கவில்லை. என் சொந்த வாசிப்பை அது தொந்தரவு செய்துவிடக்கூடாது என தள்ளி வைத்துள்ளேன். இந்த நூலுக்கு வலது பகுதியிலிருந்து என்ன மாதிரி எதிர்வினை எழும், வலதல்லாதவர் எப்படி எடுத்துக்கொள்ளப் போகின்றனர் என இனித்தான் பார்க்க வேண்டும்.

நான் இந்த நூலில் 20 சத அளவிற்கு போயுள்ளேன். அந்த அளவில் இந்த பதிவை எடுத்துக்கொள்ளலாம். அடுத்து போகக்கூடியவற்றை குறித்து , போன பின்னர் தோன்றினால் சொல்லக்கூடும் .

அப்பா, கொஞ்சம் அவர் சொன்னதைப் பாருங்கப்பா- கற்றுக்கொள்ளுங்கப்பா என - சாவர்க்கரை கொண்டாடக் கூடியவர் எடுத்துக்கொள்ள வேண்டிய பகுதி முதல் இரு இயல்கள். Much to Learn,

Rakshasi and Rakshas என ஷோரி தலைப்பிட்டு இதில் ஆதாரங்களை பெரும்பாலும் சாவர்க்கரின் மராத்தி எழுத்துக்களிலிருந்து தந்துள்ளார்.

அடுத்த இரண்டு இயல்கள் Much Not to Learn- History is made up, Self Image and its Consequences எனத் தலைப்பிடப்பட்ட இயல்கள். இதில் சாவர்க்கர் மீதான மாயை கலைப்புகளை அவர் செய்கிறார்.

இந்த முதல் 4 இயல்கள் 113 பக்கங்கள் எனக்கு சொல்லக்கூடிய செய்திகள்

நூல் சாவர்க்கரை பீடமமைத்து, தங்கள் அரசியல் வாழ்விற்கான கலங்கரை விளக்கமாக்குவோர்க்காக - குறிப்பாக எழுதப்பட்டுள்ளது.

சாவர்க்கர், மூடநம்பிக்கைகள், தீண்டாமை ஒழிப்பு, ஏற்ற இறக்க சாதி வேறுபாடுகளை தூர வைத்து இந்து என்கிற மேடையில் ஒன்றாதல் என்பதற்காக ஏராளம் எழுதியுள்ளார் என ஆதாரங்களுடன் காட்டுவது. இதில் 'இந்து அணிசேர்க்கை' என்பதை மட்டும் எடுத்துக்கொண்டு , சாதி சாமி கோயில் என ஆடிக்கொண்டிருக்கிறீர்களே என்பதை ஷோரி கேட்க வருகிறார். இந்தப் பகுதி Much To Learn - சில நேரங்களில் நம்மூர் பெரியார் மாதிரி பேசுகிறாரே சாவர்க்கர் என நினைக்க வைக்கும் பகுதி இது.

சாவர்க்கர் பற்றி அவரே என்ன எழுதினார், எப்படியெல்லாம் தம்பட்டம் அடித்துக்கொண்டார், வரலாறு என்கிற பெயரில் கற்பனை புருடா விட்டார் , தன் சுய பிம்ப உயர்த்தலுக்கு எப்படியெல்லாம் பிரயத்தனப்பட்டார் என்பதை Much Not To Learn இயல்கள் , திரை விலக்கம் செய்கின்றன.

முதல் இயலில் 'பசு பக்தி ' என்பதை கடுமையாக சாடுகிறார் சாவர்க்கர். 'பஞ்ச காவ்யம்' குறித்து கிண்டல் கேலி செய்துள்ளார். Madness, vulgarity, Stupidity, unadulterated foolishness என்கிற கடுமையான மராத்தி பதங்களை அவர் பயன்படுத்தியுள்ளார். 'சாவர்க்கர் சமகிரா' என்கிற அவரின் நூல் தொகை வால்யூம்களிலிருந்து - எந்த வால்யூம் எந்த பக்கம் என ஆதாரத்துடன் ஷோரி இப்பகுதியில் எழுதுகிறார்.

'சாவர்க்கர் வழிபாட்டாளர்' இதை எடுத்துக்கொள்கிறீர்களா என ஷோரி கேட்கிறார்

Undermine the stamp of religion that was being put on such beliefs and practices and to encourage people to learn to test everything on the touchstone of evidence, of science and to worship the new deity , the Goddess of Reason.

மாட்டுக்கறி சாப்பிடுவது- அதை மதம் சார்ந்த பிரச்சனையாக்குவதை சாவர்க்கர் விமர்சித்துள்ளார். சாவர்க்கர் இதை எப்படி பார்த்தார் என ஷோரி சொல்கிறார்

Should one eat beef? Should one eat Pork? This is a matter not of religion, but of your stomach. What doctors advise, what you can digest, best of your body that should be the determinants

இதை சாவர்க்கர் வழிபாட்டாளர்கள் சொல்லிக்கொடுப்பார்களா என கேள்வி எழுப்புகிறார் ஷோரி.

மனுஸ்மிருதி முழுமையாக படித்துவிட்டு, அது குறித்தும் சாவர்க்கர் பேசியுள்ளார். சிரார்த்த காலத்தில் இறைச்சி என்பது சாஸ்திரோத்தமானது. அப்படி புலால் உணவு மறுப்பவர் அடுத்த 21 ஜென்மங்களுக்கு மிருக வயிற்றில் பிறப்பர், ஆமாம் பார்த்துக்கங்க.. இதற்கு மனு ஸ்மிருதி அத்யாயா 3 - ஸ்லோகங்களை சாவர்க்கர் அடுக்குகிறார். யாகம், சிரார்த்தம் புலால் தொடர்பை அவை பேசுகின்றன.

அதேபோல் அரச மரம் புனிதம், இந்த மரம் புனிதம் என்கிற மூடநம்பிக்கைகளை சாடியுள்ளார் சாவர்க்கர். சடங்குகளை கடுமையாக கேலி செய்துள்ளார். சந்திரன் சூரியன் கொண்டாடுங்கள்- அதில் வாழ்க்கை ஜாதகத்தை பார்க்காதீர். காயத்ரி பிடித்தால் சொல்- ஆனால் மழை வரும் என ஏமாறாதே போன்ற தகர்ப்புகளை அவர் தந்துள்ளார்.

அடுத்த இயலான 'ராட்சசன் ராட்சசி' இயல் தீண்டாமை, சாதி உயர்வு தாழ்வுகள் குறித்து சாவர்க்கர் எழுதியவை, செயல் பணிகள் பற்றிய இயல். இந்த இரண்டு இயல்களும் பாஜக வினர் மட்டுமல்ல, எவரும் படிக்க வேண்டியவை. தீண்டாமை அனுசரிப்பது , சாதி ஏற்றத்தாழ்வுகளை அனுசரிப்பது இந்து மதத்திற்கு மட்டுமல்ல, நாட்டுக்கே கூட நல்லதல்ல என்பது தான் இந்த இயலின் சாரம்.

அடுத்த இரண்டு இயல்கள் சாவர்க்கர் சொன்னார் என நம்பி ஏமாறாதே தம்பி என பேசுகிற இயல்கள். அவர் தீர வீர சாகசங்கள் பற்றிய ஜோடனைகளை ,பெரிது படுத்தல்களை, சுய தம்பட்டங்களை திரை விலக்கி காட்டும் பகுதிகள்.

Life of Barrister Savarkar என அவரே எழுதிக்கொண்டு அதில் சொல்லிய தம்பட்டம். அதை ராஜாஜி எழுதினார் என விசிறிவிட்ட கட்டுக்கதை. ஷோரி , ராஜாஜி- காந்தி பேரனான ராஜ்மோகன் காந்திக்கு மெயில்

அனுப்பி பதில் பெற்று இந்த புருடாவை உடைக்கிறார். எழுதிய சித்திர குப்தன் ராஜாஜியல்ல சாவர்க்கரே என நிறுவுகிறார்.

இன்னொரு அரசியல் கதை நாடு முழுக்க போய்க்கொண்டிருக்கிறது. அது நேதாஜி தான் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார். அவர் INAஅமைத்து பிரிட்டிஷ் இராணுவத்திற்கு பெரிய சவாலாக இருந்தார். இப்படி நேதாஜிக்கு செய்யச் சொல்லி அறிவுரை தந்ததே சாவர்க்கர் தான் என்கிற பெரும் கதை கட்டலை கந்தலாக்குகிறார் அருண் ஷோரி.

சுபாஷின் Indian Struggle, Leonard Gordon Brothers Against Raj லிருந்து ஆதாரங்களை ஷோரி அடுக்குகிறார். கோர்டானுக்கு மெயில் அனுப்பி, நேதாஜிக்கு சாவர்க்கர் அப்படி ஆலோசனை கொடுத்தாரா என்ன உறவு எனக் கேட்டு, இந்த மாயை கலைப்பை ஷோரி செய்கிறார். ஶ்ரீநாத் ராகவன் எழுதிய India's War The Making of Modern South Asia விலிருந்து நேதாஜி அமைத்த இராணுவம் அதன் லிமிட்டேஷன், இந்தியர் பற்றி ஹிட்லரின் கேலிகள் என ஷோரி விவரிக்கிறார். இப்படி வரலாற்றை மோசமாக தயாரித்தவர் சாவர்க்கர் என History is Made Up இயலில் போட்டுடைக்கிறார் ஷோரி.

அடுத்த இயல் Self image and its consequences.சாவர்க்கர் தன் 80 ஆம் வயதில் எழுதிய Six Glorious Years நூல். இந்தியாவின் விடுதலை காவியமாக வழிபாட்டாளர் காட்டக்கூடிய நூல். எல்லா புரட்சிக்காரர்களுக்கும், பகத்சிங் உட்பட, சாவர்க்கரே ஆதர்ஷ மாவீரன் என்கிறமாயை. பிரிட்டிஷ் எதிர்த்த இந்திய விடுதலைப் போரில் 'காந்தி ' என்பது காட்டப்படாமலேயே எழுதப்பட்டது சாவர்க்கரின் மேலே சொன்ன நூல். 80 வயதிலும் அவ்வளவு பகைமை வெறுப்பு வேண்டுமா?

இந்த இயல் சாவர்க்கர் சாகசங்கள் எனப்பேசப்படுவதை பற்றி படு ஜோக்காக fun ஆக்கும் இயல் எனலாம்.

நீள்கிறது. நிறுத்துகிறேன். மீதி பக்கங்கள் குறித்து வாய்ப்பு உள்ளபோது எழுத சித்தம்..

23-3-2025

march 24

ஜே சி குமரப்பா குறித்து நல்ல உரை ஒன்றை பேரா திருமதி சித்ரா பாலசுப்பிரமண்யன் , சில நாட்களுக்கு முன்னர் காந்தி கல்வி புதன் வட்டத்தில் செய்திருந்தார்.

சில மாதங்களுக்கு முன்னர் நானும் குமரப்பா குறித்து பேசியிருந்தேன். காந்தி கல்வி நிலையத்தில் வேறு சிலரும் குமரப்பா நூல்களை அறிமுகப்படுத்தி பேசியுள்ளனர். வாய்ப்புள்ளவர் கேட்கலாம்.

குமரப்பாவின் காந்திய வாழ்க்கை முறை என்கிற The Gandhian Way of Life என்கிற குறு நூல் ஒன்றை - 50 பக்கம் கூட இராது- , திருமுல்லைவாயில் யுனிக் மீடியாவினர் ரூபாய் 30க்கு , ஒரு மாமங்கத்துக்கு முன்னர் கொண்டு வந்துள்ளனர்.

மீரத் கல்லூரி (ஆக்ரா பல்கலை) மாணவர்கள் மத்தியில் குமரப்பா ஆற்றிய உரைகளின் சாரமாக இந்த எளிய ஆழமான நூல் வந்தது. வார்தா, மகன்வாடியிலிருந்து டிசம்பர் 1950ல் மிகச் சுருக்க முன்னுரை குமரப்பா எழுதியிருந்தார். விடுதலை இந்தியாவில் மாணவர்கள் தங்கள் சொந்த முயற்சியால், ஆய்வுத்திறனால், இந்த உரைகளின் சாரத்தை வளப்படுத்தி , அகிம்சை வழியிலான வர்க்க பேதமற்ற இந்தியாவை கட்ட வேண்டும் என்கிற தன் விழைவை அதில் சொல்லியிருப்பார்.

அவர் காந்தியத்தையும் கம்யூனிசத்தையும் குழைக்கப்பார்க்கிறார் என்கிற விமர்சனங்கள் வந்து கொண்டிருந்த காலமிது. குமரப்பா இந்த உரைகளில், மனிதன்- நிலம்- வேலை- மூலப்பொருட்கள்- உற்பத்தி- வணிகம் பண்டமாற்று- நுகர்வு- பகிர்வு- முரண்களை தீர்த்தல் என பல தலைப்புகளில் மிகச் சுருக்கமான பதிவுகளை செய்திருப்பார்.

அவரது நிலைத்த அல்லது அழிவற்ற பொருளாதாரம், காந்திய பொருளாதாரம், கிராம நிர்மாணங்கள் போன்ற பல்வேறு ஆக்கங்களில் பேசிய கருத்துக்களின் சாரமாகத்தான் இந்த உரைகளும் இருக்கும். எளிய 50 பக்க நூலாகிய இதில் , 'குமரப்பாவியம்' என்கிற ஒன்றின் அடர்த்தியை அவர் உணரத்தந்திருப்பார்.

அவரின் 'வேலை- ஒர்க்' குறித்த புரிதல் அபாரமானது எனச் சொல்ல வந்ததற்குத்தான் , மேலே இவ்வளவு பீடிகை. அவர் மார்க்சியம் அறிந்தவராக இருந்தாலும், அவரின் புகழ் வாய்ந்த ஆசிரியர்கள்போலவே அதை விமர்சன கண்ணோடு பார்த்தவராக குமரப்பா இருந்தார்.

குமரப்பா பொருளாதார கட்டுமானத்தை- சம்பந்தப்பட்ட மனிதர்களைக் கூட வேறு முறையில் வகைப்படுத்தினார். அழிவற்ற பொருளாதார நூலில் , இதைப் பார்க்கலாம். Service Economy, Gregarious Economy, Economy of Enterprise, Predatory and Parasitic Stages என்றார். இதில் Economy of Enterprise என்பதற்கு அமெரிக்கா போன்ற நாடுகளை நாம் இனம் கண்டால், Gregarious Economy என்பதற்கு அன்றைய சோசலிச சோவியத்தை வைத்துக்கொள்ளலாம். இதன் இரண்டையும் விட உயர்ந்த சேவை அல்லது தாய்மை பொருளாதாரம் என்பதாக அவர் அகிம்சை வழி காந்திய பொருளாதார கட்டுமானத்தை முன் வைத்தார்.

சரி work என்பதற்கு வந்து விடுகிறேன். நம்மிடம் அன்றாட அலுப்பு வரலாம். என்ன ஒரே வேலையை செக்குமாட்டுத்தனமாக தினம் செய்ய வேண்டியிருக்கே- போர் அடிக்குதே என்கிற அலுப்பு வரலாம். குமரப்பா இங்கு நம்மை ஆசுவாசப்படுத்துவார். Routine work என்பது எவ்வளவு அவசியமானது என்பதை சொல்லி நம்பிக்கையை பலப்படுத்துவார். இந்த வழக்கமான வேலையிலிருந்து மாறுபட்டு, புனித வேலை அல்லது மகிழ்வு வேலை என - pleasurable work என மனம் தேடிச் செய்யும். அது தவறில்லை. ஆனால் இந்த pleasurable work ஆல் மட்டுமே உலகம் இயங்குவதில்லை. அது அன்றாட உழைப்பு வேலைகளால்- சலிப்பூட்டும் என நாம் நினைக்கும் வேலைகளால் தான் இயங்குகிறது என அவர் சொல்லிக் கொடுப்பார். இரண்டின் மேலான mix பற்றி அவர் சொல்லித்தருகிறார்.

சமூகத்தில் தீண்டாமை எவ்வளவு கொடுமையோ, அவ்வளவு கொடுமை பொருளாதாரத்தில் மனிதனுக்கு நேரும் வேலையில்லா திண்டாட்டம் என்றார் குமரப்பா.

The way we work forms a very important factor in our evolution. Work has its creative part as well as repeat action. In the growth of man both these play important roles/ parts

இந்த இரண்டின் இணைவு என குமரப்பா பேசினார். இவைகளை பிரித்து பார்த்ததால்தான், நிலபிரபுத்துவம்- முதலாளித்துவம்- ஏகாதிபத்தியம் போன்ற ஏற்பாடுகளை நாம் அனுபவிக்க நேர்ந்தது என்றார் குமரப்பா.

உழைப்பை ஒழிப்போம் எனக் கூட பால் லபார்க் போன்ற மார்க்சியர் பேசினர். அவ்வாதம் ஈர்த்தது. இவ்வளவு கொடூரமாக , மிருகங்களை விட மனிதனை சிறுமைப்படுத்துவதை கண்ணுற்று அவர்கள் அப்படி எழுதினர். ஆனால் இந்த கருத்தாக்கத்தை, அதாவது

“ work is looked upon as an evil- shirk it and find ways and means of saving labour “ என்பதை குமரப்பா ஏற்கவில்லை.

என் சொந்த வாழ்வில் , வேலை குறித்த எண்ணம் எப்படியிருந்தது என ஒத்துப் பார்த்தேன். மார்க்ஸ் மண்டையில் , எனக்கு சௌகரியம் அளிக்கக் கூடிய வகையில் ஏறியிருந்தார். செய்யும் வேலையில் 4 மணி நேரம் சொந்த வாழ்க்கைக்கு என்றால், மீதி நேரம் உபரி உற்பத்தி முதலாளித்துவ இலாபம்- மனிதனை கடும் உழைப்பிலிருந்து விடுவித்து - அவனுக்கான சொந்த உபரி நேரத்தை அதிகப்படுத்தினால் அவன் விரும்பிய வண்ணம் உயர்வான் என்கிற கோட்பாட்டு புரிதல்கள் இருந்த நேரம். எனவே யூனியன் வேலை என்கிற pleasurable work மூலம் repeat office work ல் தப்பித்தல் என்கிற வழி போனதை நான் ஒத்துப் பார்த்துக்கொள்கிறேன்.

உடல் உழைப்பு குறித்த உதாசீனம் என்னிடம் இருந்ததில்லை. அதை மட்டமானது கீழானது எனப் பார்க்காவிட்டாலும், காந்தி குமரப்பா பேசிய உடல் உழைப்பு குறித்த பெருமிதம் என்னிடம் ஏறவில்லை. உடல் உழைப்பு செய்த பல தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்கான repeat work என்பது இருந்தது. அதாவது அவர்களை மிடில் கிளாஸ் ஆக்குவது என்கிற ஆர்வத்தில். நேரடி உடல் உழைப்பு என்னிடம் இல்லை. Mental labour என்பது இளம் வயது தொட்டு தொடர்ந்து இருந்து வருகிறது.

குமரப்பா சொல்ல வருவது

All methods of production aimed at avoiding work, so called drudgery will always spell violence. Work develops man. Therefore, the type of work we provide has a bearing on nation building.

The Gandhian way of life சிறிய நூல் தான். வாய்ப்புள்ளோர் பார்க்கலாம்.

24-3-2025

mar 28

Finance Bill Amendments

Paras of Pensioners- My first reading

I happened to go through the relevant 'paras of Pension/ pensioners ' in the Finance Bill (as amended one). I hereby declare my limitation on these matters and I am a poor student on studying the issues like Budget papers, money or finance papers. Just the issue is pension, I had also that curiosity and done my first reading. The points that I arrived at are given below.

I tried here to provide the relevant portions of 6th CPC, 7th CPC Oms, Finance bill relevant paras, LS debate etc. Kindly go through them to have some fair understanding of these issues. How 6th CPC oM is differing from 7th CPC oM.

It seems to me that the GOI has strengthened its hands and power to avoid complete pay parity between pre and post pensioners on a particular date. By this they gain power to distinct pensioners as per the date of retirement- in this case pre and post on a particular date.

As per my reading if 8th CPC gets TOR, that includes the revision of pension to the existing pensioners, then pre 2026 pensioners would also get the benefit of recommendations as per the principles of 6th CPC. The 7th CPC notional pay fixation concept for all pre 2026 pensioners as per the principles or some similar guidelines of 12-5-2017 would not be there. This is my reading after hearing FM reply in the LS.

Govt has assumed the power and authority to distinct the pensioners , as the courts are obliterating the same in various occasions. Instead of pay parity as given in the OM 12-5-2017, (also not of OM 4-8-2016 which did not provide 50 % of the minimum of the new pay scales) they may go to 6th CPC pattern OM 1-9-2006, which provides that guarantee of not lower than 50 % of the minimum pay in the pay band plus grade pay corresponding to the pre revised scale from which the pensioner had retired.

Govt may freeze the existing option similar to one like OM 12-5-2017 but may be 'open to ' similar Oms of 6th CPC dated 1-9-2008 and the least 7th CPC Om dated 4-8-2016.

So the question of saying or predicting ' No Pension Revision to pre 2026' because of this Finance bill lacks evidence or factual proof.

Let us wait to see the Terms of Reference of 8th CPC, which may clear the confusion.

II

Relevant paras from the concerned Oms

6th CPC OM for Pre 2006 dated 1-9-2008

In that OM Existing Pensioner/FP meant pensioner who was drawing pension/ entitled on 31-12-2005

Their new pension was the consolidated of their existing pension, Dearness Pension and DR(24 percent) and Fitment weightage of the existing pension/FP

The other important one is

The fixation of pension will be subject to the provision that the revised pension, in no case, shall be lower than 50 % of the minimum pay in the pay band plus grade pay corresponding to the pre revised scale from which the pensioner had retired

Another OM dated 2-9-2008 was issued for the benefit of post 2006 pensioners that is- for those who were employees on 1-1-2006 but retired at the time of this OM.

Where pension/FP/ gratuity/commutation etc has already been sanctioned in cases occurring on or after 1-1-2006, the same shall be revised in terms of these orders.

7Th CPC OMs

In the same way 7th CPC issued two OMs -one for pre 2016 and the other for post 2016 dated 4-8-2016.

the pre 2016 orders were issued for those existing pensioners drawing pension before 1-1-2016

For existing pensioners who were retired before 1-1-2016, the revised Pension w.e.f 1.1.2016 shall be determined by multiplying the pension as had been fixed by 6th CPC by 2.57.

The minimum pension was fixed as Rs 9000.

For post 2016 pensioners retired on or after 1-1-2016 separate OM dated 4-8-2016 was issued. That is those who ret were employees on 1-1-2016 but retires on the date of issue of this OM. Their already fixed pension/ gratuity/ commutation etc was revised as per this order.

OM 12-5-2017 for Pre 2016

This 7th CPC had gone a further step by issuing the other Om dated 12-5-2017 for pre 2016 pensioners. This led lot of litigations.

According to this OM-

It is decided that the revised pension w.e.f 1-1-2016 in respect of all central civil pensioners retired/died prior to 1-1-2016 may be revised by notionally fixing their pay in the pay matrix recommended by the 7th CPC in the level corresponding to the pay scale /band.Grade pay at which they retired or died.

This will be done by notional pay fixation under each intervening pay commission based on the formula approved by the Govt. 50 % of the notional pay as on 1-1-2016 (30 % for FP) shall be the revised pension.

By this OM the pre 2016 pensioner got the option of Choosing 4-8-2016 or 12-5-2017 Om , whichever is advantageous to him or her.

III

Amendments regarding:

LS debate synopsis dated march 25, 2025

SHRI K.C. VENUGOPAL:

I think there are some hidden agendas inside this Finance Bill that I want to bring to the notice of the hon. Minister. For example, in this Finance Bill, there is a mention of the powers and authority of the Central Government. Clause 144(1) gives authority to the Government to establish distinction among the pensioners. My simple question to the Finance Minister is this. Why is there a distinction among the pensioners? Why are you attacking these poor pensioners in this country? You are saying you are providing so much for the middle class. Now, this is a direct attack against the pensioners. I think you have taken the powers of the Parliament regarding pension rules. In a way, you are trying to amend the pension rules through this Finance Bill. I think the Government needs to withdraw that clause in that provision.

THE MINISTER OF FINANCE; AND MINISTER OF CORPORATE

AFFAIRS (SHRIMATI NIRMALA SITHARAMAN)

....

Under the leadership of the Hon. Prime Minister, our Government has always been sympathetic towards the issues related to employees and pensioners. The demand of pensioners regarding parity has been agreed to and implemented by our Government. The Government has also approved the establishment of the 8th Central Pay Commission to revise the salaries and benefits for Central Government employees as well as pensioners. By this amendment, the Government is actually restoring what was accepted in March 2008. That is the aim and objective of this amendment.

Then in the LS - The Bill, as amended, was passed.

what is in the LS Passed Finance Bill 2025

AND WHEREAS the Fifth and Sixth Central Pay Commission also maintained the distinction between pension payable to employees retired before and after the 1st January, 1996 and before and after the 1st January, 2006, respectively, consequently, as on 1st January, 2006, a distinction in pension existed between past employees who had retired before that date and employees retired after that date on the basis of the revision in pay scales recommended by the Sixth Central Pay Commission, as

accepted by the Central Government, implemented from the 1st January, 2006, a pension revision formula which did not amount to complete parity between pension of Government employees retired before or after the 1st January, 2006;

AND WHEREAS the treatment of existing and past pensioners was again considered by the Seventh Central Pay Commission and it was pointed out in its report that the issue of pension has been a matter of debate in a large number of cases before the Supreme Court of India and there have been differing views;

AND WHEREAS the pension payable to a Government employee can be said to be a deferred portion of the compensation for service rendered and usually, the compensation earned by an employee varies over the service period, as they are periodically revised on account of implementation of the Central Pay Commissions recommendations or otherwise and as such, pension as a derivative of compensation, may also vary;

AND WHEREAS the right to impose such distinctions rests with the Central Government and are an inevitable outcome of the implementation of the recommendations of a Central Pay Commission;

AND WHEREAS the judgment of the Supreme Court in SLP (Civil) No. 29124 of 2024 in the case of the Union of India and Ors. Vs All India S-30 Pensioners Association and Ors. has obliterated such distinction and proceeded on the premise that the Government lacks authority for providing for such distinction of the Central Government pensioners based on their date of retirement;

AND WHEREAS it has become necessary to deal with the interpretation of the Courts and to address the issue relating to pensioners of the Central Government, and expedient to retain the relevance of having such distinction by a validation legislation, dealing with the pension rules and instructions issued from time to time in this regard

28-3-2025 0800 hrs R. Pattabiraman

mar 30

7th CPC and The Question of Parity

The subject matter that the question of parity means- parity for Past pensioners with the future pensioners on a particular date. This write up is to explain, as I understand, the Parity question dealt by 7th CPC. Kindly go through till the last para.

After the Government's finance bill, almost all the Pensioners' associations, though variedly presenting their views, are in complete unity in condemning and demanding the withdrawal of that bill (that is the validation portion of pensioner related matters) and questioned the authority of the Government to distinct Pensioners on their date of retirement .

One can understand , the issue of Parity and the continuation of the same, on studying the CPCs recommendations, specially the 7th CpC's.

After analyzing the parity issue found in the discourse of the previous CPCs (till 6th CPC), the 7th CPC observed

10.1.54 The Commission is of the view that the issue of parity in pensions is extremely important from the viewpoint of inter-temporal equity and merits a careful examination.

The 7th CPC observations on 5th and 6th CPC,-that is what they did on the question of parity - is given below

10.1.58 The V CPC made a definitive shift in the treatment of past pensioners. The Commission took the view that the process of bridging the gap in pension of past pensioners, set into motion by the IV CPC by grant of additional relief in addition to consolidation of pension, needed to be continued so as to achieve complete parity over a period of time. It, accordingly, recommended that pension of all the pre-1986 retirees may be updated by notional fixation of their pay as on 1 January, 1986 by adopting the same formula as for the serving employees. The consolidated pension so arrived at was to be not less than 50 percent of the minimum pay, as revised by V CPC, of the scale of the pensioner at the time of retirement.

This principle by which past pensioners are brought up to the minimum of the scale which replaced the scale in which the pensioner retired has been termed as modified parity. This consolidated amount of pension was to be the basis for grant of dearness relief in future.

10.1.59 The VI CPC noted that modified parity had already been conceded between pre and post 1 January, 1996 pensioners. It also observed that full neutralisation of price rise on or after 1 January, 1996 had also been extended to all the pensioners. Therefore, the Commission felt that no further changes in the extant rules were necessary. To maintain the existing modified parity between present and future

retirees, it recommended that those who retired before 01.01.2006 be given the same fitment benefit as was recommended for the existing government employees

After mentioning various judicial pronouncements on shaping the issue of Parity (though the judiciary is not in complete unity and directed differently and said about the limitation of D S Nakara judgement), the observation of 7th CPC on that is :

10.1.63 The legal position that emerges from the aforesaid decision of the Apex Court is that classification should be founded on a rational basis while distinguishing one class from other. It should not be discriminatory or violative of Article 14 of the Constitution. The Apex Court has examined each case on its merit and wherever they have found that distinction between similarly placed classes is discriminatory then the same has been struck down.

10.1.64 Pension Payout to Personnel in the Central Government: The preceding paragraphs bring out the evolution of the pension regime over time and the role of the Judiciary in settling the law on the subject. There is clear evidence that governments have progressively moved towards a liberalised regime for past pensioners. The VI CPC has further provided for additional pension with advancing age. What this has effectively translated into is testified by examples36 of pension fixation of personnel across groups who have retired in the past decades.

Here, 7th CPC provided 3 illustrations showing their substantial benefit that past pensioners got due to the above pay commissions.

" For example a Secretary to the Government of India retiring on 31 August, 1992 was in receipt of a basic pension of ₹4,000 per month. The basic pension after implementation of the V and VI CPC got revised to ₹13,000 and ₹40,000 respectively. With the benefit of dearness relief this pensioner is on date entitled to a total payout in terms of pension and dearness relief of ₹87,600. Further, as a pensioner who is over 80 years of age he is entitled to an additional pension equivalent to 20 percent of basic pension. In effect the pensioner is in receipt of a total payout of ₹105,120 per month as on date.

Similarly, a Director (in GP 8700 as per VI CPC) retiring on 30 September, 1994 with a basic pension of ₹2,556 per month got revised basic pension of ₹7,042 and ₹22,701 per month after implementation of the V and VI CPC respectively. With the benefit of dearness relief38 the pensioner is on date entitled to a total payout in terms of pension and dearness relief of ₹49,715 per month.

The basic pension for a Group `C' official retiring on 30 September, 1991 from the scale of ₹950- 1500 was fixed at ₹717 per month. His basic pension, after implementation of the V and VI CPC, got revised to ₹2,188 and ₹4,946 respectively. With dearness and pensionery increase due beyond 80 years the pensioner is in receipt of a total payout of ₹12,998 per month. "

10.1.65 The three illustrations point to a substantial increases in pension, across groups, during a span of between 20 and 25 years.

After considering all these aspects, the 7th CPC pronounced the following as its recommendations:

10.1.67 The Commission recommends the following pension formulation for civil employees including CAPF personnel, who have retired before 01.01.2016:

i) All the civilian personnel including CAPF who retired prior to 01.01.2016 (expected date of implementation of the Seventh CPC recommendations) shall first be fixed in the Pay Matrix being recommended by this Commission, on the basis of the Pay Band and Grade Pay at which they retired, at the minimum of the corresponding level in the matrix. This amount shall be raised, to arrive at the notional pay of the retiree, by adding the number of increments he/she had earned in that level while in service, at the rate of three percent. Fifty percent of the total amount so arrived at shall be the revised pension.

ii) The second calculation to be carried out is as follows. The pension, as had been fixed at the time of implementation of the VI CPC recommendations, shall be multiplied by 2.57 to arrive at an alternate value for the revised pension.

iii Pensioners may be given the option of choosing whichever formulation is beneficial to them.

It is also decided by the 7th CPC to give breathing time to implement the first option and hence recommended :

10.1.68 It is recognised that the fixation of pension as per formulation in (i) above may take a little time since the records of each pensioner will have to be checked to ascertain the number of increments earned in the retiring level. It is therefore recommended that in the first instance the revised pension may be calculated as at (ii) above and the same may be paid as an interim measure. In the event calculation as per (i) above yields a higher amount the difference may be paid subsequently.

Here, the 7th CPC cited two cases as their illustrations for fixing the pension benefit as per their recommendations, calculating the benefit both on the basis of 2.57 and notional fixation, on the basis of basic pension fixed by 6th CPC

Case I

10.1.70 Pensioner ‘A’ retired at last pay drawn of ₹79,000 on 30 May, 2015 under the VI CPC regime, having drawn three increments in the scale ₹67,000 to 79,000: (as per the new matrix for the employees)

Basic pension as per 6th CPC was Rs 39500 for this 2.57 new pension is Rs 101515- This is one option

The other option is

That 67000 minimum correspondingly is enhanced to Rs 182200 as per the pay matrix recommended to the CG employees by the 7th CPC

Then this pensioner A had that 3 increments - adding that notionally this 182200 becomes 199100.

The new pension so arrived is 50 % of this notional pay- 99550

In this case 2.57 option is higher.

Case II

10.1.71 Pensioner 'B' retired at last pay drawn of ₹4,000 on 31 January, 1989 under the IV CPC regime, having drawn 9 increments in the pay scale of ₹3000-100-3500-125-4500:

He or she was in his 4th CPC Basic pension as Rs 1940.

This one was revised during 6th CPC as Rs 12543

As per option of 2.57 , the new pension recommended by 7th CPC is 32236

The other option is also given as per the recommendation. By this notional fixation option

Using the pay matrix to the level of 15600-39100, the corresponding new minimum for him is Rs 67700

This pensioner had with him the earned 9 increments and the notional fixation after having this 9 increments becomes Rs 88400

The new pension as per this option recommended by 7th CPC is Rs 44200

This one is higher than 2.57 option for this case of pensioner.

After accepting the recommendations of 7th CPC , GOI issued two OMs for Pre 2016 Past pensioners- one immediately on 4-8-2016 OM for 2.57 multiple and the other 12-5-2017 OM for notional corresponding fixation as that of the Pay matrix recommended to the employees that is for the future pensioners.

7th CPC improved the Modified Parity option (50 % of the minimum as recommended by 5th CPC and kept by 6th CPC also) to complete parity option, ofcourse notionally to the recommended pay scales and its stages. Both the Past and future pensioners fixation gone through the same Pay matrix- that option of parity was given to the pensioners, though some were not benefitted by that and used only 2.57 options.

I don't have figures with me, how many pensioners opted for 2.57 of Aug 4, 2016 OM and , how many benefitted by the OM of 12-5-2017.

Almost all the associations are standing for this option of parity.

In the case of BSNL absorbed pensioners some associations demanding CPC parity , demanded 2.57 equivalent benefit only in most of their letters and correspondences to the DOT. Some have gone court as they are also Pre 2016 pensioners , demanding to apply the OM 12-5-2017. This BSNL case is a separate story.

Let us see how the TOR of 8Th CPC is going to be constructed

The TOR of 6th CPC for the pension matter goes like this as stated in their report of March 2008

5.1.1 As per its Terms of Reference, this Commission is required to examine the principles that should govern the structure of pension, death-cum-retirement gratuity, family pension and other terminal or recurring benefits having financial implications for the present and former Central Government employees appointed before January 1, 2004.

The TOR for 7th CPC goes like this as stated in their report of NOV 2015

10.1.1 The term of reference of the Seventh CPC with regard to pension is as under: "To examine the principles which should govern the structure of pension and other retirement benefits, including revision of pension in the case of employees who have retired prior to the date of effect of these recommendations, keeping in view that retirement benefits of all Central Government employees appointed on and after 01.01.2004 are covered by the National Pension System (NPS)."

Let us hope, the Terms of ref for 8th CPC would also go in the similar lines only.

It is a long way to go to see the recommendations of 8th CPC

0730 hrs 30-3-2025 - R Pattabiraman

march 31

சாவர்க்கர்- அருண்ஷோரி 2

சாவர்க்கர் குறித்து அருண்ஷோரி எழுதி 2025 ஜனவரியில் வந்த நூலான The New Icon Savarkar And the Facts பற்றி ஓர் இடுகை செய்திருந்தேன். அந்நூலின் முதல் 4 இயல்களின் சாரத்தை நான் உணர்ந்த அளவில் தந்திருந்தேன்.

சாவர்க்கரிடம் எடுத்துக்கொள்ள வேண்டியதென்ன- அவரின் எடுத்துக்கொள்ளக்கூடாத 'கப்சாக்கள்'என்ன என்பதை, அருண்ஷோரி அவர் அறிந்துகொண்ட வகையில் இந்த இயல்களில் தந்திருப்பார்.

இப்போது அடுத்த இரு இயல்கள் பற்றி சிறிது சொல்லப் பார்க்கிறேன். ஒன்று 'புரட்சிக்காரர் எழுதுகிறார்', அடுத்தது ' புரட்சிக்காரர் வழி காண்கிறார்' என்பது- Revolutionary writes, Revolutionary sees the way.

இந்த 'புரட்சிக்காரர் வழி காண்கிறார்' என்கிற கட்டுரை, 'ஒரு புரட்சிக்காரர் செயல்படுகிறார்' என வேறு கட்டுரைகளும் இணைந்த பகுதியில் வைக்கப்பட்டுள்ளது. சரி. இந்த இரு இயல்களின் சாரத்தை நான் உள்வாங்கிய வகையில் வெளிப்படுத்த முயற்சிக்கிறேன்.

சாவர்க்கர் அந்தமான் கொட்டடியில் துன்பம் அனுபவித்தார். கொடும் சிறைவாசம். அங்கிருந்து வெளியேற 1911 முதல் தொடர்ந்து கருணை மனுக்கள் போட்டார். அவரின் உறவினர்களும் போட்டனர். பிரிட்டிஷ் அரசுக்கு நிபந்தனையற்று ஒத்துப்போகும் வாக்குறுதிகளை வழங்கி, பொறுப்புடன் ஒத்துழைக்க இணங்கினார். ரத்னகிரி மாவட்டம் தாண்டாமல், இந்துத்துவாவிற்கான சில செயல்ளை செய்து கொண்டிருந்தார் என்பதையெல்லாம் ஷோரிக்கு முன்னரே பலர் சொல்லிவிட்டனர். ஏ ஜி நூரணி போன்றவர் கடும் விமர்சனத்துடன் எழுதிவிட்டனர். பகத்சிங், திங்கராவுடன் ஒப்பிட்டும் பலர் எழுதியுள்ளனர். ஷோரியும் எழுதுகிறார்.

ஆனால் ஷோரி, 'உலகப் புரட்சிக்காரர்கள் எல்லாம்' சாவர்க்கர் திசை நோக்கியே கும்பிடுகின்றனர் என்பது போல் எழுந்த கதைகளை, விளாசித் தள்ளுகிறார். புரட்சிக்காரனாக 'எழுதோ எழுது என்று' ஏராளம் ஊருக்கு சொல்லிவிட்டு, சாவர்க்கர் வீழ்ந்த கதையை ஷோரி ஆதாரங்களைக் காட்டி எழுதுகிறார். எதற்கெடுத்தாலும் புரட்சி, ஆயுதம் ஏந்து எனச் சொல்லி, காந்தியின் அகிம்சையை படு மோசமாக

கேலி செய்த சாவர்க்கர், தான் ஊருக்கு சொன்னபடி நடந்து காட்டவேயில்லை என்பதை ஷோரி நிறுவப் பார்க்கிறார்.

கருணை மனுவை காந்தி சொன்னபடிதான் , சாவர்க்கர் போட்டார் என பழியை வேறு காந்தி மீது போடும் அவரது வழிபாட்டாளர் வாதங்களை திரைவிலக்கம் செய்கிறார் ஷோரி.

ஆயுதம், சாகசம், எதிரியின் உயிரை மாய்த்தப்பின் புரட்சியாளர் வீர மரணம் என - உரக்க உரக்க பேசிய சாவர்க்கர் எழுத்துக்களை, அவரது நூல்களிலிருந்து ஷோரி அடுக்குகிறார். எதிரி கொடூரனாக இருந்தால், புரட்சியாளன் படு கொடூரனாக மாறு. எதிரி ஏமாற்றுக்காரனாக இருந்தால், புரட்சியாளன் அவனை விஞ்சக்கூடிய ஏமாற்றுக்காரனாக இரு என்பதே ' ரூல்' என்றவர் சாவர்க்கர்.

To a brute we have to be super brute, to a cheat we have to be super cheat. வெறுப்பு உள்ள எந்த மனமும் சிக்கென இந்த உபதேசத்தை பிடித்துக்கொள்ளும்.

நீ சிங்கமாக இருப்பதா, எலியாக இருப்பதா என்பதை - தேசத்திற்கு எப்படி தொண்டு செய்யப்போகிறாய் என்பதில் உரசிப்பார்த்து முடிவெடு. அகிம்சை எனச் சொல்லி, தியாகம் எனச் சொல்லி, அசடு போல சிறை முகாம் சித்திரவதை அனுபவிக்காதே. பதுங்கி இருந்து கூட நாட்டுக்கு வேலை பார் போன்ற உபதேச மொழிகள் சாவர்க்கரிடம் கிடைப்பதாக ஷோரி அவரின் எழுத்துக்களை கோர்த்து தருகிறார்.

உனது இலக்கில் நீ சுத்த தங்கமாக இருந்தால், நீ செய்வது அனைத்துமே தர்மமே என்பதை அவர் 'தங்க விதியாக (golden rule)' ஆக்கினார் என்கிறார் ஷோரி. 'புரட்சி புரட்சி என' அவர் பிள்ளை விளையாட்டையே செய்ததாக ஷோரி மதிப்பிடுகிறார்.

சிவாஜியின் 'டாக்டிக்ஸ்' என - 'பாய்வதா- பதுங்குவதா' (சிங்கமாக இருக்க வேண்டிய கட்டம்- எலியாக 'பதுஷாக' பவ்வியமாக நிற்க வேண்டிய கட்டம்) பற்றி சாவர்க்கர் புரட்சியாளர்களுக்கு பாடமெடுக்கிறார். இங்கு அருண்ஷோரி கொடுக்கும் வரி ஒன்றை தருகிறேன்

Drawing Moral Savarkar wants to stress " Being like a rat was valour, at that time to roar like a lion would have been the height of foolishness.

சாவர்க்கர், தான் 'மெர்சி பெட்டிஷன்' போட்டு வந்ததை நியாயப்படுத்தவே, இப்படியெல்லாம் தந்திர உபாயங்களை எழுதி பொதுமைப்படுத்தி , தனக்குத்தானே ஆறுதல்

சொல்லிக்கொள்கிறாரோ என ஷோரி சந்தேகப்படுவதை இந்த இயலில் பார்க்க முடிகிறது. அப்புறம் என்ன எதற்கு 'வீர் சாவர்க்கர்' பட்டமெல்லாம் என ஷோரி வினவுவதாக நான் எடுத்துக்கொள்கிறேன்.

நான்கு முக்கியமான கேள்விகளை அருண்ஷோரி எழுப்புகிறார். அவற்றின் தீவிரம் கருதி, வரிகளை அப்படியே தருகிறேன். நான்காவது கேள்வியை சற்று கவனமாக பார்த்தால் தெரியும், அருண் ஷோரி சாவர்க்கரின் சாமர்த்தியம் என்ன எனச் சொல்ல வருவதை..

Should one be deemed to be a 'revolutionary' just because one believes and write essays asserting an objective of getting Independence?

Independence can be achieved only by violence- is that the only way?

If large scale violence is not possible, then the only way is assassination?

Then, be careful not to undertake such task oneself, and exhorts others to carry out assassinations?

இந்த நான்கு கேள்விகளில் சாவர்க்கரை அளந்து தந்துவிடுகிறார் ஷோரி. சாவர்க்கருக்கு மட்டுமல்ல, வேறு எவருக்குமான கேள்விகளும் கூட இவை.

இன்னொரு கேலியை ஷோரி செய்கிறார். புரட்சிக்காரர் எவருக்கும் உள்ள மிக முக்கிய 'traits mark' - அவர்களுக்கு மட்டுமே எப்போதும் 'what is going to happen' - so plan it' என்பது தெரியும். வரப்போவதைப் பற்றி அவர்கள் துல்லியமாக கணிப்பவர்கள் என்கிற நம்பிக்கையுடன், திட்டமிடவும் அவர்களுக்கு தெரிந்திருக்கும். அதனால் தான் இரண்டாம் உலகப்போர், நேதாஜி படை பற்றியெல்லாம் சாவர்க்கரால் முன் கூட்டியே சொல்லமுடிந்தது என படு கிண்டலை ஷோரி செய்கிறார்.

மஜூம்தார் போன்ற வரலாற்றாய்வாளர் எல்லாம் எப்படித்தான் சாவர்க்கரை 'இந்தியாவின் பெரும் புரட்சிக்காரர் ' என வர்ணித்தாரோ தெரியவில்லை. நீங்கள் இந்த வழிபாட்டாளர்கள் சொன்னதையெல்லாம் அல்லது மூல விக்கிரகத்தை கேள்விக்கு உட்படுத்தினால் உங்களை தேசத்துரோகிகள், இந்துத்துவ விரோதிகள் என்பார்கள், ஜாக்கிரதை என அந்த இயலை முடிக்கிறார் ஷோரி. இது சாவர்க்கருக்கு மட்டுமல்ல, எவரெல்லாம் பீடாதிபதியோ - அதிகார இறையோ- அவரை கேள்வி கேட்டால் வரும் எதிர்வினைகள் தான்.

'புரட்சிக்காரர் வழி காண்கிறார்' இயலில் மூஞ்சே இத்தாலி பாசிஸ்ட் முசோலினியை சந்தித்தது, சாவர்க்கர் இந்து மகாசபாவின் தலைவராக ஆற்றிய முக்கிய உரை ஒன்றின் சாரத்தை ஷோரி

விளக்குகிறார். இரண்டாம் உலகப்போர் நேரத்தில், சாவர்க்கர் நேருவை கிண்டல் செய்தார். ஜெர்மனிக்கு வேண்டியது என்ன என்பதை நேருவை விட ஹிட்லருக்கு நன்றாகத் தெரியாதா? நம்ம நாட்டிற்கு என்ன அரசாங்கம், அதற்கு நாம் செய்ய வேண்டியதை பேசு என்றார்.

போல்ஷ்விசம் ருஷ்யாவிற்கு உகந்தது என்றால், நாசிசம் ஜெர்மனிக்கு, பாசிசம் இத்தாலிக்கு என அவரவர் சோதனையை அவரவர் செய்யட்டும். நாம் யார் அவர்களை விமர்சிக்க என்கிற கேள்வியை அவர் எழுப்பினார். இங்கிலாந்து நம்மை அடிமையாக வைத்திருப்பதில் மனசாட்சி பார்க்காமல், ஹிட்லரைப் பார்த்து 'ஜனநாயகத்திற்கு நீ ஆபத்து' எனச் சொல்லும் அபத்தத்தை ஏற்க முடியாதென்றார் சாவர்க்கர். என்னைப் பொறுத்து இந்தியாவிற்கு எவர் உதவ முன் வந்தாலும், அவர் என் நண்பர் என வெளிப்படையாக ஹிட்லர் ஆதரவை சாவர்க்கர் முன் வைக்கும் எழுத்துக்களை ஷோரி எடுத்து தருகிறார்.

சாவர்க்கர் கல்கத்தாவில் 'உண்மையான அரசியல்' என பிப் 20, 1939ல் ஆற்றிய சொற்பொழிவில் உதிர்த்த சில வரிகள்

" There is no such thing as morality in relations between countries. Words like truth, non violence may be nice to ear, but they are utterly useless in determining foreign policy.. Morality is found only in text books. It does not exist in international relations."
அப்புறம் உரையில் வரக்கூடிய கிண்டல் கேலியைப் பாருங்கள்

We must remember that Hitler is not a Gandhi who constantly pleads for Hindu Muslim unity.." எங்கே கொண்டுவந்து இணைக்கிறார் பாருங்கள். இந்து முஸ்லிம் ஒற்றுமை எனப் பேசுவதை எவ்வளவு எள்ளலுக்கு உள்ளாக்குகிறார்.

நன்னெறி என எழுதி வேண்டுமானால் வைத்துக்கொள். நடைமுறைக்கு ஒத்துவராது. யார் உங்கள் இங்கிலாந்திற்கு நன்னெறி போதிப்பார்கள்- பிரான்சா, அமெரிக்காவா . இவர்கள் எவ்வளவு ஏமாற்றுக்காரர்கள் எனத் தெரியாதா? போன்ற காந்தி மீதான தாக்குதல்களை சாவர்க்கர் தந்தார்.

ஜூலை 1939 ல் ஆர் எஸ் எஸ் அமர்வு ஒன்றில் சாவர்க்கர் பேசியதாக அருண்ஷோரி குறிப்பிடும் வரிகள்

..in effect that Hedgewar is doing in India what Hitler has accomplished in Germany..

Whatever be the view of persons belonging to different political factions about nationality, it is my firm belief that Hindustan is of the Hindus. It is on this very feeling

of nationhood Sangh is working. That its work should succeed fully and the longing of Bharat should fructify- this must be thought of everyone “

நாட்டை இத்திசை நோக்கி அவர்கள் அழைத்துச் செல்லத் தொடங்கி ஆண்டுகள் ஆகிவிட்டன.

அருண்ஷோரி மேலும் சாவர்க்கர் மாயை தகர்ப்பில் வேறு என்ன திரை விலக்கம் செய்கிறார் என வாய்ப்புள்ளபோது எழுத உத்தேசம். பார்க்கலாம்

31-3-2025